4-18

இலண்டன்

# சுடரொளி


CHUDEROLI JULY - AUGUST ஆடி - ஆவணி 2007



தவத்திரு
தனிநாயகம் அடிகளார்



அருள் செல்வர்
அப்னா நாகப்பன்



தவயோகி
தங்கராச அடிகளார்


## இலண்டனில்
## 10 ஆவது
## சைவ மாநாடு
## 14-15 யூலை 2007.



75 ஆவது வயதில்
பேராசிரியர் கா.சிவத்தம்பி

## மலேசியாவில்
## உலகத் தமிழ்ப்
## பண்பாட்டு இயக்கத்தின்
## 10 ஆவது மாநாடு
## 20-22 யூலை 2007.

£1.00/இலங்கை ரூ. 35.00/RM 4



விபுலானந்த
அடிகளார்



கிருபானந்த
வாரியார்



ஓமனா
கங்காதரன்


GABMAN SOLICITORS
Legal Advisors & Commissioners for Oath
SPECIALIST IN
International Law
Human Rights | International Arbitration | War Crimes (Defence)
UK Law
Asylum | Citizenship | Civil Litigation | Company Formation
Family (Divorce) | Judicial Review | Wills & Probate | Work Permit
European Union Law
Employment | Immigration | Family Re-Union | Residence Permit
Irish Law
Crime Defence | Housing | Immigration |
Matrimonial (Divorce) | Nationality
434, High Street, East Ham, London E12 6RH
Branch: 4 Upper Mount Street, Dublin 2
Email: gabmansolicitor@aol.com
Tel: 087 0850 3347, Fax: 020 8821 9444
Mob: 07852 149 672

இலண்டன்
# சுடரொளி
# CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்

சுடர் 4 ஒளி 18 ஆடி - ஆவணி 2007

கௌரவ ஆசிரியர் :
திரு. சி. சரவணபவன் (சிற்பி), M.A.,
பிரதம ஆசிரியர் :
திரு. ஐ.தி. சம்பந்தன்
சிரேட்ட ஆலோசகர்கள் :
திரு. பொன் பாலசுந்தரம்
திரு. என். செல்வராஜா (நூலகவியலாளர்)
ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :
திரு. மயில் மனோகரன்
திரு. எஸ். கருணானந்தராசா
திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்
நிர்வாகம் :
திருமதி. செல்வதி சம்பந்தன், B.A.(Hons)
வடிவமைப்பு :
உலகத் தமிழர் பதிப்பகம்
கணினி :
திருமதி. சரோஜா இலட்சுமணன்
வெளியீடு :
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ
United Kingdom
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com
தமிழகப் பிரதிநிதி :
திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com
utpmathi@yahoo.co.in
இலங்கைப் பிரதிநிதி :
திரு. V. தருமலிங்கம்
மலேசிய தொடர்பாளர்
திரு. இராஜசிங்கம், Tel : 017-3793997;
E-mail : Pooganesvari.Arumugan.nielsen.com

| Subscription | | Annual | Life |
|---|---|---|---|
| UK | : | £ 12 | 120 |
| Europe | : | £ 15 | 150 |
| India | : | Rs. 200 | 2000 |
| Sri Lanka | : | Rs. 300 | 3000 |
| Malaysia | : | RM 30 | 300 |
| Other countries | : | £ 20 | 200 |

படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு

இந்த இதழில்

1. எமது நோக்கு - ஈழப் போராட்டம் சட்டநிபுணத்துவக் குழு 3
2. தமிழ் தந்த தாதாக்கள் 5
3. ஈழத்து நாடகமேதை வைரமுத்து 9
4. ஈழத்தில் ஒரு தாய் - *பேராசிரியர் கோபன் மகாதேவா* 12
5. பவள விழா நாயகன் - பேராசிரியர் கா. சிவத்தம்பி 14
6. ஈழத்து வரலாற்று மங்கையர் - *தமிழரசி* 19
7. லயஞான குபேர பூபதி தட்சிணாமூர்த்தி- *சிவசுப்பிரமணியம்* 21
8. சிந்திக்க வைத்த சித்தர் நெறி மாநாடு - *ஐ.தி. சம்பந்தன்* 23
9. தியாகம் - சிறுகதை - *சி. வைத்திலிங்கம்* 30
10. தமிழ் சினிமாவின் வரலாறு - *செல்வராசா* 32
11. ஆயிரம் காலத்துப் பயிரை ஆற்றுப்படுத்தும் அமுதன் 37
12. வெற்றிக்கான சில வழிகள் - *சிவவதனி பிரபாகரன்* 40
13. போனஸ் - சிறுகதை - *தாரா* 43
14. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!- *சோம. வள்ளியப்பன்* 46
15. நல்லதைக் காண்போமே! - *தி.க. சந்திரசேகரன்* 52

## தவத்திரு விபுலாநந்த அடிகள்



ஈழநாட்டின் கிழக்கு மாகாணத்திலே மட்டக் களப்புக்குத் தென்திசையிலுள்ள காரைத்தீவில் (காரேறு மூதூர்) வாழ்ந்த வேளாண் செல்வராகிய சாமி தம்பி யாருக்கும், கண்ணம்மையாருக்கும் தவப்புதல்வராக 27-3-1892இல் விபுலாநந்தர் பிறந்தார்.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெரும் புலமையும், இலத்தீன், மலையாளம், சிங்களம் முதலிய மொழிகளின் அறிவும் பெற்றிருந்தார். பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞான டிப்ளோமாப் பட்டதாரியாகவும், தமிழ்ப் பண்டிதராகவும் B.Sc., (இலண்டன்) பட்டதாரியாகவும் விளங்கினார்.

ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய இவர் 1922இல் துறவு பூண்டார். 1924ஆம் ஆண்டு விபுலாநந்தர் என்ற பெயரையும் பெற்றார். அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

விபுலாநந்தர் எழுதிய நூற்றுக்கணக்கான கட்டுரைகள் கலைமகள், செந்தமிழ்ச் செல்வி போன்ற பல சஞ்சிகைகளில் வெளி வந்தன. அவரின் கட்டுரைகள் 'விபுலாநந்த ஆராய்வுகள்', 'விபுலா நந்த அமுதம்' போன்ற நூல்களாக வெளிவந்தன.

பல பிறமொழி நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தும் உள்ளார். எடுத்துக்காட்டாக ஜூலிய சீசர் நாடகத்தில்

''அஞ்சினார்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவர்க்கு ஒரு மரணம்''

என்ற அவரது மொழிபெயர்ப்பு, மொழி ஆற்றலை வெளிப்படுத்து கின்றது. யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் நூலை அவர் ஆக்கி அளித்தமை மிகவுயர்ந்த தமிழ்த் தொண்டாகும். இந்நூல் தமிழகத்தில் 5-7-1947 இல் வெளியிடப்பட்டது.

19-7-1947 இல் ஈழத்தில் இவர் இறைவனடி சேர்ந்தார்.

சிந்தனைப் பகுதி

# பெய்யெனப் பெய்யும் மழை

- சி. மாசிலாமணி

வள்ளுவரின் புலமை கண்டு வியக்காதவர் எவரும் இலர். ஆனால் அவர் அவற்றை எல்லாம் கடந்து மானிடத்தின் உச்ச நிலையைத் தாண்டிய பெருந்தகை. தமிழ் அவரால் வான்புகழ் பெற்றது என்ற சொற்கள்தாம் ஞாபகத்திற்கு வருகின்றது. அவர் தொட்ட துறைகளைப் படித்த துறைசார் வல்லுநர்களே வியக்கின்றனர். அமைச்சு, இறைமாட்சி, உழவு, கல்வி, புகழ், படை மாட்சி, புலவி என்று தம் 133 அதிகாரங் களுள்ளும் உலக வாழ்வையே உள்ளடக்கிவிட்டார்.

மருத்துவர், மருந்து, நோயாளி, உரிய முறையில் மருந்தைக் கொடுப்பவர் ஆகிய நான்கும் அடங்கியதே மருத்துவத் துறை, நோயை அறிந்து, அதன் காரணத்தை அறிந்து, அது தீர்க்கும் வழியை அறிந்து, அதைத் தவ றில்லாமற் செய்பவரே மருத்துவர். நோயாளியின் வயது, நோயின் தீவிரம், சிகிச்சைக்கு உகந்த நேரம் ஆகியவை கொண்டதே மருத்துவம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவத் துறைக்கு இலக் கணம் வகுத்தவர் வள்ளுவர் என்று அன்பழகன் என்னும் மருத்துவக் கலாநிதிப் பேராசிரியர் மருந்து என்னும் அதிகாரம் பற்றிக் கூறுகிறார்.

இரண்டு அடிகளுள் அடக்கப்பட்டுள்ள கருத் தாழம் கண்டு நான் வியப்பதுண்டு. எடுத்துக்காட்டுக்கு, 'ஏன் ஐயா சடை வளர்த்து அல்லது முடியை வழித்து வித்தியாசம் காட்டுகிறீர்கள்? உலகம் ஒழுங்கற்றதாகக் கணிப்பவற்றைக் கைவிடுங்கள்' என்றுணர்த்த ''மழித்த லும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்'' என்று எளிய முறையில் கூறிய அழகை என்ன வென்று சொல்வது. காயும் பழமும் அருகருகே இருக்கின்றன. அதுபோல் இனிய சொற்களும் கசப்பான சொற்களும் பக்கத்தில் பக்கத்தில் இருக்கின்றன. பழத் தைத் தவிர்த்துக் காயைப் பறித்தல் போன்றதே கசப்பு வார்த்தைகளை உபயோகிப்பது. அடுத்த குறளை எமது அனுபவத்தைக் கொண்டு சொல்வதானால், துவக்குடன் நிற்கும் படை வீரனின் கசப்பான பகிடிகளைக் கேட்டுப் பதில் கூறப் பயப்படும் எம் நிலையைச் சிந்திப்போ மானால் எம்மில் மெலியார்மேல் சண்டித்தனம் காட்ட மாட்டோம்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார். இதற்குள் நீந்துவர் என்று ஒரு சொல்லை மட்டும் சேர்த்து, இறைவனடி சேர்ந்தவர்கள் நீந்து வார்கள், சேராதவர்கள் நீந்தமாட்டார்கள் என்று தான் சொல்ல வந்தப் பொருளின் முழு விளக்கத்தையும் தந்து விட்டாரே. அடுத்து மழையைப் பற்றி எவ்வளவு அழகாகச் சொல்லுகிறார். உண்போருக்கு உண்ணும் உணவை ஆக்கி அவர்கள் உண்ணும் உணவாக உள்ளதும் மழை. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை.

சில இடங்களில் கடும் சொற்களை உபயோகிக் கின்றார். தேவை பார்த்து உதவாதவன் செத்தாருள் வைக்கப்படுவான் என்றார். அன்பின் வழியது இல்லார் என்புதோல் போர்த்த உடம்பு என்றார். விலை மகளிரைத் தழுவுவதை இருட்டறையில் பிணத்தைத் தழுவுவதற்கு ஒப்பிட்டார். பயனில்லாத சொற்களைப் பாராட்டுவானைப் பதர் என்கிறார். கல்லாதோர் முகத்தில் உள்ள கண்களைப் புண் என்று கூறிவிட்டார். இது மிகவும் கடுமை கூடிய சொல். இதை எல்லை கடந்த சொல் என்று கூடச் சில சமயங்களில் நான் எண்ணுவது உண்டு.

புலால் மறுத்தல் அதிகாரத்தைக் கற்க நான் தயங்குவதுண்டு. கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்ற குறளுக்கமைய நடக்க முடியுமோ என்ற அச்சம் தான் அதற்கான காரணம்.

அறிவியலில் சற்று கீழ் நிலையில் உள்ள என் போன்றோர் குறள் பற்றிப் பெரிதாக விமர்சிப்பது சற்றுக் கடினம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடை முறையில் இருந்த நிலப் பிரபுத்துவ மன்னர் ஆட்சியும் ஆண் ஆதிக்கமும் வள்ளுவர் வெண்பாக்களில் செல் வாக்குச் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவற்றின் செல்வாக்குச் சிறிதளவே உண்டு. இது வள்ளுவரின் தொலை நோக்குத் தன்மையையே காட்டுகிறது. அத னாற்றான் வள்ளுவரின் சில வெண்பாக்களுக்குத் தவறான அர்த்தம் கற்பிக்கிறார்களோ என்று சந்தேகம் எழுகின்றது. தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை. நான் வாசித்த உரைகளில் எல்லாம், அவர் கற்புடையாராம். அவர் கணவனை வணங்குவாராம். அவருக்கு மழையை வரச் சொல்லும் சக்தி உண்டாகுமாம். இப்படியான அர்த்தத் தில்தான் வள்ளுவர் அக்குறளைப் பாடியுள்ளாரா என்ற சந்தேகம் வருவதில் தவறில்லைதானே. விவசாயத் துறையுடன் சம்பந்தம் உடைய எனக்கு, நீர் இல்லாது பயிர்கள் வாடும்போது நாளாந்தம் வானை அண்ணாந்து காத்திருக்கும் நாள்களில் அண்ணாந்து பார்த்திருந்த எம் மனங்களையும் பயிர்களையும் குளிர வைக்கப் பொழியும் மழையைத்தான் பெய்யெனப் பெய்யும் மழையாக வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது. கணவனைப் பொறுத்தமட்டில் நிச்சயம் அப்படிப் பணிவானவர் பெய்யெனப் பெய்யும் மழையா கலாம். ஆம். உலகுக்கு? எடுத்துக்காட்டுக்கு ஈழத்தின் இன்றைய காலகட்டத்தைப் பயன்படுத்திப் பிழைப்பு நடத்தும் பல வெற்றித் திருமகன்கள் உருவாகி உள்ளார் கள். அப்படியான ஒரு திருமகனின் மனைவி கண வனுக்குப் பக்கபலமாக இருப்பதன் மூலம் தீமை அல்லவோ செய்கின்றாள். அந்த நாள் என்னும் தமிழ்ப் படத்தில் நாட்டைக் காட்டிக் கொடுக்க முற்படும் கணவனை மனைவி வணங்கவில்லை. துப்பாக்கிக் குண்டைத்தான் பரிசாகக் கொடுக்கிறாள். அவள் கற்பு எப்படிப்பட்டது? ✱

# எமது நோக்கு

## ஈழப் போராட்டம் – சர்வதேச சட்டநிபுணத்துவக் குழு

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்கள அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், இனச் சுத்திகரிப்பு, தமிழர் பகுதியில் திட்ட மிட்ட குடியேற்றம், தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களின் பெயர் மாற்றங்கள் போன்ற பல அடிப்படை உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரித்தானியா இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் போது ஜனநாயகம் என்ற போர்வையில் பெரும்பான்மைச் சிங்களவர் ஆட்சி செலுத்தக்கூடிய ஒற்றை ஆட்சிமுறையை வழங்கியது. அதனால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்கள அரசு பெரும்பான்மைப் பலத்துடன் தமிழர்களுக்கெதிராக அவர்களை அடக்கி ஒழிப்பதற்கான பல சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. தமிழர்களுக்குப் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்திய இந்திய பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டம், சிங்களம் மட்டும் சட்டம், புதிய குடி அரசியல் சட்டங்கள், 29ஆவது சரத்தை இலங்கை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கியமை போன்றவை குறிப்பிடத்தக்க சட்டங்களாகும்.

பிரித்தானியா சுதந்திரம் வழங்குவதற்கு முன் அமைக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு முன் சட்ட மேதை ஜீ.ஜீ. பொன்னம்பலம் 50க்கு 50 என்ற சமபலத்தை முன்வைத்து சுமார் 7 மணித்தியாலம் நிகழ்த்திய உரை சட்டவலுவுள்ள உரையாகும். அக்கோரிக்கையை சோல்பரி ஆணைக்குழு ஏற்காது விடினும் அதில் எடுத்துக் கூறப்பட்ட காரணங்கள் இன்று எமக்குப் பயனுள்ளவை. அதேபோன்று தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கோடீஸ்வரன் நீதிமன்ற வழக்கு, வரலாற்று ஆவணங்களாகப் பதியப்பட்டன. சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சுதந்திர இலங்கை அரசியல் சட்டத்தில் புகுத்தப்பட்ட 29ஆவது சரத்தின் பயன்பாடு பற்றி கோடீஸ்வரன் வழக்கில் எடுத்துக் கூறப்பட்டது.

1972 இல் சிறீமாவோ பண்டார நாயக்கா அரசினால் கொண்டுவரப்பட்ட புதிய குடியரசியல் சட்டத்தில் 29 ஆவது சரத்து நீக்கப்பட்டுவிட்டது. இந்தச் சரத்து சிங்களவர்களின் பெரும்பான்மை வாக்குப் பலத்தால் நீக்கப்பட்டதை எதிர்த்து தமிழ்ச் சட்ட வல்லுநர்கள் பொருத்தமான நீதிமன்றத்தில் அன்று வழக்குத் தாக்கல் செய்யாதது ஏன்? அவ்வாறு ஒரு வழக்கு அன்று இடம் பெற்றிருந்தால் பிரித்தானிய அரசு விட்ட தவறை உணர வைத்திருக்கலாம்.

இந்தக் குடியரசியல் சட்டத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தீவிரமாக எதிர்த்ததோடு தீயிட்டு எரித்தனர். அந்த எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திய தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட முக்கியமானவர்கள் கைது செய்து சிறைப் படுத்தப்பட்டனர். அதையொட்டி நடைபெற்ற ரயல் அட்பார் வழக்கில் சட்டவல்லுநர்களான திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம், கி.யூ.சி. திரு. திருச்செல்வம் கி.யூ.சி போன்ற 22 சட்டத்தரணிகள் இவ்வழக்கில் வாதிட்டனர். அவர்களது சட்டவாதத் திறமையால் அரசாங்கம் அவ்வழக்கை திரும்பப் பெற்றது. இது சட்டத்திறனால் ஈட்டிய சாதனை.

1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி மாநாட்டின் போது அரச படைகளின் நடவடிக்கையால் உயிர்நீத்த 9 பேர் தொடர்பாக விசாரணையை நடத்துமாறு தமிழ் மக்கள் கோரியபோது அரசு மறுத்து விட்டது. இச்சம்பவத்திற்கு சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்தி அரசு இழைத்த அநீதியை உலகிற்கு எடுத்துக்காட்டவேண்டுமென்று தமிழ் மக்கள் தீர்மானித்தனர். இளைப்பாறிய நீதிபதி திரு. கிறேசர் தலைமையில் அமைக்கப்பட்ட சுதந்திர விசாரணைக் குழு வெளியிட்ட தீர்ப்பு சர்வதேச சமூகத்தை விழிப்படைய வைத்தது. அத்தீர்ப்புகள் இன்று பயனுள்ள சான்றுகளாக பேணப்படுகிறது.

1977 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கொடுத்த நெருக்கடியால் ஜே.ஆர். அரசாங்கம் ஆவணி இனக்கலவரத்தை விசாரிப்பதற்கு சன்சோனி ஆணைக் குழுவை நியமித்தது. 200க்கு மேற்பட்ட தமிழர் சாட்சியம் அளித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர், மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலதரப்பினர் வரலாற்றுச் சான்றுகளுடன் சாட்சியம் அளித்தனர். சுமார் 22க்கு மேற்பட்ட தமிழ்ச் சட்ட வல்லுநர்கள் ஆசராகி சாட்சிகளை நெறிப் படுத்தினர். தமிழர் பக்கம் நியாயமிருப்பதை ஆதாரபூர்வமாக அறிந்து கொண்ட நீதிபதி சன்சோனி அரசாங்கத்திற்குச் சாதகமற்ற முறையில் தீர்ப்பு வழங்கப்போகிறார் என்பதை அறிந்த பிரதமர் ஜே.ஆர். நீதிபதி சன்சோனி அவர்களை அழைத்து அறிவுரை கொடுத்தார். அதனால் தமிழர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்காவிட்டாலும் பதியப்பட்ட ஆவணச் சான்றுகள் வடகிழக்கு தமிழர் தாயகம் என்பதை உறுதிப்படுத்தியது. அதை நன்கு அறிந்திருந்த ஜே.ஆர். 1997 இல் ஏற்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வடகிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்க வேண்டியதாயிற்று. இத்தகைய விசாரணைகளின்போது சட்ட வல்லுநர்கள் சமர்ப்பிக்கும் ஆவணச் சான்றுகள் தமிழீழக் கோரிக்கையை வற்புறுத்துவதற்கும் சர்வதேச சமூகத்திற்கு விளக்கமளிப்பதற்கும் பயன்பாடாக அமைகின்றன.

1952 ஆம் ஆண்டு தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. அல்பிறட் தம்பையா அவர்களை எதிர்த்து காரை நகரைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி திரு. ஏ.வி. குல சிங்கம் போட்டியிட்டார். அவர் அத்தேர்தலில் தோல்வி யடைந்தார். தேர்தல் சட்டத்தை நன்கு படித்த சட்டத் தரணி திரு. குலசிங்கம் தேர்தல் வழக்கொன்றை நீதி மன்றத்தில் தாக்கல் செய்து தானே வழக்கை வாதிட்டு நடத்தினார். தேர்தல் சட்டப்படி திரு. அல்பிறட் தம்மை யாவின் வெற்றி செல்லுபடியாகாது என தீர்ப்பளிக்கப் பட்டது. அத்தீர்ப்பால் ஐ.தே. கட்சியில் போட்டியிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களும் பாதிக்கப்பட்டனர். அதை உணர்ந்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா உடனடி யாகத் தேர்தல் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்து தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியை இழக் காமல் பாதுகாத்தார். ஆனாலும் சட்டத்தரணி திரு. குல சிங்கம் அவர்களின் சட்டத்திறனால் ஒற்றை ஆட்சியில் சிங்களவர்களின் பெரும்பான்மை இருக்கும்வரை சிறு பான்மை இனம் நியாயம் பெற முடியாது என்பது நிரூபணமாகியது.

மேற்கூறிய நிகழ்வுகளில் தமிழ்ச் சட்டவல்லுநர் கள் காட்டிய சட்டத்திறனை சர்வதேசச் சட்ட வல்லுநர் கள் பாராட்டியதையும் நாம் மறக்க முடியாது.

இன்று சர்வதேச சமூகம் கடுமையாகக் கண்டிக் கும் பாரிய மனித உரிமை மீறல்களை இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. வல்லமை படைத்த தமிழ்ச் சட்டத்தரணிகள் இன்று புலம் பெயர் நாடுகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரித்தானியாவில் பலம்வாய்ந்த சட்டதரணிகள் சங்கம் பல வருடங்களாக இயங்குகிறது. அவர்கள் நினைத்தால் ஒரு சர்வதேச சட்ட வல்லுநர் குழுவை அமைத்து சட்டம் மூலம் சர்வ தேசப் பிரசாரத்தை மேற்கொண்டால் சர்வதேச சமூகத் திற்கு அழுத்தம் கொடுக்கலாம். இலங்கையில் நடை பெறும் பாரிய மனித உரிமை மீறலை சர்வதேச சட்ட வல்லுநர் குழு ஊடாக அம்பலப்படுத்தினால் அதற்கு ஒரு வலுவுண்டு.

இதுவரையும் புலம்பெயர் நாடுகளில் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஊர்வலங்களையும் ஆர்ப்பாட் டங்களையும் நடத்தி வந்தனர். இலங்கையில் நடை பெறும் தமிழ் மக்களின் போராட்டத்தைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்த இது அவசியமாகவிருந் தது. ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற சில நாடுகளில் திட்டமிட்டுச் சிறந்த முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் களை நடத்தி அந்நாட்டு அரசுகளின் கவனத்தை ஈர்க்க வைத்துள்ளனர்.

ஆனால் பிரித்தானியா போன்ற நாடுகளில் அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் திட்டமிடாதவையாகக் கருதப்படு கின்றன. சிலர் வன்னியைத் திருப்திபடுத்துவதற்காக நடத்துவதுபோல் தென்படுகிறது. புலம் பெயர் தமிழ் மக்களின் நடவடிக்கைகள் எவரையும் திருப்திபடுத்து வதற்காக அமையக்கூடாது. அது யதார்த்தமாக இருக்க வேண்டும்.

1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து நடை பெற்ற ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் மிகப் பிரமாதமாக அமைந்தன. அன்று எல்லா மக்களையும் இணைக்கக்கூடிய அமைப்பு செயற்பாட்டிலிருந்தது. அன்று இவற்றை முன்னின்று நடத்திய பலரும் பிரச் சாரத்தில் ஈடுபட்ட பலரும் இன்று முன்னணியில் இல்லை. பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும்.

இன்று சிங்கள அரசு தமிழர்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்வதையும், மனித உரிமை மீறல்களை யும் சர்வதேச அரசுகள் கடுமையாகக் கண்டிக்கக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. இதைப் புலம்பெயர் தமிழர் கள் சரியான அணுகுமுறையில் பயன்படுத்தி நடை பெறும் தமிழீழப் போராட்டத்தை நியாயப்படுத்த அரிய சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்திருக்கிறது. கொழும்பில் தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதை சட்ட ரீதியாக நீதிமன்ற வழக்கைத் தாக்கல் செய்து சட்ட வலுவுடன் வாதிட்டதால் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அந்த உத்தரவுக்கு அதிகாரம் மிக்க ஜனாதிபதி கூட கட்டுப்பட வேண்டியதாயிற்று. அதற்கும் மேலாக அரசாங்கம் மன்னிப்புக் கோரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்நிகழ்வு தமிழர் தாயகம் வடகிழக்கு என்பதையும் உறுதி செய்கிறது. எமது இன்றைய நடவடிக்கைகள் சட்டரீதியாக அமையுமே யானால் சர்வதேசச் சமூகத்தை நன்கு சிந்திக்க வைக்கலாம்.

எனவே இவ்வாறு நாம் காலத்தைக் கடத்தாது, போராட்டம் உச்சகட்டத்தை அடைந்த நிலையில் சட்ட ரீதியாக எமது பிரசாரத்தை முன்னெடுத்து சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்க 'சர்வதேசச் சட்ட வல்லுநர் குழு' அமைக்கப்பட வேண்டியது அவசிய மாகும். பிரித்தானியாவில் இயங்கும் சட்டத்தரணிகள் சங்கம் இத்தகைய குழுவை அமைத்து துரிதமாகச் செயற்படுத்த அந்த அமைப்புக்குத் தகுதியும் வளமும் உண்டு. அவர்கள் விரைந்து செயற்பட வேண்டு மென்பதே புலம்பெயர் தமிழர்களின் வேணவா. ❋



## சமயத் தொண்டர்
## டத்தோ. ச. பழனிவேலு
## மறைவு

மலேசிய இந்திய காங் கிரஸ் தேசியத் தலைவரும் பொதுப் பணி அமைச்சருமான மாண்புமிகு டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு அவர்களின் அன்புச் சகோதரரும், கம்போங் காசிப் பிள்ளை மகா காளியம்மன் ஆலயம் மற்றும் அம்பாங் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலய அறங்காவலரும், சமயத் தொண்டருமான மதிப்புமிகு டத்தோ. ச. பழனிவேலு அவர்களின் மறைவு மலேசியத் தமிழ் மக்களுக்குப் பெரும் இழப்பு. அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக் கும் சுடரொளி வெளியீட்டுக் கழகம் ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய

# தமிழ் தந்த தாதாக்கள்

## காவியம் தந்த காரைநகர்ப் புலவர்

தமிழிலக்கியப் பரப்பில் காப்பியங்கள் எனவும் காவியங்கள் எனவும் வழங்கும் பிரபந்த இலக்கியப் பகுதியும் ஒன்று. பழைய காலத்துப் பெருங் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாம். இவற்றை விடச் சிறுகாப்பியங்கள் ஐந்தும் தமிழில் எழுந்துள்ளன. அவை சூளாமணி, யசோதரகாவியம், உதயணன்கதை, நீலகேசி, நாககுமார காவியம் என்பனவாம். இவற்றில் சூளாமணியை அரிதின் முயன்று ஆராய்ந்து முதலிற் பதிப்பித்த பெருமை யாழ்ப்பாணத்துத் தமிழ்த்தாதா தாமோதரம் பிள்ளை அவர்களைச் சாரும்.

பழைய காப்பியங்களின் இலக்கணங்களையும் கட்டுக்கோப்புகளையும் நன்கறிந்த ஈழத்தவர் சிலர், அவற்றின் வரிசையில் மொழிபெயர்ப்பாகவும், தழுவலாகவும் காவியங்கள் செய்து தமிழ்த் தாதாவாகியுள்ளார்கள். முன்னர் வெளிவந்த கண்ணகி வழக்குரை சிலப்பதிகாரத்தின் தழுவலாகும். இரகுவம்சம் வடமொழியில் காளிதாசர் செய்த காவியத்தின் மொழி பெயர்ப்பாகும். பின்னர் வந்த காவியங்களும் திருச் செல்வர் காவியம், கஞ்சன் காவியம், இருதுசங்கார காவியம் என்பனவாகும். இருதுசங்கார காவியம் என்பது காளிதாச மகாகவி செய்த ருதசங்கார என்னும் வடமொழி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இதனைச் செய்தவர் முன்னாள் கல்வியதிகாரியும், ஆரிய - திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாபகருமான முகாந்திரம் சதாசிவ ஐயரவர்களாவர். கஞ்சன் காவியஞ் செய்தவர் வட்டுக்கோட்டையூர் முத்துக்குமாரர் என்னும் புலவராவர். இவர் ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசிரியர் சேனாதிராய முதலியாரின் ஆசிரியர்களுள் ஒருவராவர்.

### திருச்செல்வர் காவியம்

காரைநகர்த் தமிழ்ப் பண்ணையில் தோன்றிய பூலோகசிங்க முதலியார் என்பார் உள்ளூர்ப் புலவர்களிடம் கல்வி கற்று வித்துவ முறுக்கேறித் தெல்லிப் பழைக்குச் சென்று அங்கே புறமதத்தவர்கள் மத்தியில் பெரிய மதிப்புப் பெற்று அவர்களால் வெகுவாகப் பாராட்டப்பெற்று மதமாற்றஞ் செய்யப்பெற்று அருளப்ப நாவலர் எனக்கொண்டாடப் பெற்றிருந்தார். அவர் 1680 ஆண்டளவில் தோன்றி 1700ஆம் ஆண்டளவில் பெரும்பதவியிலிருந்தார் என்ப.

இவ்வாறாக முன்னர்க் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் சிந்துதேசத்து அரசனான அபிசேனர் என்பாரின் மைந்தனாய திருச்செல்வர் என்னும் இளவரசர் அரசபோகத்தை விடுத்துத் துறவு பூண்டு, காடு சென்று வளம்பெற ஆன்மீக வாழ்வு வாழ்ந்து நற்கதியடைந்த வரலாற்றை முன்னர் ஒரு அருளப்பர் என்பார் கி.பி. 773ஆம் ஆண்டளவில் எழுதி வைத்தாராக. அதனைப் பூலோகசிங்க முதலியார் கருத்தூன்றிக் கற்றுத் தாமும் அருளப்பநாவலர் எனப் பெயர் பூண்டு அக்கதையைக் காவியமாகத் தமிழிற் பாடுவாராயினார்.

பெருங்காப்பிய இலக்கணங்களை நன்கறிந்த அருளப்ப நாவலர் தாம் எடுத்துக்கொண்ட காப்பியத்தை நனி சிறக்கப் பாடுவான் தொடங்கிக் காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பாயிரம் முதலிய அங்கங்கள் துலங்க இருபத்து நான்கு படலங்களில் 1946 விருத்தப் பாடல்களிற் பாடி முடித்தார். நூலில் நாட்டுப் படலம், நகரப்படலம் முதலியன யாவும் நன்கமைந்தவாறே இடையில் சம்பிரதாயம் நோக்கி, ஞானஸ்ஞானப் படலம், அவினேர் மறை தெளிபடலம், துறவுப் படலம், கதிபெறு படலம் இறுதியாக வகுக்கப்பெற்றுள்ளன. கிறிஸ்தவர்கள் நன்கு போற்றிய இந்நூல் 1896 ஆம் ஆண்டில் அச்சுவேலியூர் தம்பிமுத்துப்பிள்ளை என்னும் பத்திராதிபரால் ஞானப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றதாகும். இதற்கு யாழ்ப்பாணம் சத்தியவேத பாதுகாவலன் பத்திராதியர் தம்பு நல்லதொரு சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். அன்றி, இதன் பதிப்பாராய்ச்சியில் அக்காலத்துப் பெரிய பண்டிதர்கள் பலர் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் கூறுவர்.

இந்நூலின் பெருமையையும் இதனைச் செய்தவர் இவர் என்னும் சிறப்பினையும், நூலாசிரியருக்கு வழங்கிய இரு பெயர்களையும், தொடர்புபூண்ட இரண்டு ஊர்களின் பெயர்களையும் செய்யுளொன்று செம்மையாகக் கூறுகிறது.

**''சொல்லினருள் பெருகு தவச் செல்வராயன்**<br>
**கதையைத் தேர்ந்து நுண்ணூற்றுல்லியமோர்ந் தி**<br>
**டும்புலவர்**<br>
**மகிழ்தூங்க விருத்தத்தாற் சொற்றிட்டானால்**<br>
**நல்லிசைநா டகமியலின் தமிழ்தெரிநா**<br>
**வினன்சதுநாக ரீகன் தெல்லிநக ரருளப்பன்**<br>
**தென்காரைப் பூலோக சிங்கன் றானே''**

கதையும் கதையில் வரும் கருத்தும் பிறநாட்டுத் தொடர்புள்ளன வாயினும் காவியம் தமிழிலே எழுந்த பான்மையில் கதாபாத்திரங்கள் தமிழ்ச்சாயல் உள்ளவராய்க் காட்சியளிக்கும் சதுரப்பாடு ஆசிரியரின் கற்பனைத்

திறனால் அமைந்ததாகும். வயலில் வேலை செய்யும் சாதாரணப் பெண்கள் தமிழ் தழுவிய சாயலில் அங்க அசைவுகளில் தமிழ்மயமாகக் காட்சியளிக்கிறார்கள்.

**"ஆடகச் சிலம்பொலி யாவக் கிண்கிணி**
**பாடகச் சீறடி பரதப் பண்ணுறச்**
**சூடகக் கரங்களிற் கண்க டோய்தர**
**நாடகத்தியல்பெற நாறு நாட்டினார்"**

நாட்டுப் படலத்தில் உள்ள நயங்களில் ஒன்றைச் சுவைத்த நாம், நகரப்படலத்திலும் ஒரு நயத்தைச் சுவைத்தல் அமையும். அந்த நாட்டில் மெல்லியலார் அழகு, சாயல், மொழி எல்லாச் சாயல்களும் தழுவிய வர்கள். அந்த மெல்லியலாளர்களிடம் குயிலினம் வந்து குரலினிமையைக் கவர்ந்து பறக்கின்றனவாம். அங்ஙனமே அன்னங்கள் வந்து பெண்களின் அலங்கார நடையைக் கவர்ந்து போகின்றனவாம். இக்களவுகள் இரண்டையும் தவிர அங்கே வேறெந்தச் செல்வத்தையும் களவு செய்வார் எவரும் இல்லையாம். இது புலவனாரின் கற்பனையின் உச்சி.

**"செவ்வித்திரு நகரத்துறை செல்வத்திடை சிறிதே**
**கொவ்வைக்கனி யதரத்தவ ரிசையைக்குயில் கவரும்**
**நவ்விக்குல நயனத்தெழி னடையைச்சிறை யன்னம்**
**வவ்விக்கொள லல்லான்மறு பொருள்வெளவு**
**ரிலையே"**

## அருளப்பர் செய்த மற்றொரு நூல்

இவ்விதமாகப் பலவித நயங்கள் பூத்த காவியத்தை நற்றமிழில் செய்து தந்த நாவலர் இக்கதையையே அம்மானை இலக்கியமாக நயந்ததும்பப் பாடித் தந்துள்ளார். அம்மானை இலக்கியம் பெண்கள் மூவர் சேர்ந்து பாடும் மரபில் பொதுமக்கள் இலக்கியமாகப் பல்கிப் பெருகியதொரு காலம் ஈழத்தமிழர் வாழ்வில் ஒளி காண்பதுண்டு.

ஈழத்துத் தாதாக்கள் தந்த அம்மானை இலக்கியங்கள் அர்ச் யாகப்பர் அம்மானை முதலாகப் பலவாகும். அவை பலவும் காலப்போக்கில் எம் கைக்குக் கிட்டாமல் போனவை நமது தவக்குறைவாகும். அண்மையில் வாழ்ந்த ஆறுமுகநாவலரவர்களின் ஆசிரியர் சேனாதி ராய முதலியார் நல்லூர்க் கோபுர வாசலில் நின்றவாறே 'திருவாரும் நல்லைநகர்' எனத் தொடங்கும் அம்மானை யொன்றைப் பாடினார் என்று அறியக்கிடக்கிறது.

அருளப்ப நாவலர் செய்து தந்த திருச்செல்வர் அம்மானை இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்ததாகக் கூறுவர். அருளப்ப நாவலர் சந்தியோகுமையூர் அம்மானை என ஓர் இலக்கியமும் செய்துள்ளார் எனக் கூறுவாருமுளர்.

அருளப்ப நாவலரின் காலத்தை வற்புறுத்தும் நிகழ்ச்சியொன்று ஒல்லாந்த அரச கட்டளைகளில் காணப் படுகிறது. அருளப்ப நாவலரின் அருமை மைந்தர் சுதேச வைத்தியத் துறையில் நிபுணராகி, அரசறியப் பணி புரிந்த சிறப்பைக் கண்ட ஒல்லாந்த ஆட்சியாளர் அவரை ஆஸ்தான வைத்தியர் என்னும் அந்தஸ்தில் உயர்த்திப் பட்டயமும் வழங்கிப் பணியாளர்களும் நியமித்தனர் என 29-9-1756 நாளின் அறிக்கையொன்று கூறுகின்றது.

# துதியும் தூதும் தந்த இணுவில் சின்னத்தம்பிப் புலவர்

ஈழவள நாட்டின் இணையில்லாப் புலவர்கள் வரிசையில், செந்தமிழ் வளர்த்த செம்மல்களாகவும் சைவம் வளர்த்த சான்றோர்களாயும் பெருந் தொண்டாற் றிய பெரியவர்கள் பலர் சின்னத்தம்பி என்னும் பெயரிலேயே புலவர்கள் பலர், காலந்தோறும் தோன்றி யுள்ளனர். அவர்களுள் நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர், இணுவிற் சின்னத்தம்பிப் புலவர், அல்வாய் சின்னத் தம்பிப் புலவர், உடுப்பிட்டிச் சின்னத்தம்பிப் புலவர் ஆகியோர் தமிழ் தந்த தாதாக்கள் வரிசையைத் தக்க வாறு அலங்கரிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்து இணுவில்பதி குளத்தங்கரை நாகரிகத்துக்குப் பெயர்போன குடியிருப்புகளில் ஒன்று. சைவத்தமிழ்ப் பண்ணைகளுள் ஒன்று. பல்லாண்டு களாகப் பல கலைகளையும் பேணிக் காத்துவந்த பெருங் கலைவாணர்களின் உறைவிடங்களில் ஒன்று. ஆய கலைகளுள் ஆடல் பாடல் முதலிய அருங்கலை கள் அன்றும் இன்றும் அங்கே களிநடம் புரிந்த, புரிகின்ற அமைவு எல்லோரும் அறிந்ததே. விவசாயம், வர்த்தகம், தொழில்துறை முதலியவற்றிலும் மேம்பாடு கண்ட இணுவிலில் தமிழரசர்களோடு தொடர்பு கொண்ட ஆலயங்களும் பல நூற்றாண்டுக் காலமாக அங்கே நிலவி வருகின்றன.

## ஒல்லாந்தர் கொடுத்த முதலிப் பட்டம்

இணுவிற் சின்னத்தம்பிப் புலவர் இலங்கைக் கரைநாடுகளை ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் தோன்றி யவர். இணுவில் சிதம்பர நாதர் என்பாரின் மைந்தராகத் தோன்றிய இவருக்குக் கதிர்காமசேகரர் என்பதே இயற் பெயர் என்ப. அப்பெயரோடு ஒல்லாந்த அதிகாரிகள் அளித்த மானா முதலியார் பட்டமும் சேர இவர் கதிர்காமசேகர மானாமுதலியார் என வழங்கி வந்தார்.

இவர் சைவங் கைவந்த பக்தியிலக்கியவாண ராய் இருந்ததோடு, பொதுமக்கள் பெரிதும் விரும்பிய இசை நாடகத் துறையிலும் விற்பன்னராகி, நொண்டி நாடகம், கோவலன் நாடகம், அனிருத்த நாடகம் முதலிய நூல்களும் செய்தவராவார்.

இணுவிற் பதியில் கோயில்களுக்குக் குறை வில்லை. இணுவில் வாசிகள் கோயில் வழிபாட்டில் தம்மை மறந்துருகும் இயல்பினர். அங்கே ஆண்டு முழுவதும் ஏதோ ஒரு இடத்திலாவது ஒரு திருவிழா வாவது நடைபெறுவதால் வழிபாட்டுப் பழக்கம் சனா தனமாக நிலவுகின்றது. சைவங்காக்கும் இணுவிலில் சைவப்பிரகாச வித்தியாசாலை, சைவ மகாசன வித்தியா சாலை முதலான கல்விக் கூடங்களுக்குக் குறைவில்லை.

## கோயில் நகரம்

குளத்தங்கரை நாகரிகத்தில் தோய்ந்து பழகிய மக்கள் கோயில் வழிபாட்டில் சிறந்து விளங்கிய அநுட்டானங்களில் மேம்பட்டுப் பக்திவயப்பட்டுப் பாடல் ஆடல்களில் தங்கள் திறமையையும் காட்டத் தவறுவதில்லை. அந்த வகையில் அவர்களுக்குக் காவடியாட்டம் கைவந்த கலை.

பக்தித் துறையில் பழுத்த ஊரவருள் சின்னத் தம்பிப்புலவர் காலத்தால் முற்பட்டவர். இவருக்குப்பின் வந்தவர்களுள் நடராச ஐயர் என்பார், நாவலர்களின் நன் மாணாக்கனாகிச் சித்தாந்த சாத்திரம் செம்மையாகக் கற்றிருந்ததோடு போர்த்துக்கேயர் காலத்தில் திருநெல்வேலி ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் அரிதினாய்ந்து எழுதிய சிவஞான சித்தியார் சுபக்கத்தின் அகலவுரையை 1882 ஆம் ஆண்டிலே அருமையாகப் பதிப்பித்தவர். அன்றி குப்பிழான் செந்திநாத ஐயரவர்களின் சித்தாந்த ஞானகுருவாயிருந்தவர். இந்தப் பாரம்பரியம், திருப்பரங்குன்றம் வரை பரவி அங்கே சப்த ரிஷிகள் என வழங்கிய பழநி ஈசானசிவாசாரிய குரு பரியந்தம் படிப்பதற்கு வழிவகுத்தது.

இன்னும் இணுவிலில் தோன்றிய பேராயிரம் உடையவர் வழித்தோன்றல்கள் பலர். அம்பிகைபாகர் என்பார் அடக்கமான ஆசிரியராய், தம் அறிவாற்றலைத் தமிழ்நாட்டில் மணக்கச்செய்ய வசதியும் வாய்ப்புஞ் செய்தவர் தமிழ் தந்த தாதா தாமோதரம் பிள்ளை அவர்களாவர். புலவர்களுக்கு இரும்புக்கடலை என நிலவியது தணிகைப் புராணம். அதனைச் செய்தவர் சிவஞான முனிவரின் மாணாக்கரான கச்சியப்ப முனிவர். கடினமான தணிகைப் புராணத்தைத் தமிழ்வாணர்களுக்கு முகஞ்செய்தவர் உரையாசிரியர் அம்பிகையாகர்.

## சின்னத்தம்பிப் புலவர் துதித்த சிவகாமியம்மை

இணுவிற் சிவகாமியம்மை அவ்வூரவர்களுக்கு வரமும் வாழ்வும் வற்றாத வளமும் அளிக்கும் வடிவுடையன்னை. அவள் அன்பர்களை அடியவர்களை அண்டினோரைக் காத்தருளும் கண்கண்ட தெய்வம். ஒருசமயம் சின்னத்தம்பிப் புலவரை அவரின் பகைவர் யாரோ வஞ்சனையால் மடக்கிப் பிடித்து எடுத்துச் சென்று மறியல் செய்தாற்போல மறைவிடத்து ஒதுக்கி வைத்தனர். பூட்டப்பட்ட அறையில் கிடந்து வாடிய அவருக்குத் தாய்போல் வழி திறந்தவள் சிவகாமித் தெய்வமே யாவள்.

சிறையிலிருந்த சின்னத்தம்பிப் புலவர் சிவகாமியம்மையைச் சிந்தையில் இருத்தித் தம்மை மறந்து தமிழ் நயங்கனியப் பத்துப் பாடல்கள் தரவுக்கொச் சகத்தில் பாடினார். தமிழ் தந்த தாதாவாயினார்.

''பெற்றவள் நீ யானுனது பிள்ளையுலகோரறிய அற்றமிலாச் செல்வமருளி வளர்த்தன்பு தந்தாய் இற்றை வரையுந் தனியே யான் வருந்த வெங்கொளித்தாய் சிற்றிடைமின் அன்னை சிவகாம சுந்தரியே'' தாம் சிறையில் வருந்தியதையும் தாம் துதிப்பாடல்களில் இடையிடையே குறிப்பிட்டதோடு, ஈற்றில் சிவகாம சுந்தரி தம் சிறையை நீக்கியருள் புரிந்ததையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

**''துப்பூட்டு மென்றனது துன்னார் சிறைப்படுத்தும்<br>அப்பூட்டுத் தீய அரிய சிறைவீட்டிருக்கும்<br>இப்பூட்டு நிர்ப்பூட்டாய் என் சிறையை நீக்கியருள்<br>செப்பூட்டும் பொற்றாள் சிவகாமசுந்தரியே''**

சிவகாமசுந்தரி தம்மைச் சிறை நீத்த பேரருளைப் பெரிதும் வியந்து, சிறை தீர்த்த சிவகாமசுந்தரியே எனத் துதித்து மகிழ்வர்.

## பஞ்சவர்ணத் தூது பாடிய புலவர்

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்த் துறை போய சின்னத்தம்பிப் புலவர் பாடிய தூதுப் பிரபந்தம் ஒன்று வீரர் வணக்கத்தை நினைவுபடுத்துகின்றது. தமிழ்ப் பண்பாட்டில் வீர மரணமெய்தியவர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு செய்தல் பாரம்பரிய வழக்கம். என் தலைவனுக்கு முன்னே வராதே. வந்து தோற்றுக் கல் நின்றவர் பலர். பலராய பெருவீரரை வென்றவன் என் தலைவன் ''என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்று முன்நின்று கல்நின்றவர்'' என்று திருவள்ளுவர் படைச் செருக்கின் ஆண்மை மிகுதி கூறுகின்றார். இணுவிலில் உள்ள கோயில்களுள் இளந்தாரி கோயில் என்பதும் ஒன்று. அங்கே கோயில் கொண்டுள்ள காளிங்கராயன் தந்த கயிலாயநாதனே பஞ்சவண்ணத் தூதின் பாட்டுடைத் தலைவனாவன். இவன் கலிங்க நாட்டைச் சேர்ந்த வீரரின் சந்ததியினன். இலங்கையை ஆண்ட மாகன் வரலாற்றோடு இணைந்தவன் எனினுமாம்.

வீரனாய இளந்தாரி பவனி வரும்போது கண்டு காதல் கொண்ட தலைவியாய புலவர் தம் வயமிழந்து பாடும் பாவனை உச்சமாயுள்ளது. புலவர் சந்திர மோகினி எனக் காதல் வயப்பட்ட பெண்ணின் பெயரையும் தருகிறார். சந்திரமோகினி காதல் படுத்திய பாட்டில் நிலவையும், தென்றலையும், கிளியையும் அன்னத்தையும், தோழியையும் தூதனுப்பினாள். இவ்வாறாக ஐவகைத் தூதில் அசைந்த இளந்தாரி அவளைத் திருமணஞ் செய்வதாகத் தோழியிடம் இசைவு தெரிவித்தான்.

இத்தகைய தூதுப் பிரபந்தம் தொல்காப்பியர் குறிப்பிட்ட விருந்தின் மேல் விருந்தாக அமைந்துள்ளமை இணுவிலுக்குப் பெரும் பெருமை. தரு, விருத்தம், கொச்சக் கலிப்பா, அகவல் முதலிய பாவினங்கள் விரவிவரத் துள்ளிக் குதித்தோடும் செந்தமிழ் தூதுப் பிரபந்தம், பிள்ளையார், சிவகாமியம்மை, சுப்பிரமணியம், வைரவர் பத்திரை முதலான தெய்வ மூர்த்தங்களுக்கு வணக்கம் பாடும் வகையில் இணுவிற் பதியில் கோயில்கள் நிறைந்திருந்தன. அங்கே கும்பிடுவதற்கும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் பழவடியார்களாயிருக்கிறார்கள், பாடி ஆடுகிறார்கள். ❋

(தொடரும்)

நூல் விமர்சனம்

# கிட்டும் தெய்வீகம்

இராம. கண்ணபிரான், எழுத்தாளர், சிங்கப்பூர்

*சிங்கப்பூரில் 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றித் தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டவரும், சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்களுக்கான 25 நூல்களுக்கு மேல் எழுதியவருமான வி.ஆர்.பி. மாணிக்கம் அவர்கள் எழுதிய 'கிட்டும் தெய்வீகம்' என்னும் நூல் பற்றிய விமர்சனம் இங்கு இடம் பெறுகிறது. - ஆசிரியர்.*

வி.ஆர்.பி. மாணிக்கம் எழுதியுள்ள ''கிட்டும் தெய்வீகம்'' என்ற இந்நூல் 5 'படிநிலை'க் கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

மனித வாழ்க்கை, உடலாலும் மனத்தாலும், ஆன்மாவாலும் ஆனது. உடலை நல்ல முறையில் ஓம்புவதற்குச் சீரான உணவுப் பழக்கங்களும், அளவான உடற்பயிற்சிகளும் தேவை. மனிதர் தனித்துப் பிறப்பதில்லை. மக்கள் அவனைச் சூழ்ந்து, பெற்றோர் உறவு, கணவன்-மனைவி-பிள்ளை உறவுகள், சமூக உறவுகள் என ஏற்படுத்துகின்றனர்.

உடலை ஓம்பி, உறவுகள் நிலையில் கடமைகளை ஆற்ற வேண்டும் என்றும், மனிதனின் அகவாழ்வுத் தூய்மைக்குச் சில அற நெறிகள் அவசியம் என்றும் நூலாசிரியர் இந்நூலில் வலியுறுத்தி யிருக்கின்றார்.

அந்த அறநெறிகளையும் வாய்மை (உண்மை பேசுதல்), வெகுளாமை (கோபம் கொள்ளாமை), புறங் கூறாமை (அவதூறு சொல்லாமை), அழுக்காறாமை (பொறாமை கொள்ளாமை), கள்ளாமை (திருடாமை), கொல்லாமை (கொலை செய்யாமை), ஈகை (பிறருக்குத் தருவது) போன்ற திருக்குறள் அதிகாரத் தலைப்புகளை ஒட்டி நூலாசிரியர் அமைத்திருக்கும் நூல் திட்டம், நயமாக இருக்கிறது.

நூலில் இடம்பெற்றிருக்கும் இரண்டாவது கட்டுரை ''கங்கைக் கரையில் 19 நாட்கள்'' என்பதாகும். காசிப் பயணம் குறித்துச் சமூகத்தில் நிலவும் சில சிந்தனைப் போக்குகளைச் சுட்டிக்காட்டி, அவை இக் காலத்தில் பொருந்திவருவதில்லை என்பதைத் தொடக் கத்திலேயே, பகுத்தறிவு கொண்டு தெளிவுபடுத்தியிருக்கிறார் ஆசிரியர்.

காசி நகரத்து வீதிகளும், கங்கை நதியும் பக்தர்களால் மாசு படுவதைச் சொல்லி, கங்கை நீரில் உற்பத்தி ஆகும் நச்சுக்கிருமிகள், சதா ஓடும் நதி நீரால், தொடர்ந்து அங்கு வாழ முடிவதில்லை என்றும், காசிப் பட்டினம் முழுக்கப் பரம்பொருள் சக்தி வியாபித் திருப்பதை ஆன்மீக மனத்தால் உணரமுடிகிறது என்றும், கட்டுரை யில் இறுதியில் கூறியிருக்கிறார்.

கங்கை நதிக் கரையில் ஹரித்துவாரம் முதல் காசி வரை 19 தினங்கள் பயணம் செய்து, அவருடைய அனுபவங்களை எழுத்தில் விளக்கியிருக்கும் திறன், வாசகர்களே அங்கெல்லாம் நேரில் போய்க் கண்டுகளிக்கும் ஆனந்தத்தை ஏற்படுத்திவிடுகிறது.

கயையில் மாவுப் பிண்டங்கள் போடுவதும், காசியில் எள்ளும் தண்ணீரும் இடுவதும், தம் முன்னோர்களுக்கு இன்றைய இந்தத் தலைமுறையினர் காட்டும் நன்றியுணர்வுச் செயல்கள் ஆகும்.

புத்தர் சித்தி பெற்ற போதி மரம், மூர்க்க அசோகனால் வெட்டப்பட்டு, பின்னர் அதே இடத்தில் மற்றொரு போதி மரத்தைப் பெளத்த அசோகர் நட்ட வரலாற்றுச் செய்தியும், பீடம் இல்லாமல் தரையில் எழுந்தருளியிருக் கும் காசி விஸ்வநாதர் லிங்கத்தைப் பக்தர்கள், தொட்டுத் தழுவியும், கங்கை நீரால் அபி ஷேகித்தும், மலர்கள் தூவியும் இறை யோடு மனம் கலக்கும் வர்ணனை எழுத்தும் சிறப்பாக உள்ளன.

பகுத்தறிவு வாதம், ஆன்மீக ஈடு பாடு இவற்றின் ஊடே, ஆசிரியரே நேரில் கண்டு, உணர்ந்திருக்கும் ஆத்மார்த்த அனுபூதியே கட்டுரைக்கு அடிநாதமாய் அமைந்துள்ளது.

88 பக்கங்களில் அமைந்துள்ள தும், ரூ. 35/- விலையுள்ளதுமான இந் நூலை சென்னையில் உள்ள உலகத் தமிழர் பதிப்பகம் பதிப்பித்துள்ளது. ❋



# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

## - கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

# வாழ்க்கை வரலாறு (15)

*நடிப்பின் இலக்கணங்களை நன்குபுரிந்தவராகத் தன்னுள் பாத்திரத்தைச் சங்கமமாக்காது பாத்திரத்துள் தன்னைச் சங்கமமாக்குபவராக வைரமுத்து இருந்ததனால் அவர் ஏற்ற பாத்திரங்கள் தம் குணவியல்புகள் குன்றாது தனித்துவமுடையனவாக மேடையில் இயங்கின.*

**- நா. சுந்தரலிங்கம்**

### இயல் பதினைந்து

### ஒப்பனை

கதையையும், கருத்துகளையும், பாத்திரங்களின் குண இயல்புகளையும், கதையில் வரும் சூழ்நிலையையும் பார்ப்போர் கண்டு கேட்டுச் சுவைத்து அனுபவித்து மகிழவைப்பதே நாடகத்தின் குறிக்கோளாகும். பார்ப்போர் நாடகத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் அதனை அவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கருத்துகளும், உணர்ச்சிகளும் சரியான வழியில் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டாலே பார்ப்போரால் நாடகம் புரிந்து கொள்ளப்படும். நாடகக் கருத்துகளை வெளிப்படுத்தும் அழகிய கலையாக விளங்குவதுதான் அபிநயம். இவ்வபிநயம் நான்கு வகைப்படும். அவற்றை ஆங்கிக அபிநயம், ஆஹார்ய அபிநயம், வாச்சிக அபிநயம், சாத்வீக அபிநயம் எனப் பரதர் கூறுவர்.

உடலின் உறுப்புகளால், அதாவது அவற்றின் அசைவுகளால் கருத்துகளை வெளிப்படுத்துவது ஆங்கிக அபிநயம்; குரலாலும் சொற்களாலும் வெளிப்படுத்துவது வாச்சிக அபிநயம்; ஆடை அணிகலன்கள், ஒப்பனை, காட்சியமைப்பு ஆகிய புறப்பொருள்களால் வெளிப்படுத்துவது ஆஹார்ய அபிநயம்; உள்ளத்தின் மனோநிலையாகிய அமைதியையும், கொந்தளிப்பையும், முகத்தாலும் மெய்சிலிர்த்தல் போன்ற உடலிற் காணப்படும் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளாலும் தெளிவுபடுத்துவது சாத்வீக அபிநயம்.

மேற்படி நான்கு அபிநயங்களூடாக சூழல்களுக்கு ஏற்ப நாடகம் மனித நடத்தைகளுக்கு விளக்கமளிக்கிறது.

ஒரு பாத்திரம் மேடையில் தோன்றியதும் பார்ப்போரை முதலிற் கவர்வது அதன் வேடப் புனைவாகும். அதன் பின்னர் தான் அசைவு, வார்த்தை, நடிப்பு என்பன கவர்கின்றன. ஆகவே ஒரு நாடகத்தின் வெற்றிக்கு ஒப்பனை இன்றியமையாததாகின்றது. சொல், நடிப்பு என்பனவற்றைவிட முதலில் பாத்திரத்தை வெளிப்படுத்துவது ஒப்பனையாகும். ஒப்பனை மூலம் ஒரு பாத்திரத்தின் உண்மைத் தோற்றத்தை வெளிக்கொணர்ந்தால் மட்டுமே ஏனைய அபிநயங்களின் துணைக் கொண்டு நாடகச் தயாரிப்பில் வெற்றி பெற முடியும். ஏனெனில் ஒப்பனை மூலம்தான் ஒரு பாத்திரத்தின் குணவியல்பு, தேசம், இனம், பிறப்பு, வயது, மனநிலை என்பனவற்றைக் காட்ட முடியும். ஒப்பீட்டளவில் அடுத்த மூன்றும் தம்பணியைக் குறைவாகவே செய்கின்றன. உருவகப்படுத்திக் கூறுவதானால் ஒப்பனை ஒரு மடங்கு; அதில், பாத்திரங்கள் எனும் படங்கள் ஏனைய மூன்று அபிநயங்களின் துணைக் கொண்டு வரையப்படுகின்றன.

நடிக, நடிகையர் தமக்குரிய பாத்திரங்களை உரியவாறு வெளிப்படுத்தப் பொருத்தமான முகப்பூச்சு, தலையணி, ஆடை, அணிகலன் என்பனவற்றைக் கையாள வேண்டும். நடிகனுடைய உண்மையான தோற்றம் மறைந்து பாத்திரத்தின் வடிவம் உருவாக வேண்டும். இது பரகாயப் பிரவேசம் போல, அதாவது கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தைபோல அமைதல் வேண்டும்.

நடிகர்கள் அணியும் ஆடைகள் அவரவர் உயரம், பருமன் நிறம் என்பனவற்றுக்குப் பொருந்தும் வண்ணம் அமைதல் அவசியம். சிவப்பு நிறமுடையவர்கள் கறுப்பு, கருநீலம் ஆகிய நிறங்களிலும், கறுப்பு நிறமுடையவர்கள் மெல்லிய நிறங்களிலும், **(Light Colours)** பொது நிறமுடையவர்கள் இருவகையான நிறங்களிலும் உடைகளை அணிந்து கொள்ளலாம். பல வகையான நிறங்கள் இருந்தபோதும் மேடைக்குச் சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் ஆகிய வண்ணங்களே மிகவும் பொருத்தமாகும்.

நடிகர்கள் மேடையில் தோன்றும்போது போலி நகைகளையே அணிதல் வேண்டும். தங்கம், முத்து, மணி என்பனவற்றாலாகிய பெறுமதி மிக்க நகைகளை அணியக்கூடாது. ஏனெனில் நடிகன் பெறுமதியான அணிகலன்களை அணிவானானால் அவனுடைய சிந்தனை கலைந்து அவற்றின் பாதுகாப்புப் பற்றிய நினைவில் நிலைத்து விடும். அவ்வாறு சிந்தனை சிதறும்போது பாத்திரத்தை உணர்ந்து அவனால் நடிக்க முடியாது.

இக்கருத்துகளை மனத்தில் நிறுத்திக் கொண்டு வைரமுத்துவின் அரங்கில் ஒப்பனை பெற்ற இடத்தினை ஆராய்வோம்.

இசைநாடகக் கலைஞர்கள் ஒப்பனை, மேடையலங்காரம், பக்கவாத்தியம், பின்னணி இசை, ஒளி, ஒலி ஆகிய விடயங்களில் மிகுந்த கவனஞ் செலுத்தி வந்தனர். நடிகமணி வைரமுத்துவின் வசந்தகான சபாவும், மேற்படி விடயங்களில் மிகுந்த அக்கறை

காட்டிவந்தது. சிறந்த ஒப்பனைக் கலைஞர்களைக் கொண்டிருந்ததோடு, ஒப்பனைக் கலையிலும் நுட்ப மாகக் கலைஞர்களைக் கொண்டிருந்ததோடு, ஒப்பனைக் கலையிலும் நுட்பமாகக் கவனஞ் செலுத்தி வந்தது என்பது முன்னரே சொல்லப்பட்டது. நடிகமணி வைர முத்துவும் ஒப்பனைக் கலையின் ஒவ்வொரு நுட்பத் தையும் அறிந்துவைத்திருந்தார்.

இசை நாடகங்களில் ராஜபார்ட்டாகப் பலவித மான பாத்திரங்களை ஏற்று நடித்த நடிகமணி வைர முத்துவுக்குப் பேரும் புகழும் பெற்றுக் கொடுத்த பாத் திரங்களுள் மிகவும் முக்கியமானவை மூன்றாகும். 'அரிச்சந்திரன்', 'நந்தன்', 'அந்திராசி' ஆகிய பாத்திரங் களே அவைகளாகும். ஏனைய ராஜபார்ட் பாத்திரங் களைவிட இவை பலவிதத்திலும் வித்தியாசமானவை. தோற்றம், குண இயல்பு, உணர்ச்சி, நடிப்பு ஆகிய வற்றிலும் வேறுபட்டவை. ஒப்பனையைப் பொறுத்த வரையிலும் இவை வேறுபட்டு நிற்கின்றன.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு பாத்திரத்தையும் ஏற்று நடிப்பதற்காக வைரமுத்து ஒப்பனை செய்யும் பொழுது அதனை ஒரு யோகமாகவே கருதிச் செயற் பட்டார். தானே தனக்கு ஒப்பனை செய்து கொள்ளும் இவர் ஐந்து புலன்களையும் ஒருநிலைப்படுத்திச் சித்தத் தைப் பரம்பொருளிடம் செலுத்தும் ஒரு யோகியாகவே மாறிவிடுவார். ஒப்பனை செய்யத் தொடங்கியதும் இவர் எவருடனும் பேச்சுவைத்துக் கொள்வதில்லை.

முதலில் அரிச்சந்திரனுக்குரிய ஒப்பனையை நோக்குவோம். முகச்சவரம் செய்த பின்னரே, இவர் ஒப்பனை செய்யத் தொடங்குவது வழக்கம். ஆரம்பத் தில் சிறிதளவு முத்து வெள்ளையை எடுத்து முகத்திற் பூசியதும், தேய்க்கும் பஞ்சினால் (Sponge) பல தடவை அழுத்தியழுத்தித் தேய்த்த பின்னர், பல தடவை முகத்தைக் கையினால் வருடிக் கொள்கிறார். இதனை அடுத்து, தேகத்திற் சில இடங்களிலும் முத்து வெள்ளை யைப் பூசி அழுத்திய பின், நெற்றி, புருவம், மார்பு ஆகிய இடங்களில் கறுப்பு நிறத்தினால் சிற்சில கோடு களை வரைந்து கொள்கிறார். மிகவும் கவனமாகத் தாடி யையும் மீசையையும் ஒட்டும் பணியிற் பின்னர் ஈடுபடு கிறார். கறுப்பும் ஓரளவு நரையும் கலந்த பஞ்சை அள வாக வெட்டி முகத்தில் ஸ்பிறிற் பசையைப் (Spirit Gum) பூசி தாடியையும் மீசையையும் நுட்பமாக ஒட்டிக் கொள் கிறார். ஓர் ஓவியன் எவ்வளவு கவனமாகத் தூரிகை யைக் கொண்டு துணியில் வண்ணங்களை ஏற்ற வண்ணம் பூசி ஓவியப்படுத்துகின்றானோ, அவ்வளவு கவனம் இதிற் செலுத்துகின்றனர். தனக்குத் திருப்தி வரும்வரை கண்ணாடியைப் பார்த்தபடி முகத்தைச் செம்மைப்படுத்துகின்றார்.

முகத்திற்குரிய ஒப்பனை முடிந்ததும், தலையிற் பொருத்தமான முடியுடன் கூடிய போலி முடியை (டோப்பை) வைத்து அதனைக் கறுப்புத் துணியொன்றி னால் விழாதபடி கட்டிவிடுகின்றார். கட்டிய கறுத்தப் பட்டியும் தலைக்கு அழகு சேர்க்கிறது. பின்னர் மொத்த மான கறுப்பு நூலைக் கழுத்திலும் வலது தோள்மூட்டின் கீழும் கட்டிக் கொள்கிறார்.

இவ்வளவும் செய்த பின்னர் சணல் நூலாலாகிய நான்கு முழக்கறுப்புத் துணியொன்றினை எடுத்து உடுத்திக் கொள்கிறார். இத்துணியின் கீழ்க்கரை முழங் காலுக்கும் பாதத்துக்குமிடையே நிற்கத்தக்கதாக அமை கிறது. உடுத்தது பொருத்தமாக அமைந்துவிட்டது எனக் கண்டதும் தோளில் ஒரு கறுப்புத் துண்டினை எடுத்துப் போட்டுக் கொள்கிறார். இத்துண்டினைத் தோளிற் போட் டதும் அவருடைய முகத்திற் புதுப் பொலிவொன்று உண்டாகுவதை அவதானிக்க முடிகிறது. கண்ணாடியில் மீண்டுமொரு தடவை தன்னுடைய கோலத்தை அவ தானித்துக் கொள்கிறார். இவற்றின் பின்னர்தான் கையில் வைத்திருக்கும் கோலை (தடியை) எடுத்துப் பிடித்துக் கொள்கிறார். ஒப்பனையின் ஒவ்வொரு பகுதியையும் அவர் செய்யும் பொழுதும், அவர் அப்பாத்திரமாக வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. கையிற் கோலை எடுத்ததும் அப்பாத்திரம் நிறைவு பெறுகிறது. பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கே ஒரு புளகாங்கிதம், மயிர்க்கூச்சு என்பன உண்டாவதைக் காணமுடிகிறது.

இப்பொழுது மோனநிலையில் இருக்கும் ஒரு முனிவரைப் போல வைரமுத்து முழுக் கவனத்தையும் ''அரிச்சந்திரன்'' பாத்திரத்திலேயே செலுத்துபவராகக் காணப்படுகிறார். அரிச்சந்திரன் எனும் பாத்திரத்துட் புகுந்தவராக அவர் உள்ளார். கூடுவிட்டுக் கூடுபாயும் ஆன்மா போல அரிச்சந்திரன் எனும் பாத்திரத்தினுள் நடிகமணி வைரமுத்து புகுந்துவிட்டார் எனலாம்.

வைரமுத்து எனும் மானிடன் இப்பொழுது அங்கேயில்லை. சுடலை காக்கும் புலையனும், அரசன் அரிச்சந்திரனுமாக இரு நீர்மைப்பட்ட பாத்திரத்தை உள் வாங்கிய நிலையில், ஒரு சித்தனாக அவர் காட்சி தருகிறார்.

அவருடைய காட்சி வருகிறது. ''பிறந்தது மண் மேல் இறப்பதற்கென்றே பேசிடும் நூல்'' எனும் பைரவி இராகத்திலமைந்த பாடலைத் தனது வெண்கலக் குரலாற் பாட, கணீரென்ற அவருடைய குரலுடன் ஆர்மோனிய இசையும் அனுசரணையாக இணைந்து செல்ல, எங்கும் இருள் சூழ்ந்து காணப்படும் மேடையின் நடுவில், ஈமத் தீயின் ஒளியில் காணப்படும் நடிகமணி வைரமுத்து வைப் பார்க்கும் கலைஞர்கள், வைரமுத்துவாகக் காண்ப தில்லை; உண்மையான அரிச்சந்திரனாகவே கண்டு அப் பாத்திரத்துடன் ஒன்றிவிடுகின்றனர். இதற்கு அவரு டைய இசை, நடிப்பு, அசைவு என்பன மட்டுமன்றி ஒப் பனையும் காரணமாகின்றது.

வைரமுத்துவின் மிகச்சிறந்த நாடகங்களுள் ஒன்று, 'பக்த நந்தனார்' ஆகும். ஓர் எளிமையான பாத்திரமான 'நந்தன்' வடிவில் தோன்றி ஆயிரக்கணக் கான கலைஞர்களைத் தன்பால் ஈர்த்த பெருமைக் குரியவர் அவர்.

நந்தன் பாத்திரத்திற்குரிய ஒப்பனையை மேற் கொள்ளும் பொழுதும் வைரமுத்துவின் சிந்தனை முழுவதும் ஒரு நிலைப்பட்டு அப்பாத்திரத்திலேயே ஊறிவிடுகிறது. தான் ஒரு சிவனடியான் எனும் நிலைக்குத் தன் புலன்களைப் படிப்படியாக இட்டுச் சென்ற வண்ணம் ஒப்பனையில் ஈடுபடுகின்றார். நன்கு உயர்த்திக்கட்டிய நான்குமுழ வெள்ளை வேட்டி, அவ்வேட்டியைச் சுற்றிக் கட்டிய அகன்ற கட்டியுள்ள சால்வைத் துண்டு, நெற்றியிலும், மார்பிலும், கை களிலும் விளங்கும் உத்தூளனமாகப் பூசப்பட்ட விபூதிச் சின்னம், கழுத்தில் உருத்திராக்கமாலை என்பனவே

இப்பாத்திரத்திற்குரிய ஆடை அணிகலன்களாகும். இவ்வொப்பனை ஒவ்வொன்றையும் அவர் செய்யும் பொழுதும் படிப்படியாக அவருடைய முகத்தில் ஒரு சாந்தி தவழும் புதுப்பொலிவு தோன்றத் தொடங்குவதை அவதானிக்க முடியும். ஒளிவிடும் கண்கள், அமைதியும், அடக்கமும், கருணையும், சாந்தமும் விளங்கும் முகபாவம், பக்தி ததும்பும் தோற்றம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சிவவேடம் பூண்டவராக வைரமுத்து மாறியதும், அவர் தனிமையையே விரும்புகிறார். மேடையில் தோன்றும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் நாடகம் முடியும் வரை எவருடனும் எவ்வித மான பேச்சுமின்றித் தனித்திருக்கின்றார். பரமாத்வைத் தேடிச் செல்லும் ஜீவாத்மா போலப் பரம்பொருளை அடையத் துடிக்கும் துடிப்பை வெளிப்படுத்தும் சாதகன் போல அவர் தோற்றமளிக்கிறார். இவை மிகைப் படுத்திச் சொல்லப்படும் வார்த்தைகள் அல்ல. அவருடன் கூடப்பணி புரிந்தவர்களுக்கு மட்டுமே இவ்வுண்மை தெரியும்.

பூதத்தம்பி நாடகம் தென்மோடிக் கூத்தாகவும், விலாச நாடகமாகவும் ஆடப்பட்டது. சங்கரதாஸ் சுவாமிகள் காலத்தில் இது இசை நாடகமாகவும் மேடையேற்றப்பட்டது. அப்பொழுதெல்லாம் ஒப்பனை செய்யும் பொழுது, அந்த அந்த நாடகத்துக்குரிய முறையில் ஒப்பனை செய்யப்பட்டதே யொழிய, காலதேசவர்த்தமானத்துக்கேற்ப ஒப்பனை செய்யப்படவில்லை எனத் தெரிகிறது. இசை நாடகத்தில் மட்டும் ஓரளவு ஒப்பனை விடயத்தில் மேற்படி அம்சங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

நடிகமணி வைரமுத்து பூதத்தம்பி நாடகத்தை மேடையேற்றுவதற்கு முன்னர், ஒப்பனை பற்றி ஆராய்ந்து ஆடை, அணிகலன்களைத் தயாரிக்கலானார். பூதத்தம்பி நாடகம் ஒல்லாந்தர் கால உண்மை வரலாற்றைக் கூறுகிறது. ஆகவே, அக்காலத்துக்குரிய வகையில் ஒப்பனை செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது. இதற்காக நாயக்கர் கால ஓவியங்களும், சிற்பங்களும் ஆராயப்பட்டதுடன், பறங்கியர் கால ஓவியங்களும், ஆராயப்பட்டன.

யாழ்ப்பாணத்தில், யாழ் மாநகர சபை முன் பியங்கிய கட்டடத்துக்கு அண்மையில் சில கிட்டங்கிகள் இருந்தன. இக்கிட்டங்கிச் சுவர்களில் யாழ்ப்பாணத்தைப் பிரதிபலிக்கும் சுவரோவியங்கள் சில காணப்பட்டன. இந்த ஓவியங்களிலிருந்து அக்காலப் பறங்கித் துரைமார், போர் வீரர்கள், செட்டிமார், தமிழ் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரது ஆடை, அணிகலன்களை அறியமுடிகிறது. இவை தவிர, 'கட்டபொம்மன்' 'சிவகெங்கைச் சீமை' ஆகிய தென்னிந்தியத் திரைப்படங்களிற் செய்யப்பட்ட ஒப்பனைகளையும் சீர்தூக்கி ஆராய்ந்தே பூதத்தம்பி முதலி, அந்திராசி முதலி, ஒல்லாந்தத் தேசாதிபதி, போர் வீரர் ஆகியோரது ஆடை அணிகலன்கள் தயாரிக்கப்பட்டன. அழகவல்லி அணிந்த அணிகலன்களைக்கூட அக்காலத்துக்குரிய வகையிலேயே நுட்பமாகச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

'அரிச்சந்திரன்' 'நந்தனார்' ஆகிய பாத்திரங்களுக்கு ஒப்பனை செய்யும் பொழுது, எவ்வாறு தனது மனத்தை ஒரு நிலைப்படுத்தி அப்பாத்திரங்களை உள்வாங்கி ஒரு யோக சாதகனாக நின்றாரோ, அதே போலத்தான் அந்திராசி பாத்திரத்தை ஏற்று நடிக்கும் பொழுதும் வைரமுத்து நடந்து கொண்டார். ஒப்பனை, அவரைப் பொறுத்த வரையில் ஒரு தவம்; ஒரு யோகம்.

அக்காலப் பறங்கித் தேசாதிபதிகளின் கீழ்ப் பணி புரிந்த அடுத்த பதவியில் உள்ள துரைமார் அணிவது போலக் காற்சட்டை, மேற்சட்டை, சப்பாத்து என்பன வற்றை அணிந்து, உடைவாள் ஒன்றையும் இடுப்பில் வைரமுத்து செருகிக் கொள்கிறார். இளமை ததும்பும் மீசை, கன்ன மீசை என்பனவற்றுடன், ஓரளவு கீழ் நோக்கி வளைந்த கேசத்துடன் இவர் காணப்படுகிறார். தான் ஒரு மாதிரி என்பதையும், யாருக்கும் தலை வணங்காத ஒருவர் என்பதையும், புலப்படுத்தும் வகையில் காணப்படும் சிக்கல் நிறைந்த பாத்திரமாக அந்திராசி விளங்குவதை அவருடைய ஒப்பனையிலிருந்தே கண்டு கொள்ளலாம்.

கொழும்பில், வானொலிக் கலையரங்கில் பார்ப்போருக்கு முன் நடிகமணி வைரமுத்துவின், ஸ்ரீவள்ளி நாடகம் நடைபெறவிருந்தது. அப்பொழுது கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை மேற்கொண்டிருந்த நான் ஒப்பனை செய்வதற்காக வைரமுத்துவுடன் சென்றிருந்தேன். வள்ளியாக நடிக்கவிருந்தவர் திருமணமாகாத ஓர் இளம்பெண், அவர் தாமே தமக்கு ஒப்பனை செய்து முடித்த பின்னர் இரண்டொரு மணிமாலைகளைக் கழுத்திற் கட்டிவிடும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். நான் அருகில் நின்ற இன்னொரு பெண் நடிகரைச் சுட்டிக் காட்டி அவரைக் கொண்டு கட்டுவிக்கும்படி கூறினேன். அதற்கு அப்பெண், தான் வடிவாகக் கட்ட மாட்டாரென்றும் என்னையே கட்டிவிடும்படி வேண்டிக் கொண்டார், நான் சிறிது தயங்கியபடி அம்மாலைகளைக் கட்டிவிட்டேன்.

இதை அவதானித்த வைரமுத்து நாடகம் முடிந்த பின்னர் என்னிடம் இச்சம்பவத்தை நினைவுபடுத்தி ''ஏன் மாலையைக் கட்டத் தயங்கினீர்கள்'' என்றார். ''திருமணமாகாத கன்னிப்பெண்ணின் கழுத்தில் மாலையைக் கட்ட மனத்துக்குச் சங்கடமாகவிருந்தது'' என்று நான் பதிலளித்தேன். வைரமுத்து சிரித்தபடி ''நீங்கள் ஓர் ஒப்பனைக் கலைஞர் என்பதை அவ்விடத்தில் மறந்து விட்டீர்கள். ஒரு கலைஞன் ஆண், பெண் என்ற வேறுபாடு பார்க்கக்கூடாது. ஒப்பனைக் கலைஞன் மட்டுமன்றி நடிக நடிகையர்கூட நடிக்கும்பொழுது குறிப்பிட்ட பாத்திரமேற்ற தம்மைக் கலைஞர்களாக எண்ண வேண்டுமேயொழிய, தான் ஓர் ஆண் என்றோ அல்லது பெண்ணென்றோ நினைக்கக் கூடாது. நடிகர்களிடையே ஒழுக்கக்கேடு ஏற்படுவதற்கு இத்தகைய எண்ணங்களே காரணங்களாகும்'' என்றார்.

நீண்ட காலமாக இயங்கிவந்த வசந்தகான சபையில், கடைசி வரைக்கும் எவ்வித ஒழுக்கப் பிசகும் நிகழாதிருந்தமைக்கு இத்தகைய ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவியமையே காரணமாகும். இவர்களுடைய குழுவிலிருந்த மூத்த கலைஞர்களாகிய மார்க்கண்டு, நற்குணம், சின்னத்துரை ஆகியோருடைய மேற்பார்வையும் நெறிப்படுத்தலும் கூட இதற்கு உதவியதெனலாம்.

*(தொடரும்)*

# ஈழத்தில் ஒரு தாய்

பேராசிரியர் கோபன் மகாதேவா

**மங்காமல் ஒளிவீசும் மணிகள் போன்று**
**எங்களின்தொல் தமிழீழ மானிப் பாயில்**
**தங்கரத்தி னம்என்னும் குணத்தின் குன்று**
**தாய்க்குலத்தார் பலர்போற்றும் தலைமை மாது**
**அங்காங்குப் பந்துக்கள் அகதியாக**
**அலைக்கழித்து வாய்க்கரிசி போடு தற்கும்**
**பங்காகப் பாடையினைச் சுமப்ப தற்கும்**
**பக்கத்தில் இல்லாமல் தனித்துச் சென்றாள்.**

ஊரில் எவருக்குமே அவள் 'தங்கமாமி'. எனக்கும்தான். நான் அவளின் ஒரே மகளை மணம் முடித்தேன். எப்போதும் பகிடியுடன் சிரித்த முகம். ஒரு மாதிரியான வஞ்சகமில்லாத கேலிச்சிரிப்பு என்றும் சொல்லலாம். தங்கமும் குடும்பத்தில், நான்கு சகோ தரர்களுடன் ஒரே மகள். அவருக்கும், என்னுடைய மனையாளுடன் நான்கு ஆண்பிள்ளைகள், மாணிப்பா யில் மரியாதையாக வாழ்ந்துவந்த குடும்பம். மாமிக்கு, எட்டு மாதங்களின் முன்னர்ப் பிறந்த குழந்தையிலிருந்து எண்பது தொண்ணூறு வயதினர் வரையில் எல்லோரும் நண்பர்களே. இப்படியான ஒரு ஆத்மா, குடும்பத்தினர் ஒருவருமே கிட்டடியில் இல்லாமல், அநாதை போல, நோயினில் நினைவின்றிப் பிரிந்துசென்றது. ஏன்? எப்படி? அத்தாய் வாழ்வெல்லாம் எல்லோரிடமும் நல்லெண்ணமும் நற்பெயரும் பெற்றது இதற்காகத் தானா?

**மகனொருவர் வங்கியிலே முகாமை யாளர்**
**முன்சென்றார் மாரடைப்பால் மோட்சத்துக்கு**
**மகள்ஒன்றே; திருமணத்தால் நாடு விட்டு**
**மணாளனுடன் சீமையிலே, வைத்யச் சேவை**
**பகம்போற்றும் மற்றமகன் மான்செஸ்டரில்**
**மனத்துயரால் கண்ணீரைக் கொட்டி நிற்கச்**
**சகமக்கள் மற்றிருவர் இலங்கைத் தீவில்**
**சண்டையினால் தாயிருந்து பிரிக்கப் பட்டார்.**

தங்கமாமியின் மூத்தமகன், மனைவியுடனும் இரு மகள்மாருடனும் கொக்குவிலில் வசித்தார். யாழ் நகரத்தின் வங்கி ஒன்றில் வேலை. 1980களின் நடுப் பகுதி. அடக்குமுறையினரின் அட்டகாசங்களும் கொள்ளைக் காரரின் பயமும் வாடிக்கையாளரின் பணமாற்று நெருக் கல்களும் சேர்ந்து அவரின் வேலைப் பளுவைக் கூட்டி, 1986இல் 56-வயதிலே, மாரடைப்பில் தாய்முன் உயிரி ழக்கச் செய்தன.

எப்படி இருந்திருக்கும் பெற்ற தாயாருக்கு? நான்கு ஆண்டுகளின் பின் அத்தாயின் கணவனாரும் இறந்தார். ஒரே மகளும், ஒரு மகனும் இங்கிலாந்தில், மற்ற இரு மக்களில் ஒருவர் கொழும்பில், சுக வீனத்துடன். கெதியில் இந்தியப் பட்டாளம் யாழ் குடா நாட்டை ஆட்டிப்படைத்துக் கொழித்தது.

சுகதேகியாயிருந்த தங்கத்துக்கு, மூத்த மகனும் கணவனும் மறைய, முதுமையின் நோய் பிடித்தது. கூட வாழ்ந்த கடைசிமகனும் அயலாரும் அவளைப் பார்த்து வர, 1992இல் யாழ் ஈழச் சமர் மூண்டது.

**அங்கேயோ அந்தத்தாய் முதுமைதன்னால்**
**அங்கமெலாம் சோர்வடைந்து வாடி நிற்க**
**இங்கேநாம் இரவிரவாய் அவர்நிலையைத்**
**துன்பம்சேர் கனவுகளில் கண்டு ஏங்கித்**
**திங்கள்கள் பலவாடித் திக்கு மாறித்**
**தவித்துக்கண் ணீர்இறைக்க வைத்த முன்னாள்**
**எங்களது ஊழ்வினையே கால தேவா!**
**உயிர்குடிக்கும் அரசினரின் கொடுமை ஏனோ?**

எங்கள் உடல்களுக்கிடையே ஆறாயிரம் மைல் இடைத்தூரம். ஆனால் எம் உள்ளங்களுள் அவள். என் நற்பாதியான மனையாளைப் பெற்றெடுத்து ஆளாக்கிய, எம்மை நினைத்து உயிர்வாழும் தாய். ஒரு தாய் தன் ஒரே மகளிடம் கொண்டிருக்கும் பாசம் விசேடமானது. இதை அனுபவித்தோர் அறிவர். இரு துணைகளை இழந்த வயோதிகத்தாய். நாம் பாஸ்போர்ட் அனுப்பி யும் தாய் நாட்டையும், பிறந்த மண்ணையும், பரம்பரை வீட்டையும், மனைதுறந்த இளவலையும் விட்டுவர விரும்பாத தாய். இங்கும் அங்கும் நாம் கனவிலும் நினைவிலும் அழுது அங்கலாய்த்து அல்லல்பட்டுக் கொண்டே வாழ்ந்தோம். பணவசதி இருந்தும், அளவில் லாத அன்பும் ஆசையும் இருந்தும் அடிப்படை மனிதப் பண்புகளையே பேணமுடியாமல் தவித்தோம். அந் நிலைக்கு எமைத் தள்ளிய இலங்கை அரசினரைத் திட்டினோம்.

**கொடுப்பதற்கோ மக்களுக்கு மருந்தும் இல்லை**
**குடிநீர்,ஒளி பெறுதற்கும்மின்சாரம் இல்லை**
**சடுதியாய்ச் சிகிச்சைபெற வசதி யில்லை**
**போசணைசேர் தாதுள்ள உணவு மில்லை**
**அடுப்பெரிக்கப் பொருளில்லை அரசாங் கத்தின்**
**வங்கிகளில் பணவோட்டம் நேர்சீ ரில்லை**
**கடுகெதியாம் விமானமடல் கூடக், கேட்பீர்**
**காலாண்டு கழிந்தபின்னே போன தையா!**

திட்டினோம். அரசியல் அதிகாரமும் ஆயுதங் களும், கோடிக்கணக்கில் பொதுசனத்திடம் வரிகளென அறவிட்ட பணமும் அளித்த தைரியத்தால் தமிழ்மக்க ளின் வாழ்க்கையுடன் விளையாடிய சுயநலப் பழங்குடி காரப் போலிகளையும் இனத்துவேசிகளையும் திட்டி னோம். திட்டிக்கொண்டே இருந்தோம். எம் தாய்க்கு வேண்டிய மருந்துகள் கடையில் இல்லை. சத்துள்ள உணவோ பானங்களோ பெற முடியாத நிலை. வீட்டில் மின்சார ஒளியில்லை. விளக்கேற்ற மண்ணெண்ணெய் இல்லை. அனுப்பிய பணத்தை, வங்கிகள் நேரத்துக்குக்

கொடுப்பதில்லை. அந்நோயாளியின் சடுதியான வலிகளுக்கு வைத்தியர்களை அழைக்கவோ ஆஸ்பத்திரிக்கு உடன்கொண்டு சென்று காட்டவோ முடியவில்லை. நாளாந்தம் அவரின் நிலையை அறியத் தொலைபேசிகள் சேவை செய்யவில்லை. நவீனயுகத்தில் நாம் வாழ்ந்துங்கூட விமானத் தபால்கள் நூறுமணிகளல்ல நூறுதினங்களின் பின்னரே கிடைத்தெம் நாளாந்த வாழ்க்கையை நரகவேதனைக்கு இழுத்துச் சென்றிருக்கின்றன. தீபாவளியன்று எம் தாய் சத்தியெடுத்தார் என்னும் செய்தி அடுத்த வருடம் பொங்கல் தினத்திலன்றே நாம் அறிந்ததைப்போல!

**இத்தியாதி இன்னல்கள் பலஇடையே**
**ஈன்றெடுத்த தன்தாயைக் குழந்தை போலப்**
**பத்திரமாய் மூன்றாண்டு பார்த்து வந்தார்**
**பாசமுள்ள கடைசிமகன் உவந்து, நல்லாய்**
**முத்துக்கு மாரசாமி பிதாவை, முன்னர்ப்**
**பிரிந்திருந்து பறிகொடுத்த குடும்பத் தார்இவ்**
**உத்தமியை யும்இழக்க விருப்ப மின்றி**
**ஊக்கமுடன் அன்னவரைப் பேணி வந்தார்.**

அந்நாளில் அவ்வீட்டில் இருவரே. கட்டிலில் எலும்பும் தோலுமாக நாள்முழுதும் படுத்திருந்து பேசும் சக்தியையே இழந்திருந்த அத்தாய். அவரைத் தூக்கிச் சென்று காலைக் கடன்கள் செய்ய விட்டுத் துடைத்துக் குளிப்பாட்டித் தாங்கி இருத்தி உணவூட்டி இரவு பகல் விழித்திருந்து கண்ணை இமை காப்பதைப்போல் மூன்றாண்டு காத்துவந்த, படித்திருந்தும் வேலைசெய்ய முடியாதிருந்த, மணந்தும் மணவாழ்க்கை நடத்த முடியாத நிலையிலிருந்த அவரின் கடைசி ஆசைமகன். இங்கிலாந்திலிருந்த நாம், மேற்கூறிய சேவைகள் ஒன்றிலுமே பங்குகொள்ளவில்லை. பங்கெடுக்க முடியவில்லை. அது, உண்மையே. ஆனால், எம் நினைவிலும் கனவிலும் மணிக்கொரு தடவையாவது அத்தாயாருக்கு அப்படியான ஏதோவொரு சேவையைச் செய்தோம் என்பதும் உண்மை. இதற்கு இறைவனே சாட்சி.

1995 விடிந்தது. யாழ்ப்பாணக் குடாநாடு இருண்டது. தமிழருக்கு ஏற்பட்ட அநீதிகளை, நேரடியாகப் பேசித் தீர்ப்பேன் என்று பதவிக்குவந்த சனாதிபதிகூடத் தமிழரை அடக்கப் போரை முடுக்கினார்.

**அத்துணையும் பார்த்திருந்த கால தேவன்**
**அனுருத்த எனும்நபரை ஏவி விட்டான்:**
**புத்தியொன்று படிப்பிப்போம் பண்டைக் கால**
**வித்தகர்,விற் பன்னர்யாழ்ப் பாணத்தார்க்கு**
**யுத்தத்தில் பிடித்திடுவோம், அவர்அ கத்தை**
**யூதரைப்போல் சிதறடிப்போம் அவரி னத்தை**
**சொத்துகளாம்! சுகவாழ்வாம்! சுதந்திரமாம்!**
**அரசினரின் எம்படைகள் சில்ல றையாம்!**

சனாதிபதியாகப் பதவியேற்ற வியாங்கடைப் பெருங்குடியின் இரு பிரதமர்களின் விதவை மகளானவர் தன் மாமனாராகிய அனுருத்த என்பவரைப் போர் மந்திரியாக நியமித்து, தம் அரசாங்க படைகளின் முழுச் சக்தியையும் பாவித்து, தமிழ்ப் பொதுசனங்களுக்கு அவலங்கள் ஏற்பட்டாலும், ஏதோ ஒரு வழியில் தமிழரின் உரிமைப்போரை முன் நின்று நடத்திவரும் புலிப்படைகளை அழித்து அல்லது துரத்தியடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு உத்தரவுகள் பிறப்பித்திருந்தார். இது வரலாற்று உண்மை. அரசியலன்று. எமது ஈழத்துத் தாயாரின் கதைக்கு இது அத்தியாவசியமான பின்னணியே. இப்படியான சூழ்நிலையில் பொது மக்கள், வீட்டிலுள்ள வயோதிக நோயாளிகளை என்ன செய்ய முடியும்?

**அன்றுஅவர்கள் ஏவுகணை, தாங்கிக் கொண்டு**
**சுட்டபடி முன்னேறி வந்த காலை;**
**சென்றிடுவோம் தாயுடனே சாவகச் சேரி,**
**என்றெண்ணிக் கார்பிடிக்க மகனார் ஓட...**
**இன்றிருந்து சென்றவர்கள் திரும்ப வேண்டாம்;**
**ஈசன்வழி, தங்கியுள்ள வயோதி பர்கள்,**
**என்று,தமிழ்வீ ரர், மற்றை யோரைக் கூட்டிக்**
**குடாநாட்டை விட்டுவெளி யேறிச் சென்றார்.**

1995 முடியுந்தறுவாயில் பொதுமக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்படக்கூடிய நட்ட அளவுகளைக் குறைப்பதற்கும் போராளிகளின் அனாவசிய இழப்புகளைத் தடுப்பதற்கும் புலிப்படை தற்காலிகமாக வன்னிக்கு மக்களினுடன் இடம்பெயர்வதென முடிவுசெய்ய, ஓரிருநாள்களில் உலகு முன்னென்றும் கண்டிராத ஐந்து இலட்சம் மக்களின் வரலாற்று நகர்வு வெற்றியாக நடந்தேறியது. இக்கட்டத்தில், வீட்டிலே அக்கத்து வயோதிபர்களின் பொறுப்பில் தாயாரைவிட்ட மகன், சில நாள் வெளியேற்றம் செய்து தாயாரைக் காரொன்றில் கூட்டிச்செல்ல எடுத்த முயற்சி தோல்வியடைந்தது. தன்னைப் பெற்ற ஆசை அன்னையை விட்டு நிரந்தரமாகப் பிரிவதை அறியாதே, மகன் பிரிந்தார்.

**தனித்துவிட்ட தாயாரைச் சொந்த வீட்டில்**
**துணையிருந்த பக்கத்து முதியோர் பார்த்தும்**
**இனித்தாங்க முடியாது இன்னல், என்று**
**ஈஸ்வரனை நாடிஅவள் வேண்டிக் கொள்ள**
**கனிந்துவிட்ட எண்பத்தெட் டாம்வயதில்**
**காலன்,அவ் உத்தமியின் உயிரைக் கொண்டு**
**பனிமலையில் பரமபிரான் பாதம் வைத்தான்**
**வாழ்ந்திடுவோம், நாம்,அவரின் நாமம் போற்றி!**

இக்கட்டத்தில்கூடத் தபால், தொடர்புச் சாதனங்கள் அற்ற நிலை எமக்குத் திரும்பவும் எமனாகியது. தனிச்சிறந்த தாயாரை, முதிய நண்பர், தகனஞ்செய்ய முடியாது. தமக்கு இயலுமான வழிகளிலே தூக்கிச் சென்று அடுத்தவீட்டுக் காணி ஒன்றில் விதைத்தனர். சாவகச்சேரியில் வசித்துவந்த மகன்கூட அன்னையாரின் சுகமோ செய்தியோ வாரங்களாக அறிய முடியவில்லை. 1996 தைமாதந்தான் மகனிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதில் எம் தாயார் மார்கழி 20ந் திகதி சிவ பதமடைந்தார் என எழுதியிருந்தார். நாங்கள் உடனே இலண்டனில் அவரின் ஈமக் கிரியைகளைக் கிட்டிய இனத்தார் சமூகத்தில் நடத்தினோம். தாயார் 27-12-1995 இல் இறந்த நிசச்செய்தியை 1997இலேயே அறிந்தோம். ✱

# பவளவிழா நாயகன் பல்துறைச் சாதனையாளன்
# பேராசிரியர் கா. சிவத்தம்பி

ஐ.தி. சம்பந்தன்

சமூக சீர்திருத்தவாதியாக, முற்போக்காளராக, தன்னை அடையாளம் காட்டிச் சமுதாயத்தில் கால்பதித்த தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி இன்று உலகில் பல்துறை விற்பன்னராக விளங்குகிறார்.

பவளவிழா நாயகனாக இன்று தமிழுலகத்தில் பலரது வாழ்த்துக்களுடன் தமிழ்த் தேசியத்திற்குக் குரல் கொடுத்து ஆணித்தரமான கருத்துகளை மிகத்துணிவுடன் வெளியிடும் வடமராட்சி வீரனாக விளங்குகிறார்.

தமிழீழம் கிடைக்கும் வரை நீடூழிக் காலம் வாழ்ந்து தமிழ்ப்பணி, அரசியல் பணியாற்ற வேண்டுமென முதற்கண் அவரைச் சுடரொளி வாழ்த்துகிறது.

எமது சகோதர வெளியீடான ஞானம் 84 இதழ் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் பவள விழா மலராகப் பாரிய தகவல்களுடன் வெளிவந்துள்ளது. தமிழுலகம் அந்த ஆசிரியரைப் பாராட்டுகிறது. ஒரு தமிழ்ப் பேரறிஞரின் சாதனைகள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. சுமார் 50 வருடத்திற்குப் பின்னர் இந்தப் பவள விழா மலரை ஆய்வு செய்பவர்கள் தேடித்திரிவர். எனவே எல்லா நூல்நிலையங்களிலும் ஞானம் பவள விழா மலர் பேணப்பட வேண்டும். முதலில் பேராசிரியரை ஓர் இலக்கிய நோக்கில் பார்ப்போம் - அவரது இலக்கியப் பணி தஞ்சாவூர் பல்கலைக்கழக பெ. மாதையன் பார்வையில்-

பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி எதையும் சமூக இருப்பில் வைத்தே சிந்திக்கக்கூடிய மார்க்சீயவாதி, மார்க்சீயத்திறனாய்வாளன். இவர்தம் ஆய்வுகள் எல்லாம் வரலாற்றுப் பொருள் முதல் வாதமெனும் ஆய்வு நெறியை ஆதாரச் சுருதியாகக் கொண்டே உருப் பெற்றுள்ளன. இந்த அறிவியல் பார்வை பண்டைய இலக்கியம், இலக்கணம், நாடகம், நாவல், சிறுகதை, தனித்தமிழ், திராவிட இயக்கம் என அனைத்துப் பொருண்மைகளும் பற்றிய ஆய்வுகளில் புதிய பரிமாணங்களை முன் வைத்துள்ளது. இந்த நோக்கில் 'தமிழின் இலக்கிய வரலாற்றை வரலாற்றெழுதியல் ஆய்வு நோக்கில் ஆய்ந்துள்ள 'தமிழில் இலக்கிய வரலாறு' எனும் ஆய்வு நூலின் ஆய்வுப் பரிமாணங்களை முன் வைப்பதன் வழி அவர்தம் சமூக அக்கறையுடனான ஆய்வுப்போக்கை-ஆய்வு நோக்கை வெளிப்படுத்துவதோடு தமிழகக் கல்விச் சூழலையும் வரலாற்றெழுதியலைச் செயற்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளையும், செயல்முறைகளையும் வெளிக்கொணர்ந்தார்.

முற்போக்குவாதிகள் சமயநம்பிக்கை அற்றவர்கள் என்ற கருத்துப் பரவலாக உண்டு. அவர்கள் கடைப் பிடிக்கும் கொள்கைளை அடிப்படையாக வைத்துத் தெய்வ நம்பிக்கை அற்றவர்களென்று கூறமுடியாது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தம்மை ஒரு பண்டிதர், தமிழாசிரியர், சமயபக்தி மிகுந்தவர், அந்தப் பரம்பரையில் தோன்றியவர், காலத்திற்கேற்பச் சில முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் பரம்பரைப் பாரம் பரியத்திலிருந்து விலக முடியாது என இனங்காட்டுகிறார்.

திரு. சிவத்தம்பி என்ற பெயர் சூட்டப்பட்டதற்குக் காரணகர்த்தவாக இருந்தவர் யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் அவர்கள். சித்தரைப் பித்தர், விசரர் என்று கூடக்கூறுவர். ஆனால் சித்தர் வாயிலிருந்து பிறக்கும் வார்த்தைகள் தெய்வ வாக்குகள் என்பதை யோக சுவாமிகள் நிரூபித்துள்ளார். யோக சுவாமிகளின் பக்தர்கள் யோகர் சுவாமிகளின் திருவாக்குகளினால் பயனடைந்த வரலாறு உண்டு.

'எல்லாம் உண்மை, என்றோ முடிந்த முடிவு, யாம் ஒன்றும் அறியோம்' என்ற யோகர் சுவாமிகளின் வாக்குகள் பொன்னானவை. திரு. சிவத்தம்பி அவர்களின் தந்தையார் யோகர் சுவாமிகளின் பக்தன். யோகர் சுவாமிகள் அவருடைய தந்தைக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் அக்குழந்தை பிற்காலத்தில் பேரறிஞன் ஆவான் என்றும் கூறியதன் காரணமாக சிவத்தம்பி என்ற பெயரைச் சூட்டியதாகக் கதை ஒன்று உள்ளது. யோகர் சுவாமி கூறியது போன்ற இன்று ஒரு தமிழ்ப் பேரறிஞராக விளங்குகிறார். அவர் எந்த முற்போக்குக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும் குடும்பப் பாரம்பரியத்தை அறுத்து எறிய முடியாது. தமிழர் பாரம்பரியம் தான் தமிழனாக வாழ வழி செய்வது போல ஒரு குடும்பத்தில் பாரம்பரியம்தான் அவரைச் சமுதாயத்தில் அங்கீ கரிக்கப்பட்ட மனிதனாக அடையாளம் காட்டி நிற்கிறது.

ஞானம் ஆசிரியர் திரு. ஞானசேகரன் நேர்காணலில் வெளியிட்ட செய்தியில் திரு. கா. சிவத்தம்பி அவர்கள் குடும்பப் பாரம்பரியத்திலிருந்து வழுவவில்லை என்பதை உறுதி செய்துள்ளார்.

"நான் தஞ்சாவூரில் 1982 ஆம் ஆண்டு இருக்கும் போது இப்பொழுது முக்கியமான எழுத்தாளராகக் கருதப்படும் பொன் வேலுசாமி என்னிடம் கேட்டார். 'என்ன நீங்கள் 'முருகா, முருகா' என்று அடிக்கடி சொல்கிறீர்கள்' என்று. இது என்னுடைய தகப்பனார்,

என்னுடைய தாய்மாமன் வழியாக வந்த விடயம். அவர்கள் அடிக்கடி 'வேலாயுதம்' என்பார்கள். நானும் 'வேலாயுதம்' என்று சொல்லுவேன். என்னுடைய பேரன் கேட்கிறான்? வேலாயுதம் யார் அடிக்கடி கூப்பிடுகிறீர் களென்று? நான் முருகா முருகா என்று சொல்வதைப் பார்த்து தஞ்சாவூரில் வேலுசாமி கேட்டார். 'என்ன பெரிய மார்க்ஸிஸற் என்றெல்லாம் பேசுகிறீர்கள். நீங்கள் எல்லாவற்றிற்கும் 'முருகா' என்கிறீர்களே? என்று. அதற்கு நான் சொன்னேன். எனக்கு வயிற்றுக்குள் குத்தி னால், 'மார்க்ஸே' என்று கத்தவா? ஒருவர் பிள்ளை யாரே என்பார். இன்னொருவர் அம்மனே என்பார். இந்த வளர்ச்சிகளை நாங்கள் பார்க்க வேண்டும். இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவருடைய பின்னனி யைக் கவனிக்க வேண்டும். இயன்றளவு புத்திபூர்வமாக வும் தொழிற்பட வேண்டும். நாங்கள் வேர்களிலிருந்து அறுந்தவர்களாகவும் இருக்க முடியாது. இந்தப் போக் கிலேயே போகிறதுக்கான ஒரு நிலையை அந்தக் கண்ணோட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டும். அதனை எங்களுடைய சமூக வாழ்க்கையினுடைய இலட்சிய மாகக் கொள்ள வேண்டும். ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை என்று ஒரு வரலாற்று ஆசிரியன் கூறி யதைப் பண்டாரநாயக்காவும் சொன்னார். ஆனால் ஓடுகிறபொழுது எல்லாம் சங்கமிக்கத்தான் செய்யும். அந்தச் சங்கமத்தில் ஒரு தெளிவு இருக்க வேண்டும். அந்தச் சங்கமத்தின் தெளிவு என்னிடமிருக்கிறதா? தெரிய வில்லை. ஆனால் சங்கமம் நிச்சயமாக இருக்கிறது.

பிரபல இலக்கிய திறனாய்வாளரும் எழுத்தாளரு மாகிய திரு. கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் பார்வையில்:

## 21 ஆம் நூற்றாண்டு புலமையும் ஆய்வறிவும் இணைந்த உலகத் தமிழன்

ஈழத்தின் வடக்கிலுள்ள கரவெட்டியில் பிறந்து உலக ஆய்வாளர்கள் மத்தியில் ஒருவனாக விளங்கும் ஒருவனுக்கு 75 வயது கடந்த மே மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகியது. அவன் பெயர் கார்த்திகேசு சிவத்தம்பி. அவன் வெறுமனே தமிழறிஞன் அல்லன். தமிழ்ப் புலமையுடன், பல்நெறித் துறையறிவும் கொண்டு செல் நெறிகளை நன்கு பகுப்பாய்வு செய்து நமக்கெல்லாம் வழிகாட்டியாகவும் செயற்பட்டு வருகின்றான். கலை, இலக்கியம் சம்பந்தமாக மட்டுமன்றி, வரலாறு, சமயம், சமூகம், நாடகம், சினிமா போன்ற இன்னோரன்ன துறைகளிலும் பரிச்சயமும் திறனாய்வுப் பிரயோகமும் கொண்டு விளங்குகிறான். அவன் ஆங்கில இலக்கி யத்தை ஒரு பாடமாகக் கலைமாணிப் பட்டத்திற்காகப் பயிலவில்லையாயினும் அண்மைக்கால ஆங்கில இலக்கிய திறனாய்வுப் போக்குகளையும் கிரேக்க பண்டைய நாடகத்துறை அனுசரணைகளையும் நன்கு அறிந்து வைத்து ஒப்பியல் ரீதியாகப் பகுப்பாய்வு செய்யும் பக்குவத்தைப் பெற்றுள்ளான்.

அவன் வெறுமனேயொரு விரிவுரையாளன் அல்லன், அல்லது பேராசானுமல்லன். அவற்றிற்கும் மேலாக ஆய்வுத்தளத்தை எட்டியவனுமாவான். அவனது அளப்பரிய ஆற்றல்கள், செயற்பாட்டிலும் பரிமளித்தது. அவன் ஒரு நடிகன், நெறியாளன், தமிழாக்கம் செய்பவன். சைவ சமய ரீதியில் பார்க்கும்பொழுது அவன் ஒரு ஞானகுரு. துணிவும் ஆற்றலுமிக்க ஒரு பேராசான், பல்கலைக் கழகப் பேராசிரியர் பலர் அவர்கள் சார்ந்த அத்துறைகளின் வட்டத்துக்குள்ளே நின்று விடுகின்றனர். மேற்கொண்டு பல்துறைப் பணிகளில் ஈடுபடும் துணிவு, ஆற்றல் அவர்களிடத்தில் இல்லை. ஆனால் ஒரு இனத்தின் சமூகத்தின் நலன் கருதி பல்துறைப் பணிகளிலும் ஈடுபடும் பேராசிரியர் கள் மிகச் சிலர். அவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுவர் அகவை 75 இல் வாழ்ந்துகொண்டிருக் கும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள். அவர் தமிழ், கலை, இலக்கியம் அரசியல், சமூகம் ஆகிய துறைகளில் துணிவுடன் கால் பதித்தவர். நெருக்கடியான கால கட்டங்களில் ஊடகங்களுக்கு அரசியல் கருத்துக்களை வழங்கி வந்தவர். அவர் கருத்துகளுக்கு சர்வதேசரீதி யான பார்வைகள் இருந்தன.

*

(அடுத்த இதழில் தொடரும்)

## தழைக்குமா தமிழ்?

**கவிவேந்தர் கா. வேழவேந்தன்**

'டாடி'என்றே அழைக்காதீர்; இனிமை தோய
தண்டமிழில் 'அப்பா'வென் றழைத்தி டுங்கள்!
'மீடியா'எனமொழிய வேண்டா; நல்ல
மென்தமிழில் 'ஊடகங்கள்'எனக்கூ றுங்கள்!
'மூடில்லை' எனப்பேசல் வேண்டா; 'மூளை
முனைப்பில்லை' எனத்தமிழில் பேசி டுங்கள்!
'பாடி'என்றே சொல்லாதீர்; அழகாய் நந்தம்
பழத்தமிழில்'உடல'மென்றே கூறி டுங்கள்!

'சூப்பர்' என்றே ஏன்கூறல் வேண்டும்? சொந்தச்
சுவைத்தமிழில் 'மிகநன்றே' என்றால்என்ன?
'பேப்பர்'என்றே ஏன்மொழிதல் வேண்டும்? பேசும்
பேச்சினிலே 'தாள்'என்றால் தவறா? நாமும்
'சாஃப்ட்'என்றே ஏன்பேசல் வேண்டும்? நந்தம்
தாய்த்தமிழில் 'மென்மை'என்றால் புரிந்தி டாதா?
'சேஃப்டி'இல்லை எனப்புலம்பும் நீங்கள், தூய
தேன்தமிழில் 'காப்பில்லை' என்றால் என்ன?

'மம்மி'என்றே பெற்றவளைப் பிணமாக் காமல்
மதுத்தமிழால்'அம்மா'வென் றழைத்தால் தப்பா?
'டம்மி'என்று கூறுவதை மாற்றி, நந்தம்
தண்டமிழில் 'போலி''எனச் சொலக்கூ டாதா?
'செம்மொழி'யாய் நம்மொழியை அறிவித் தென்ன?
சேய்த்தமிழர் தாய்த்தமிழை மிதித்து விட்டுத்
தம்மொழியாய்த் 'தேம்ஸ்மொழி'யைத் தலையில் வைத்தால்,
சாகாமல் தீந்தமிழும் வாழ்வ தெங்கே?

# நளிர்★ சுரம் நீங்கப் பாடியது

## திருஞானசம்பந்த நாயனார் புராணம்

இடைக்காடு சயம்பு, இலண்டன்.

திருச்செங்கோடு என்று தற்காலத்தில் வழங்கும் தலம்-திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்று முன்னாளில் வழங்கியது. முன்னாளில் சோழ நாடு என்று வழங்கிய நாட்டில் கொங்கு நாடு என்று அழைக்கப்பட்ட பகுதியில் உள்ளது. இந்தத் திருத்தலம் சிவனுக்கும் முருகனுக்கும் சிறப்பான தலம். சிவன் மாதொரு பாகனாய் மூலத் தானத்தில் எழுந்தருளியிருக்கும் கோலம், கோவில் மலையுச்சியில் இருக்கிறது.

திருஞான சம்பந்த நாயனார் யாத்திரையாய் அங்குச் சென்று வணங்கிவிட்டுச் சில தொண்டர்களை அங்குத் தங்கி இருக்கப் பணித்து அயலிலுள்ள தலங்களுக்குப் போயிருந்தார். அவர் திரும்பி வந்தபோது அங்குத் தங்கி இருந்த தொண்டர்கள் நோய் கண்டு வருந்திக் கொண்டிருந்தனர். இந்த நாட்டுப் பகுதியில் இயல்பாகக் குளிர்சுரம் இருக்குமாம். இதை மலைச்சுரம் (Malaria) என்றும் சொல்வார்கள். முன்னர்க் குளிர்வந்து, நடுங்கிப் பின் காய்ச்சல் வந்து வருத்தும், எங்கள் நாட்டில் 'குலைப்பன் காய்ச்சல்' என்பார்கள். நாயனார் வந்ததும் தொண்டர்கள் முறையிட்டார்கள். நாயனார் சூழலையும் காரணத்தையும் உணர்ந்தார்.

**"இந்நிலத்தின் இயல்பெனினும் நமக்கெய்தப் பெறாஎன்று**
**சென்னிமதி அணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார்"**

இந்தப் பகுதி நாட்டில் மலைகுன்றுகள் காடு உண்டு. இது இங்கே இயல்பு. உயிர்களின் கன்மத்தால் வருவதன்று. ஆயினும் இந்நோய் சிவனடியாரைப் பீடிக்கக் கூடாது என்று இரங்கி "முன்னவனார் அருள் தொழுதே திருப்பதிகம் பாடுவார்". இறைவனுக்கே முறையிடுவோம் என்று பாடினார்.

### தேவாரம்

**அவ்விளைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃ்தறிவீர்**
**உய்விளை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே**
**கைவிளை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெம்மைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.**

சிவபெருமான் ஆலகால விடத்தை விழுங்கினார். கழுத்து அந்த நஞ்சை ஏற்று வைத்துக் கொண்டது. அதனால் தேவர்கள் மட்டுமல்லர் உலகமே அழியாமல் காப்பாற்றப்பட்டது. நீல நிறமாகி நின்ற அந்தத் திருநீல கண்டந்தான் காப்பாற்றியது. திருநீல கண்டத்துக்கு வணக்கம்! அப்படியே அடியவராகிய எம்மையும் எந்த வினையும் வந்து பாதிக்காது. திருநீலகண்டத்தின் மீது ஆணை! என்று பாடினார். திருநீல கண்டநாயனார் சரித்திரத்திலே "திருநீல கண்டத்தின் மீதாணை" என்ற சத்தியம் எவ்வளவு உறுதியாய் நின்றதென்பதையும் முத்திப் பேறு சித்தித்ததையும் நாம் அறிவோம்.

முற்பிறவிகளில் செய்த வினைகள் இப்பிறவியில் பயன்தரும் என்பதை அறியுங்கள். தீவினைகளின் பயனில் நின்றும் தப்பும் வழியைப் பிடிக்காமல் இருந்தால் அது உமக்குத் தீங்காகும். சரியை கிரியை முதலிய கைவினைகளைச் செய்து இறைவனை வழிபட்டால் தீவினை பாதிக்காது. வலியிழந்த நிலையில் தான் நம்மை வந்து சாரும். அவ்வகையே நாம் சிவனடியாராக இருக்கின்றோம். ஆகையால் செய்வினை, அதாவது நாம் செய்த வினையோ, பிறர் எமக்குப் பாதகமாகச் செய்த வினையோ, செய்வினை, எம்மைப் பாதிக்காது. பாதிக்கக் கூடாது. திருநீல கண்டத்தின் மீது ஆணை! இது முதலாவது பாடல். அடுத்துவரும் பாடல்களில் சரியை கிரியை வழிபாடுகளைச் சொல்கிறார். பூ இட்டு வணங்குவதைக் கூடிய வகையால் உணர்த்துகிறார். தாமே பூப்பறித்துப் பூசை பண்ணுவது தான் பயன்கொடுக்கும். நாயனார் திருக்கடைக் காப்பு என்னும் கடைசிப் பாடலையும் பாடிப் பதிகத்தை நிறைவு செய்தார். அவர் குறித்த ஆணையின் பயனாக அந்தத் தீய பிணி அந்தக் கோவில் சூழல் மட்டில் அல்லாமல் கொங்கு நாடு முழுவதையும் விட்டு நீங்கியது. "தீய பனிப்பிணி அந்நாடடங்கவுந் தீர்ந்தது அன்றே" அன்றைக்கே தீர்ந்து விட்டது என்று சேக்கிழார் அறிவிக்கிறார். "தொல்லுலகில் நல்லார் ஒருவருளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்று பிற்காலப் புலவர் வாக்குளது.

இந்தப் பதிகம் நீடித்த நோயினாற் பாதிக்கப் பட்டோருக்குப் பயன்தரும். ❋

★ (நளிர் - குளிர்)

---

**அன்பார்ந்த சுடரொளி வாசகப் பெருமக்களே!**

இலண்டன் சுடரொளி இதழின் மலேசியப் பிரதிநிதியாக இதுகாறும் செயற்பட்டுவந்த திரு. **ஈழவேங்கை** தமது தனிப்பட்ட காரணங்களுக்காக மலேசியப் பிரதிநிதிப் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார். எனவே இலண்டன் சுடரொளி தொடர்பாக வாசகர்கள் / சந்தாதாரர்கள் எவரும் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். மேலும் இலண்டன் சுடரொளியின் மலேசியத் தொடர்பாளராகத் திரு. **இளங்கோ இராஜசிங்கம்** (பேசி : 017-3793997 மின்னஞ்சல் : Pooganesvari.Arumugan@nielsen.com) பணியாற்றுவார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஐ.தி. சம்பந்தன்,** *பிரதம ஆசிரியர்.*




# THE LEGACY OF THE PIONEERS 125 YEARS OF JAFFNA TAMILS IN MALAYSIA





பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்தில் வேலை வாய்ப்பை/பொருளீட்டலை நோக்கமாகக்கொண்டு ஈழத் தமிழர்கள் மலேசியாவிற்குக் குடியகல்வுகளை மேற்கொண்டார்கள். இக்குடியகல்வில் இப்போதுள்ளது போன்ற உயிராபத்திற்காகப் புலம்பெயர்தல் என்ற நிர்ப்பந்தம் இருக்கவில்லை. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விருப்பின் பேரிலேயே வேலை தேடிச் சென்றார்கள். அப்படியாக யாழ்ப்பாணத்திலிருந்து மலேசியாவிற்கு ஈழத் தமிழர்கள் சென்று 125 ஆண்டுகள் ஆகிவிட்டது.

வளப்படுத்தப்படாத மலேயாவிற்கு ஆரம்ப நாள்களில் வந்தவர்கள் கொடிய நோய்களுக்கு மத்தியில், தங்கள் குடும்பங்களைப் பிரிந்து, தனிமையில் பல இன்னல்களைக் கடந்து, பெரும்பாலும் தொடர்வண்டித் துறை, நில அளவைத் துறை, பொது அலுவலகத் துறை போன்ற துறைகளில் ஆரம்ப கட்ட உத்தியோகத்தர்களாகச் சேர்ந்து படிப்படியாக உயர் பதவிகளை அடைந்தார்கள்.

இப்படியாக யாழ்ப்பாணத்திலிருந்து மலேசியாவிற்கு வந்த தமிழர்களின் 125 வருட காலத்தின் பதிவாக "The Legacy of the Pioneers - 125 years of Jaffna Tamils in Malaysia" என்ற நூல் ஆங்கிலத்தில் கடந்த வருட இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலானது A4 அளவு தாளில், 654 பக்கங்களுடன், 2.5kg நிறையில், கெட்டியான கட்டமைப்புடன் சுமார் 400க்கும் அதிகமான புகைப்படங்களுடன் நேர்த்தியான வடிவமைப்பில் வந்துள்ளது.

இந்நூலை யாழ்ப்பாணத்தைத் தாயகமாகக் கொண்ட செல்வரத்தினம் அவர்களும் அப்புத்துரை அவர்களும் கூட்டாகத் தொகுத்துள்ளார்கள். இவர்கள் இருவருமே மலேசியாவில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள்.

இந்நூலானது இரண்டு நிலைகளில், கெட்டியான அட்டையுடன் 175.00 மலேசியன் வெள்ளிக்கும், மலிவுப் பதிப்பு 110.00 மலேசியன் வெள்ளிக்கும், விற்பனைக்கு வந்துள்ளது.

இந்நூலை எழுதுவதற்காகத் தொகுப்பாளர்கள் இருவரும் மூன்று வருடங்களுக்கு மேலாகக் கடின ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். மலேசிய அரசாங்கத்தின் ஆவணத்துறையில் இருந்தே பல அரிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு 1879 இல் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் எந்த நாளில், எந்தப் பதவியில், எந்தத் துறையில் சேர்ந்துள்ளார் என்பதும் அவருக்கு அன்றைய திகதியில் வழங்கப்பட்ட சம்பளம் என்ன? அவர் எந்த வருடத்தில் ஓய்வு பெற்றார்? அவரது ஓய்வூதியம் என்ன? என்பது போன்ற தகவல்கள் இந்நூலில் உள்ளன.

மலேசிய அரசாங்கத்தின் ஆவணத் துறையின் வெளியீடுகள் தவிர சுமார் 60க்கு மேற்பட்ட நூல்கள், வெளியீடுகள், குறிப்புகள், ஆண்டு மலர்கள் போன்றவற்றில் இருந்தும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. முப்பது வருடங்களுக்கு முன்னர் வெளியான "The Hundred Years of Ceylonese in Malaysia and Singapore" என்ற நூலும் அதன் ஆசிரியர் Dr. S. Durai Raja Singam அவர்களின் தனிமனித முயற்சியுமே தங்களுக்கு ஒரு வழிகாட்டலாக இருந்ததாகத் தொகுப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மலேசியா அரசாங்கத்தில் அதியுயர் பதவிகளை வகித்தவர்கள், அதியுயர் விருதுகளைப் பெற்றவர்கள், வியாபார ரீதியாக உயர்நிலையில் உள்ளவர்கள், சர்வதேச அமைப்புகளில் உயர் பதவிகளில் உள்ளவர்கள், மலேசியாவிற்காக ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய யாழ்ப்பாணத் தமிழர்கள், மலேசியாவின் புகழ்பெற்ற இரட்டைக் கோபுரத்தில் (Petronas-Twin Towers) யாழ்ப்பாணத் தமிழருக்கு உள்ள உரிமை, பற்றிய பல தகவல்கள் ஒருங்கே இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

மலேசியாவில் யாழ்ப்பாணத் தமிழர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், சமயப் பணிகள், கட்டிய கோவில்கள், கலை கலாச்சாரப் பணிகள், பொழுதுபோக்கு விடயங்கள், மருத்துவப் பணிகள், விளையாட்டுகள் என்று ஒவ்வொரு விடயமும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலிற்கு முன்னாள் மலேசிய உயர்நீதிமன்ற நீதிபதியும் உலக வங்கியில் பணியாற்றியவருமான Dato' seri Dr Visu Sinnadurai அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இந்நூலினைத் தொகுப்பாளர்களே பதிப்பித்து உள்ளனர். அவர்களின் தொடர்பு முகவரி :


T. Selvaratnam & S. Apputhurai
6, Jalan Chekor, off Jalan Halimahto
Kuala Lumpur 580 000, Malaysia.
e-mail : jaffnalegacy@gmail.com
Tel : 006-03-79816416 Fax : 006-03-22872657


சுடரொளி வெளியீட்டுக் கழகத்திலும் இந்நூல் விற்பனைக்குக் கிடைக்கும். Chuderoli Publication Society
15, Rutland Road, London E7 8PQ, UK

## சமத்துவம் பருகப் புரட்சியே வருக!

புதுமைப் பாவலர் பொன்னரசு, பெங்களூர்

மனிதர்கள் தோன்றிய நாள்முத லாக
மதவெறி நிறவெறிக் கொடுமைகள் எத்தனை
தனிவே றினமென மனிதனை மனிதனே
தனங்களைப் பூட்டி ஒட்டுதல் போலே
குனியக் குனிய எளியரை வலியவர்
குட்டுகள் வைத்தனர்; கும்பிட வைத்தனர்.
இனிஇதற் கொருவழி இல்லையென் றிருக்க
இருந்தது ஒருவழி மக்கள்தம் புரட்சியே!

முடியுடை மன்னர்கள் கொடுங்கோல் ஆட்சியை
மூர்க்கராம் ஆதிக்க அதிபர்கள் ஆட்சியை
முடிவுக்குக் கொணர முனைந்தநல் மக்களே
முற்றிலும் அவர்களை எதிர்த்திட லாயினர்
குடியர சாட்சிக்குக் கொடியைப் பிடித்துக்
குன்றாத் தீஞ்சுவை இன்பம் அடைந்தனர்;
அடிமை இனிஇங்கு எவரும் இலைஎன
ஆனந்தத் துடனே கொண்டாடு கின்றனர்.

தென்ஆப் பிரிக்காவின் தன்மானச் சிங்கம்
பொன்மன நெல்சன் மண்டலே தன்னைச்
சின்னத் தனத்தோர் சிறையில் அடைத்தே
இருபத் தாறு ஆண்டுகள் வதைத்தனர்.
கண்விழித் தெழுந்தனர் கனிவுடை மக்கள்
கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவுகள் கட்டினர்.
மண்ணின் மைந்தர் மண்டலே தன்னின்
மணித்திரு கழுத்தில் மாலைகள் சூட்டினர்.

அஞ்சா நெஞ்சுடை விஞ்சும் புலிகளின்
ஆற்றல் மிக்க வான்வெளித் தாக்கால்
சிங்கள வஞ்சகர் சிதைந்திடும் போது
வெங்கலத் துடல்பெற்ற தமிழ்ப்படை வெல்லும்!
தங்கிய ஈழம் தம்பியின் தலைமையில்
தரணியில் வளமுடை நாடாய் விளங்கும்
எங்கும் இல்லாத் தனித்தமிழ் நாட்டில்
என்தாய் செம்மொழி யாள்கொலு விருப்பாள்

கண்ணாம் உலகின் நன்நிலம் பொதுவென்ற
கண்ணியப் பொதுநல வாழ்வியல் அறிவியல்
மண்ணில் உழைப்பே மாபெரும் சிறப்பென்ற
மந்திரம் தன்னைச் செயல்படச் செய்வோம்!
எல்லா மக்களும் உரிமை பெற்றிட
ஏற்றத் தாழ்வுகள் ஒழிந்து மடிந்திட
வல்லோ ரெல்லாம் நல்லோர் எனும்படி
வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து நிற்போம்!

புரட்சியே மனிதனின் புத்துணர் வாகும்
புரட்சியால் மட்டுமே சரிசம உரிமையைப்
பெற்றிட முடியும் அதனால் மக்கள்
கற்றுத் தேர்ந்து நடுநிலை அறிந்தால்
முற்றிலும் நம்மை நாமே உணர்வோம்!
வெற்றிகள் பெறுவோம், வேதனை ஒழிப்போம்!
வற்றாப் புரட்சியே வருக! வருக!
வாழ்ந்திடும் யாவர்க்கும் சமத்துவம் தருக!

## முன்னேறும் தமிழராவோம்!

முத்துமாணிக்கம், சிங்கப்பூர்

சிந்துவெளி நாகரிகம் சேதி சொல்லும்
செந்தமிழர் வரலாறும் தொகுத்துக் கூறும்
முந்தையர்கள் ஆண்டமுறை வகைப்ப டுத்தி
முனைவர்களும் ஆய்வுகளால் சொல்லு கின்றார்!

நாடாண்ட மூவேந்தர் தமிழர் என்றும்
நடந்துவந்த நிலமெல்லாம் தமிழ்தான் என்றும்
வீடெல்லாம் தமிழர்களின் வீடாம் என்றும்
வெற்றிகொண்ட தமிழர்களாய் வாழ்ந்தார் என்பர்.

நாடாண்டும் ஊராண்டும் நலம்ப தித்த
நற்றமிழர் இற்றையநாள் நலிந்த தென்ன?
கூடாத நட்புறவும் கொள்கைப் பற்றும்
கொண்டதொரு விருந்தோம்பல் குறைபா டாகும்!

வந்தாரை வாழவைக்கும் வகைமு கத்தான்
வழக்கமிதைக் கண்டறிந்த வஞ்ச கத்தார்
சொந்தங்கள் கொண்டாடி தமிழ்நி லத்தைத்
துண்டாடி வெற்றிவழி தேடிக் கொண்டார்!

மந்திரங்கள் தந்திரங்கள் மாயா சாலம்
மதவாதச் சாதிமுறை மார்க்க வேதம்
வந்தவிதம் அறியாத தமிழர் எல்லாம்
வலுவிழந்த குடிமக்கள் ஆனார் என்போம்!

முடிதாழ்ந்தார் அடிபணிந்தார் முறையும் கெட்டார்
முன்னேற்றப் படியெல்லாம் தவற விட்டார்
பிடிபட்ட கைதியெனத் தமிழ ரெல்லாம்
பிழைப்புக்கே வழிதேடத் தள்ளப் பட்டார்!

பிழைக்கின்ற வழிதேடிக் கடலைத் தாண்டிப்
பெருமளவில் சென்றவர்கள் அடிமைப் பட்டும்
மொழிமறந்தும் இனம்மறந்தும் வாழு கின்ற
முறையினிலே இற்றையநாள் தள்ளப் பட்டார்!

அருமைமிகு தமிழர்களே மனமு வந்தே
அவரவரும் சிந்தித்தால் ஒன்று பட்டால்
பெருமைமிகு தமிழரினப் பெயரும் ஓங்கும்
பேர்புகழும் தமிழரசும் அமையக் கூடும்!

பட்டறிவு மிக்கவர்கள் பணிமேற் கொண்டு
பாரெங்கும் வாழ்பவரை ஒன்று சேர்த்துத்
திட்டமுடன் செயல்பட்டால் வெற்றி காணும்
தென்மொழியின் அரசாட்சி வந்து சேரும்!

செந்தமிழர் படையொன்று அமைய வேண்டும்
திக்கெல்லாம் தமிழ்முழக்கம் செய்ய வேண்டும்
முந்தயநம் தமிழகமாய் மாற்ற வேண்டும்
முன்னேறும் தமிழர்களாய் வாழ வேண்டும்!

# ஈழத்து வரலாற்று மங்கையர்

தமிழரசி, இலண்டன்

ஈழத் தமிழராகிய நாம் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் தமிழ் மூதுரைக்கு இணங்க உலகெலாம் தழுவி வாழ்கிறோம். ஈழத்து மண்ணை மனத்திரையில் மீட்டிப்பார்ப்பதுடன் எங்கள் காலம் மெல்ல நகர்கிறது.

ஈழ வரலாற்றின் சுவட்டில் இருந்து ஈழத்து மங்கையர் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிய முடியுமா? இதிகாசத்திலும், புராணங்களிலும், சங்கத் தமிழிலும் ஓரிரு இடங்களில் பெண்களைக் குறிப்பிட்டிருப்பினும் அதனையும் நாம் கண்டு கொள்வதில்லை. இத்தகைய எமது போக்கு வருங்காலச் சந்ததியினர் நம் இனத்தை அடையாளம் காணமுடியாத நிலைக்கு இட்டுச் செல்லும். இந்த நிலை மாறவேண்டும்.

போன நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட ஈழத்தில் மட்டுமல்ல உலகெங்கும் பெண்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டார்கள். இது வரலாறு கூறும் கசப்பான உண்மை.

ஆனால் உலகெலாம் ஆணாதிக்கம் தலைவிரித்தாடிய பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈழத்து மாதர்கள் கலாச்சாரத்தின் விழுதுகளாக விளங்கியிருக்கின்றார்கள். அன்று தமிழ்ச்சாதியை ஈழமங்கையர் எனும் விழுதுகள் தாங்கி நிறுத்தியதால் இன்றும் எம் கலாச்சாரப் பண்புகளை இழக்காமல் இருக்கிறோம். அந்த விழுதுகள் எமக்குத் தந்து சென்ற கலாச்சார வரலாறு என்ன?

ஈழத்தின் முத்தும் மணியும், வாசனைத் திரவியங்களும் உலக மக்களைக் கவர்ந்து இழுத்த காலமது. ''யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்டால் நல் முத்துகளைப் பெறலாமென'' ஆசைகாட்டி எகிப்திய அரசனுக்கு புவனேகபாகு தூதும் அனுப்பினான். புவனேகபாகு இறந்ததால் யாழ்ப்பாண அரசு அப்படையெடுப்பில் இருந்து தப்பியது. முத்துச் சலாபத்திற்காக சிங்கள, கலிங்க, சாவக, தமிழக அரசர்கள் யாழ்ப்பாண அரசின் மேல் போர் தொடுத்த வண்ணம் இருந்தனர். போர்களில் ஆண்கள் மடிந்ததால் பெண்கள் நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்கும் நிலை ஏற்பட்டதாலோ, வழி வழி வந்த வழக்கத்தாலோ, அரசின் ஆதரவாலோ பெண்கள் பல துறைகளிலும் வேலை செய்தனர். இதற்கு வரலாற்று ஆசிரியர்களே விளக்கம் அளிக்க வேண்டும்.

ஈழத்துக் கடற்கரையில் நூற்றுக்கணக்கான நாவாய்களும் மரக்கலங்களும் வந்து பொருள்களை இறக்குவதும், ஏற்றுவதுமாக இருந்தன. வெளிநாட்டு வணிகர் மட்டுமன்றி மரக்கோவைகளில் (கப்பல்) ஆடவரும், பெண்டிரும் வந்திறங்கினர். அவர்கள் ஈழத்தின் முத்தையும், மணியையும், சங்கையும் அவற்றாலான நகைகளையும், பல வண்ணச் சேலைகளையும், அழகிய சித்திரங்கள் தீட்டிய மெல்லிய துணிகளையும், மருந்துகள், மூலிகைகள், யானைகள் போன்றவற்றையும் வாங்கிச் சென்றனர். இதனால் கடற்கரையோரம் பலாப் பழத்தில் ஈ மொய்த்ததுபோல் காட்சியளித்தது.

கடைகளில் ஈழத்துப் பெண்கள் பொருள்களை விலைக்கூறி விற்றார்கள். அவர்கள் காசு மட்டுமல்லாமல் தங்களுக்கு விருப்பமான பொருள்களையும் பண்டமாற்றாக வாங்கினர். இவற்றில் சில கடைகள் பனையோலையில் செய்த குடை நிழற்கீழ் இருந்தன. ஒரு கடையில் பனைமரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை ஒருத்தி வைத்து விற்றாள். அக்கடைக்கு வந்த வெளிநாட்டுப் பெண்ணுக்கு உணவு உண்ணும் பிழாவை தலைக்கு அணியும் அணிகலன் எனக் கூறி விசிறியுடன் விற்றாள். அவளது கடையில் பலவண்ணப் பாய்கள் இருந்தன. அப்பாய்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டன.

இன்னொரு பெண் முத்துகளையும், மணிகளையும், பவளங்களையும், சங்கு மணிகளையும், கோத்து அழகிய நகைகள் செய்து கடையில் விற்றாள். அக் கடையில் பல வண்ணங்கள் கொண்டு கீறிய பலவிதமான பலகைகள், காப்புகள், தலையணி, காதணி, காலணி போன்றவற்றின் சித்திரங்கள் இருந்தன. அவற்றைப் போல் விரும்பிக் கேட்பவர்கட்கு அதனைச் செய்து கொடுத்தாள். அவற்றைச் செய்வதற்காக அங்கே சில பெண்கள் வேலை செய்தனர்.

பல மொழிகள் தெரிந்த பெண்கள் தமக்குத் தெரிந்த மொழிகளைக் கிளி, சொல்லறி புள் (மைநா), போன்ற பறவைகளுக்குச் சொல்லிக் கொடுத்து, அவ்வவ் மொழி பேசுவோருக்கு அவற்றை விற்றார்கள். சிலர் மொழிபெயர்ப்பாளராயும், சிலர் ஒற்றர்களாயும் அரசுக்குக் கீழ் வேலை செய்தனர். ஒருத்தி காவலனுடன் சென்று வெளிநாட்டு வணிகரிடம் வரி அறவிட்டாள்.

சரஸ்வதி மகாலயம் என்று ஒரு சர்வகலாசாலை இருந்தது. (வித்தியாலயம் போல் மகாலயம்). இந்த சரஸ்வதி மகாலயத்தில் 'வான சாஸ்திரம், வர்ம சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், நயன சாஸ்திரம், கணித சாஸ்திரம், பரத சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களைக் கற்பித்தார்கள். குறிப்பாக வைத்திய சாஸ்திரத்தை பால ரோகம், வாதரோகம், பித்த ரோகம், சுர ரோகம், சன்னி ரோகம், வலி ரோகம், சல ரோகம், மேக ரோகம், குட்ட ரோகம், எனப் பல பிரிவுகளாகப் பிரித்துப் படிப்பித்தார்கள். வைத்திய சாஸ்திரத்தைத் 'திருவி' என்னும் பெண் கற்பித்தாள்,

விருப்புடன் வைத்திய சாஸ்திரம் விளக்கும்
திருவியெனும் தையல் துருவித் தெளிந்து
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததுபோல
நயனுடையவெல்லாம் நயந்தே சொல்லப்
பயனடைந்தார் ஆங்கே பயின்றோர் தாமே.

சுற்றிவரப் பூந்தோட்டத்தால் அமைந்த 'பல்லவ விசிகை' (விசிகை-வைத்தியசாலை) மருத்துவ ஆராய்ச்சிக் கூடமாக விளங்கியது. மருத்துவ ஆராய்ச்சியைப் பன்னிருவர் கொண்ட குழு செய்தது. அதில் 'உசிதன்' என்பவன் 'பிரமாணிகனாக' (ஆணை இடுபவன்) இருக்க அவன் மனைவி 'கமலபாணி' என்பவள் 'பொதுவியாக' இருந்தாள். அதாவது ஆராய்ச்சியின் முடிவை யாருக்கும் சார்பற்ற முறையில் தீர்மானிப்பவளாகத் திகழ்ந்தாள். கணவனும், மனைவியும் ஒரே இடத்தில் வேலை செய்த போதும், கணவன் இன்ன ஆராய்ச்சி செய்ய வேண்டும் எனக் கட்டளையிட மனைவி ஆராய்ச்சியின் முடிவை நிர்ணயிப்பவளாக விளங்கியது ஈழத்தமிழர் நாகரிகத்தின் செழுமையைக் காட்டுகிறது.

பயணம் செய்வோர் குதிரையிலும், தேரிலும், பல்லக்கிலும் சென்றதை வரலாற்றால் நாமறிவோம். ஆனால் ஈழத்தின் தெருவிலே யானை சிறுவீட்டையே இழுத்துச்சென்றது. அந்தத் தாமனை (பயணம் செய்யும் வீடு) உணவுப்பொருள்களையும், உடைகளையும், குழந்தைகள் தூங்கும் கட்டிலையும், ஆயுதங்களையும், யானைக்கு வேண்டிய தீனையும் (உணவு) சுமந்து சென்றது. 'கவிகை' என்பவள், யானையால் தாமனையை நடத்திச் சென்ற கணவனை, குழந்தையுடன் தாமனையுள் உறங்கவிட்டு, யானைக்கு நெல்லும் கரும்பும் கொடுத்துக் களைப்பாற விட்டாள்.

'மதயானை கட்டும் மன்னா எனை அழைத்துப்
போனால் இளம்பிடியைக் கட்டேனோ'

என்பது ஈழத்து நாட்டுப்பாடல். இப்பாடலைப் பாடியவள் இளம் பிடியைக் கட்டமாட்டேனா? என்று கேட்க, கவிகை பெரும்களிற்றையே கட்டித் தீனி போட்டிருக்கிறாள். (பிடி-பெண் யானை, களிறு-ஆண்யானை)

இதுபோன்ற தாமனைகள் பணக்காரரிடமே இருந்தன. அரசுக்குச் சொந்தமான தாமனையில் மருத்துவர்கள் சென்று மூலிகை ஆராய்ச்சி செய்தனர். அவர்கள் அதில் நோயாளியையும், ஆராய்ச்சிக்கு வேண்டியவற்றையும் ஏற்றிச் சென்றனர்.

ஈழத்தமிழர் நாகரிகம் 14-ஆம் நூற்றாண்டில் எத்தகைய உன்னத நிலையில் இருந்தது என்பதற்கு இந்த ஈழத்து வரலாற்று மங்கையரே ஆதாரம். நாட்டுக்காகவும், வீட்டுக்காகவும் வாழ்ந்து வரலாறாய் நிற்கும் அந்த மங்கையரை வாழ்த்துவோம்.

*பின்குறிப்பு : பாண்டியப் பேரரசின் மன்னனாக வீற்றிருந்த மாறவர்மன் குலசேகரபாண்டியனின் (1268-1310 A.D.), மகள் வீரமகாதேவி (1310 A.D.) இலங்கை வந்த பொழுது எழுதிய சுயசரிதையில் இவற்றைக் குறிப்பிட்டுள்ளான்.* ❋

## கவிஞர்களுக்கு மகுடம் சூட்டிய
# ஈப்போ தமிழர் திருநாள் விழா!

தென்மொழிப் பாவலர் மா. தமிழன்பன்



அண்மையில் ஈப்போ நகரத்தில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழா பல கவிஞர் பெருமக்களை ஒன்றிணைத்து மணிமகுடம் சூட்டிய மகத்தான விழாவாக அமைந்தது.

ஈப்போ தமிழர் திருநாள் விழாக்குழுத் தலைவர் தமிழ்ப் பெரியார் பி.கே. குமார் தொடக்கவுரை நிகழ்த்தி விழாவைத் தொடக்கி வைத்தார். மலேசியக் கவியுலகில் தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்துள்ள நாட்டுப்புறப் பாவலர் முத்துப் பாண்டியன் ஏற்பாட்டில் திறந்த வெளிப் பாட்டரங்கம் நடைபெற்றது. செந்தமிழ்க் கவிமணி வே. மகேந்திரன் தலைமையேற்க, நாட்டுப்புறப் பாவலர் முத்துப் பாண்டியன் வரவேற்புக் கவிதை வாசித்தார்.

கவிஞர்கள் பெர்னாட்சா தமிழர் உழைப்புக் குறித்தும் பொன். நிலவன் தமிழர் சாதனை குறித்தும், பொன். நாவலன் தமிழர் வெற்றி குறித்தும், ஆ.கி. டேவிட் கண்கவர் மலேசியா தலைப்பிலும், மா. தமிழன்பன் பொங்கல் தலைப்பிலும், மகாகவி இரா. பாண்டியன் தமிழர் திருநாள் தலைப்பிலும், எம்.கே. குணசேகரன், தமிழர் கல்வி குறித்தும், கோ.வி. மணிதாசன் தமிழர் பொருளாதாரம் குறித்தும், கவிச்சித்தர் பெ.கோ. மலையரசன் தமிழர் கலை குறித்தும் கவிதைகளைப் படைத்தனர்.

குன்றிலிட்ட ஒளிவிளக்காகத் திகழ்ந்து வருகின்ற மலேசியத் தமிழ்க் கவிஞர்கள் உலகளவில் புகழ் பெறவேண்டும் என்ற நோக்கில் ஏற்பாடு செய்யப்பெற்ற இப்பாட்டரங்கில் பங்கேற்ற கவிஞர்கள் அனைவரும் பட்டாடை போர்த்திச் சந்தனமாலையிட்டு, கண்கவர் தலைப்பாகையும் அணிவித்துச் சிறப்பிக்கப் பெற்றதோடு நற்சான்றிதழும் பொற்குவையும் அளித்துப் பாராட்டப் பெற்றனர்.

தமிழ்க் கவிஞர் நலம் பேணப் பல்வேறு செயல் திட்டங்களையும் பட்டியலிட்ட பாவலர் முத்துப் பாண்டியன் 'அவ்வப்போது இத்தகைய மரபு சார்ந்த கவிதைத் திருவிழாக்களை ஆங்காங்கே நடத்துவதுடன் உலகக் கவிஞர்களின் பார்வை நம் நாட்டுக் கவிஞர்கள் மீது திரும்பும் வகையில் மாபெரும் கவிஞர் மாநாட்டை நடத்த வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

கவிஞர் கூத்தரசனின் நன்றியுரைக்குப்பின் அறுசுவை உணவு விருந்துடன் விழா இனிதே முடிவுற்றது.

# இசை உலகின் இமயம் லயஞான குபேர பூபதி தட்சிணாமூர்த்தி

த. சிவசுப்பிரமணியம்



உலக வரலாற்றில் இமயமென உயர்ந்து நின்றவர் இணுவில் மண் தந்த தவில்மேதை தட்சிணாமூர்த்தி ஆவார். தாம் பயின்ற கலையின் தனித்துவத்தை உலகறியச் செய்த மாமேதை. தவில் வாசிப்பில் தமக்கெனப் புதுவழி சமைத்து அதை முன்னெடுத்துச் சென்று வெற்றிக் கொடி நாட்டியவர். தவிலுக்கு ஒரு தட்சிணாமூர்த்தி என ஈழத்தவரும் தமிழகத்தாரும் போற்ற உலகமே அதை ஏற்றுக்கொண்டது. அந்தளவு தூரத்திற்கு அவர் புகழ் வியாபித்திருந்தது. அவரது தவில் வாசிப்பின் பெருமையால் ஈழநாடு இன்றும் இந்தியாவின் கலைப் பாரம்பரியத்தை விஞ்சிப் பெருமை கொண்டு விளங்குகின்றது. ஈழத்தின் தனித்துவத்தைத் தன்னிகரில்லாத் தலைவன் தட்சிணாமூர்த்தி தம் தவில் வாசிப்பினால் நிலைநிறுத்திக் கலையுலகே வியக்கத்தக்க வகையில் பெருமை சேர்த்தவர்.

"மழையாகப் பொழிகின்றது தவில்
இடிமின்னல் இதோ யாவும்
அவர் தவிலில் வெடித்துக் கிளம்புகின்றது.
தாளம் தப்பாது கால்கள் நிலத்தை உதைக்கின்றன"

மேளத்தில் முத்து விரல்கள் விளையாடித் தாளலய ஞான தரிசனங்கள் காட்டிய நம் ஈழத் தவிலரசன், எழிலார் இசைக் கணித வேழமெனவே திகழ்ந்த வித்தகன். தவிலில் தாள வரிசையைத் தப்பாமல் இனிய லயத்துடன் இடையிடை புன்னகை, இடையிடை ரசிப்பு, இடையிடை சிரிப்பு, தட்சிணாமூர்த்தி யாவற்றையும் கலந்து வழங்கும் செம்மல். ஈடு இணையற்ற தவில் மேதை 'லயஞான குபேர பூபதி' என்று போற்றப்பட்ட தட்சிணாமூர்த்தி இணுவிலில் வாழ்ந்த பிரபல தவில் வித்துவான் விஸ்வலிங்கம் - இரத்தினம் தம்பதியினருக்குப் புத்திரராக 26-08-1933 இல் பிறந்தார். பெற்றோர் ஞானபண்டிதன் என்ற பெயரையே முதலில் வைத்தார்கள். பின்னர் அவரைத் தட்சிணாமூர்த்தி என்று அழைக்க ஆரம்பித்தனர். இப்பெயர்தான் இவரைக் கலைவாழ்வில் நன்கு பிரதிபலிக்கச் செய்தது.

அவரது மூத்த அண்ணன் உருத்திராபதி, இன்னோர் அண்ணன் கோதண்டபாணி, மற்றோர் அண்ணன் மாசிலாமணி ஆகியோர் சிறந்த நாதஸ்வர வித்துவான்கள். இவர்களுள் மாசிலாமணி சிறந்த பாடகராகவும் நாடக நடிகராகவும் விளங்கியவர். தட்சிணாமூர்த்தியைத் தந்தையார் விசுவலிங்கம் தவில் மேதையாக ஆக்கிப் பார்க்க விரும்பினார். மூன்றாம் வகுப்புடன் தன் படிப்பை முடித்துக்கொண்டு முதலில் தந்தையிடமே தவில் கற்றுக் கொண்டார். அக்காலத்தில் வாழ்ந்த பிரபல தவில் வித்துவான்களாகிய என். சின்னத்தம்பி, பீ.எஸ். இராஜகோபால், காமாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் சென்று, தவில் பயின்றார். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்ற முதுமொழிக்கமைய ஒரு நாளைக்குப் பதினாறுமணி நேரம் சாதகம் செய்து வந்தார். இப்பயிற்சி காரணமாக எட்டு வயதிலேயே மேளக் கச்சேரி செய்ய ஆரம்பித்துவிட்டார்.

சிறுவயதிலேயே தட்சிணாமூர்த்தியின் தவில் வாசிப்பு யாவரும் பிரமிக்கும்படியானதாகவும், நாதசுகமுள்ளதாகவும், லயவேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் இருந்தது. இந்தியப் பெருங்கலைஞரான நாச்சியார் கோயில் ராகவப் பிள்ளையிடம் மேலும் லயநுணுக்கங்களைப் பயின்று, அவருடன் சேர்ந்து தவில் வாசிக்கும் பேற்றைப் பெற்றார். தமது குருகுல வாசப்பயிற்சியைச் சுமார் ஒன்றரை வருட காலம் நிறைவேற்றிய தட்சிணாமூர்த்தியிடம் குரு கூறிய இதய வாழ்த்துகள் வீண் போகவில்லை. "உனக்கு இனிச் சொல்லித்தர என்னிடம் ஒன்றும் பாக்கியில்லை. ஒரு அபிப்பிராயம் காதிலே விழுவதற்குள் உன் கைகளில் அது ஒலித்து விடும்படி வரப்பிரசாதம் பெற்ற நீ ஊருக்குத் திரும்பலாம். மகோன்னதமான பெயரும் புகழும் உன்னை வந்து சேர அதிக காலம் இல்லை". ஆம். நாச்சியார் கோயில் ராகவப்பிள்ளையின் கூற்று தட்சிணாமூர்த்தியால் வெற்றி கொள்ளப்பட்டது.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய சிறிது காலத்தில் தந்தையார் காலமாகவே தம் மூத்த சகோதரி குடும்பத்துடன் வாழ்வதற்காக அளவெட்டிக்குக் குடிபெயர்ந்தார். அங்கு 1957இல் தவிற்காரர் செல்லத்துரையின் மகள் மனோன்மணியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் மூன்று ஆண் பிள்ளைகளுக்கும் தந்தையானார். இவருடைய மகனான உதயசங்கர் தந்தை தட்சிணாமூர்த்தியைப் போல் தவில் வாசிப்பதில் சிறு வயதிலேயே விற்பன்னராகி, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இசைப்பீடத்தால் 'கலாநிதி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1959ஆம் ஆண்டு தவில் மேதை தட்சிணா மூர்த்தி சென்னைத் தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்ட இசைவிழாவில் காருகுறிச்சி அருணாசலம் பிள்ளையின் நாதஸ்வரத்திற்குத் தவில் மேதை நீடாமங்கலம் சண்முக வடிவேல் அவர்களுடன் இணைந்து தவில் வாசித்துப் பெரும்சிறப்புப் பெற்றார். இந்த நிகழ்ச்சியை நேரடி ஒலிபரப்புச் செய்த அகில இந்திய வானொலி தாம் வழமையாகப் பன்னிரண்டு மணிக்கு முடித்துக் கொள்ளும் வானொலி நிகழ்ச்சியை அன்று நிறுத்தாது நிகழ்ச்சி முடியும் வரை ஒலிபரப்பினார்களாம்.

இந்தியப் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் களாகிய காருகுறிச்சி அருணாசலம், ஷேக் சின்னமௌ லானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், ரி.என். ராஜரத் தினம் பிள்ளை ஆகியோரின் அனேக கச்சேரிகளில் வாசித்த பாராட்டுகளையும், தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளார். ஈழத்திலும் இவருக்கு நாதஸ்வரம் வாசித்த திருநாவுக்கரசு, பி.எஸ். ஆறுமுகம், சாவகச்சேரி எம். பஞ்சாபிகேசன் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர் களாவர்.

தவில் மேதை தட்சிணாமூர்த்தியின் அபார திறமை கண்ட இந்தியத் தவில் மேதை நீடா மங்கலம் சண்முக வடிவேல் அவரை இந்தியாவுக்கு அழைத்துக் கச்சேரிகள் நடாத்தப் பெரும் பங்காற்றினார். இந்தியா வில் அநேக கச்சேரிகளில் நீடா மங்கலம் சண்முகவடி வேலுடன் சேர்ந்து தவில் வாசித்த இவர்களின் இரு தவில் நாதங்களும் வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாத அளவிற்குப் பிரமிக்கக் கூடியதாக வாசித்துள் ளார்கள்.

தட்சிணாமூர்த்தியின் தவிலிசைக்கையைக் கேட் பதற்காக என்றே அநேக ரசிகர்கள் அவருடைய நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்குச் சென்று ரசிப்பார்கள். இது அவருடைய நாதப் பிரம்மத்தினதும், வித்துவத்தினதும் சக்தியேயாகும். 1969ஆம் ஆண்டு சென்னை கிருஷ்ண கான சபாவில் நடைபெற்ற நாதஸ்வர விற்பன்னர் ஷேக் சின்னமௌலானா அவர்களின் கச்சேரியில் தவில் வாசித்து இந்திய சங்கீத விமர்சகரான சுப்புடு அவர் களின் பாராட்டையும் தட்சிணாமூர்த்தி பெற்றுள்ளார். அவருக்கு சென்னையில் தங்கக் கோபுரம் பரிசாகக் கிடைத்தது. அத்துடன் அவரின் தவில் வாசிப்பினைக் கலாரசிகர்கள் எவரெஸ்ற் றொக்கட் என்று வியந்து பாராட்டியுள்ளனர் என அறியக் கிடக்கின்றது.

லயஞானத்தில் சிறந்த தட்சிணாமூர்த்திக்கு இந்திய நாதஸ்வரச் சக்கரவர்த்தியான திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை அவர்களின் நினைவு விழாவில் கரூர் என்னுமிடத்தில் தங்கத்தாலாய தவிற்கேடயம் 12-12-1968இல் வழங்கப் பெற்றது. அவர் தமது வாழ்நாள்களின் பின்பகுதியை இந்தியாவிலேயே செலவிட்டுக் கலைத்தொண்டாற்றி ஈழத் திருநாட்டுக்குப் பெருமை சேர்த்தார். எழுபதுகளில் மீண்டும் இலங் கைக்கு வந்து தவில் இசையைப் பரப்பிக் கொண்டிருந் தார். அவரது தவில் வாசிப்பின் பெருமையினால் யாழ்ப்பாணம் இன்றும், இந்தியாவின் கலைப் பாரம் பரியத்தையே விஞ்சும் அளவுக்குப் பெருமை கொண்டு விட்டது. சென்ற இடங்களிலெல்லாம் தன்னிகரில்லாத் தம் தவில் வாசிப்பினால் கலையுலகை வியக்கச் செய்த தட்சிணாமூர்த்திக்கு அநேக பட்டங்களும், விருதுகளும் கிடைத்தன. 'கற்பனைச் சுரங்கம்', 'கரவேக கேசரி', 'தவில் வாத்திய ஏகச் சக்கிராபதி', 'லயஞான குபேர பூபதி' போன்ற ஏராளமான பட்டங்கள் கிடைத்திருக் கின்றன. ஆயிரம் ஆயிரம் ரசிக நெஞ்சங்கள் தவில் வாத்தியத்தை இரசிக்க வைத்த பெருமை அவருக்கே உலகில் உரியது எனலாம். அவர் சென்னையில் ஆண்டு தோறும் இடம் பெறும் இசைவிழாக்களில் தவறாது அழைக்கப்பட்டுக் கச்சேரிகளில் தவில் வாசித்து வந்தார். உலக இசை ரசிகர்களே கண்டு களிக்கும் இந்த இசை விழாக்களில் ஒன்றில் தட்சிணாமூர்த்தியின் தவில் வாத்தியக் கச்சேரியைச் செவிமடுத்த ஒரு மேலை நாட்டு விமர்சகர் இந்து என்ற பிரபல ஆங்கில இதழில் எழுதிய விமர்சனத்தில் ''இதுவரை காலமும் தவில் வாத்தியம் என்பது செவிப்பறையைச் சிதைக்கும் ஒரு வாத்தியம் என்றே என் அனுபவம் சொல்லி வந்தது. ஆனால் இந்த இசைவிழாவில் தட்சிணாமூர்த்தியின் தவில் கச்சேரியைக் கேட்ட போதுதான் தவில் என்ற வாத்தியத்தில் அதிவன்மையான ஒலியை மட்டுமன்றி அதிமென்மையான ஒலியையும் எழுப்பமுடியும் என் பதைத் தெரிந்து கொண்டேன்'' என்று எழுதியுள்ளார்.

தமிழ்நாடு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தவிற்கலை விரிவுரையாளராகப் பணியாற்றி ஈழத்திற்குப் புகழ் தேடித்தந்த உலகறிந்த பெரும் கலைஞர். அவரது தவில் வாத்திய இசை நாடாக்கள் ரஸ்சியா, செக்கோசிலோவாக்கியா போன்ற நாட்டு வானொலிகளிலும் அடிக்கடி ஒலிபரப்பப்படுவது கீழைத் தேய இசைக் கலைக்குக் குறிப்பாகத் தமிழனுக்கே தனித்துரிய தவில் நாதஸ்வரக் கலைக்கு வழங்கப்பட்ட உலக அங்கீகாரம் எனக் கொள்ளப்படுகிறது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எல்லாம் தவில் வாசித்துப் பெரும் புகழும் விருதுகளும் பெற்றார். தவிலிசையில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த தட்சிணாமூர்த்தி 13-05-1975இல் தமது நாற்பத்திரண் டாவது வயதில் மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவருடைய இறுதி யாத்திரையில் கட்டுக்கடங்காத சனசமுத்திரம் பல ஊர்களிலிருந்தும் வருகைதந்து தத்தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். வாழ்க அவர் நாமம்! இன்றும் மக்கள் மனங்களில் தவில் மேதை தட்சிணாமூர்த்தி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார். ✱

# சிந்திக்க வைத்த சித்தர் நெறி மாநாடும் மலேசியத் தமிழ் மக்களின் பக்தி நெறியும்

ஐ.தி. சம்பந்தன்

மலேசியப் பல்கலைக்கழகத்தில் மே மாதம் 25, 26, 27 திகதிகளில் நடைபெற்ற முதலாவது உலக சித்தர் நெறிமாநாடு ஒரு சாதனை மாநாடாக மிகச்சிறப்புடன் நடைபெற்றது. மலேசியா வாழ் தமிழ் மக்களின் பக்தி ஞானத்தையும் தமிழ் உணர்வையும் வெளிப்படுத்தும் சிறப்பு மாநாடகப் பரிமாணம் பெற்றிருந்தது.

எவருமே எதிர்பாராத அளவு ஆயிரத்திற்கு மேற்பட்ட பேராளர்கள் வருகை தந்து மண்டபம் மக்கள் கூட்டத்தினால் நிரம்பி வழிந்தது. இடம் போதாமையால் 300க்கு மேற்பட்ட பேராளர்கள் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. மிகச் சிறப் பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சித்தர் மாநாட்டுப் பணியாளர்களும் தொண்டர்களும் கடமை உணர்வுடன் கண்ணியமாகத் தமது பணிகளைச் சிறப் பாகவும் அன்பாகவும் ஆற்றியது பாராட்டத்தக்கது.

இம்மாநாடு மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாட்டு மூலத்தராக விளங்கிய மும்மூர்த்திகள் எனப் போற்றப்பட்ட தவயோக தங்கராசா அடிகளார். அருட் செல்வர் அப்னாநாகப்பன், பேராசிரியர் மு. இராசேந் திரன் ஆகியோரின் சேவைகளுக்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சுப்பிரமணியம் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார்.

18 சித்தர்களின் அற்புதமான பணிகளையும் சித்தர்நெறிக் கோட்பாடுகளையும் பல்வேறு துறையில் பல பேரறிஞர்கள் ஆய்வு செய்து ஆற்றிய உரைகளும் வாசித்த கட்டுரைகளும் மிகப் பயனுள்ளவையாக அமைந் திருந்தன. சித்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட சித்த வைத்தியம், மூலிகைகள் பற்றிய வரலாறுகள் மிகத் தெளி வாகச் சித்த வைத்தியர்களால் எடுத்துக் கூறப்பட்டது. இயற்கை வைத்திய முறைகள் விஞ்ஞான ரீதியான இன்றைய வைத்திய முறையிலும் மகத்தானது என்பதை மிகத்தெளிவாக எடுத்துக் கூறி இருந்தனர். இயற்கையை நேசித்து வாழ்ந்த சித்தர்கள் கண்டுபிடித்த இயற்கை வைத்திய முறையான சித்த வைத்தியத்திற்கு இம் மாநாடு மூலம் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. 18 சித்தர்களை மையமாக வைத்து நடத்தப்பட்ட இம் மாநாட்டில் அவர்களது அற்புத வரலாறு ஒலி ஒளி மூலம் காண்பிக்கப்பட்டது.

தமிழை வளர்த்த அகஸ்திய முனிவர், திருக்குறளை உலகுக்களித்த திருவள்ளுவர், சிவதத்துவஞ் செய்த திருமூலர் உட்பட 18 சித்தர்களின் திருவுருவப் படங்கள் மண்டபத்தைச் சித்தர் மயமாக்கியது. இத்தகைய சூழலில் நடைபெற்ற முதலாவது உலகச் சித்தர் நெறிமாநாடு பற்றிய நிகழ்வுகளை இனி நோக்குவோம்.

மலேசிய ஸ்ரீ அகஸ்தியர் ஞானபீடம் முயற்சி யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது உலகச் சித்தர் நெறிமாநாடு 27-5-07 அன்று அதிகாரப்பூர்வ மாக நிறைவு கண்டது.

மே 25 ஆம் தேதி தொடங்கி மே 27 ஆம் தேதி வரையில் மூன்று நாள்களுக்கு நடைபெற்ற இந்த மாநாட்டில் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து ஆயிரத்துக் கும் அதிகமான பேராளர்கள் திரளாகக் கலந்து கொண்டு தங்களின் வற்றாத ஆதரவை வழங்கினர்.

தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கத் தலைமை நிருவாகி டான்ஸ்ரீ கே. ஆர். சோமசுந்தரம் மூன்று நாள் சித்தர் நெறி மாநாட்டினை அதிகாரபூர்வமாக நிறைவு செய்தார். இந்த மூன்று நாள் மாநாட்டில் கலந்து கொண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆய்வுக் கட்டுரை கள் வழங்கிய கட்டுரையாளர்களுக்கு டான்ஸ்ரீ சோம சுந்தரம் நற்சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

இந்த மூன்று நாள் மாநாட்டில் சித்தர் நெறியில் சித்த மருத்துவம், வானவியல், ஆத்மஞானம், சுப்பிர மணியரின் யோக ஞானம், விண்ணியல் வாழ்வும் மண்ணியல் வாழ்வும், யோகாசனத்தின் மகிமை, சித்தர் சொல்லும் செய்திகள், சித்த மருத்துவத்தில் நாடி வழி நோய் அறிதல், யோகம், மர்மக் கலையும் மருத்துவ முறையும், தமிழிலக்கியத்தில் சித்த மருத்துவம், மனமது செம்மையாக, ஏன் ஆன்மீகம், சித்தர்களின் சமுதாயப் பார்வை, சித்தர் பாடல்களின் நன்னெறிக் கூறுகள், சித்தர் களும் ஆலய வழிபாடும், வாஸ்து பயணங்கள், சித்தர் வாழ்வில் ஓங்காரம், சித்தர் வள்ளலார், சித்தர்கள் காட்டும் ஆத்மஞானம், விஞ்ஞான தத்துவம், சித்தர் களின் அண்ட பிண்ட தத்துவம், வாழ்வியல் தத்துவம், சித்தர்கள் கூறும் நடைமுறை வாழ்க்கை, நீ வாழ வேண்டும், சித்தர் பாரம்பரியம், வள்ளலாரும் சித்த மார்க்கமும் சித்தர்களின் இறைமைக்கோட்பாடு, அட்டாங்க யோகம், சித்தர் பெருமை போன்ற தலைப்பு களில் கட்டுரையாளர்களும் சிறப்பு ஆத்மஞான சொற் பொழிவாளர்களும் தங்களின் கட்டுரைகளையும் சொற் பொழிவுகளையும் பேராளர்களுக்கு வழங்கினர்.

தமிழகத்திலிருந்து மட்டும் சுமார் 75 கட்டுரை யாளர்களும் ஆத்மஞான சொற்பொழிவாளர்களும் இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்தர்கள் தொடர்பான பல அரிய தகவல்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இந்த மாநாட்டினூடே சித்த மருத்துவம் தொடர்பான மூலிகைக் கண்காட்சியும் இடம் பெற்றி ருந்தது. சித்தர் நெறிமாநாடு இதனோடு நின்றிடாமல் மேலும் தொடரப்படவேண்டும் என்று தவத்திரு ஓங்காரனந்தா சுவாமிகள் மாநாட்டின் நிறைவு விழாவில் ஆசியுரை வழங்கினார். மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் செல்வி. தனபாக்கியம் நன்றியுரை ஆற்றினார். ✱

# சித்தர் நெறி மாநாட்டுப் பணிகள் தொடர வேண்டும்

## நிறைவுரையில் டான்ஸ்ரீ சோமசுந்தரம் கருத்து

உலக மக்கள் அனைவரும் உண்மையான சித்தர் நெறியை அறிந்து தெரிந்து அதனைப் பின்பற்றும் வகையில் மலேசிய ஸ்ரீஅகஸ்தியர் ஞானபீடம் இந்தச் சித்தர் நெறி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்த நல்ல பணியினை வருங்காலங்களிலும் தொடர வேண்டும்.

சித்தர்கள் சிலர் தம்மை உணர்ந்து மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவிலே பலர் தெரிந்து கொள்ளும் வகையில் வாழ்கிறார்கள். சில சித்தர்களோ தன்னை அறிந்து தனக்குள்ளாகவே வாழ்கிறார்கள். மற்றவர்களுக்கு அதைத் தெரிவிப்பதில்லை.

எனக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் கூறினார். சித்தர் சிலர் பைத்தியம் போல் சுற்றிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தன்னை அறிந்தவர்கள். ஆனால் அவர்களால் மற்றவர்களுக்கு அதைச் சொல்லிக் கொடுக்க முடிவதில்லை. சொல்ல முடிவதும் இல்லை. இத்தகைய சித்தர்கள் எல்லாம் உலகில் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டுள்ளேன்.

மலாயா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற முதலாவது உலகச் சித்தர் நெறிமாநாட்டை நிறைவு செய்து உரையாற்றுகையில் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்க நிருவாகத் தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :

"சித்தர் மாநாடு நடைபெறுவதற்கு இரண்டு நாள்கள் இருக்கும் போது மாநாட்டின் ஏற்பாட்டாளரான அருள்செல்வர் அப்னா நாகப்பன் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு நிறைவு விழாவுக்கு வருமாறு என்னை அழைத்தார். நானும் சரி என ஒப்புக் கொண்டேன்.

அதன்பின் அலுவலகத்தில் பணிபுரியும் சிலரிடம் சித்தர் என்றால் என்ன? அவர்கள் யார் எனக் கேட்டேன். அதற்கு ஒவ்வொருவரிடமிருந்தும் வெவ்வேறான பதில்கள் வந்தன.

சித்து விளையாட்டுகள் செய்வாரே அவர்தாம் சித்தர் என்று ஒருவர் சொன்னார். மற்றொருவர் சித்த வைத்தியர் என்று சொன்னார். இப்படி ஒவ்வொருவரிடமிருந்து ஒவ்வொருவிதமான தகவல்கள்.

ஆகவே, சித்தர் என்பவர்கள் உண்மையிலேயே யார் என்பது பற்றிய தகவல்கள் பொதுவாகத் தமிழர்கள் மத்தியில் அவ்வளவாகத் தெளிவாக இல்லை. இது போன்ற மாநாடுகள் நிச்சயமாகப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

நான் வந்தபோதே, கவனித்தேன். பெரும்பாலான மாநாடுகளில் மூன்றாவது நாளில் பாதிபேர்கூட இருக்க மாட்டார்கள். எப்படிப்பட்ட அகில உலக மாநாடாக இருந்தாலும்கூட மூன்றுநாள் வரை பொறுத்திருந்து கலந்து கொள்ள மாட்டார்கள்.

ஆனால், இந்த மாநாட்டில் மூன்றாவது நாளாகியும் உட்காருவதற்குக்கூட இடமில்லாமல் அலை மோதுவதைப் பார்க்கும் போது சித்தர்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஆர்வமாக இருக்கின்றனர் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது என்பதைக் கண்கூடாக அறிய முடிகிறது என்று டத்தோஸ்ரீ சோமசுந்தரம் கூறினார்.

அடிப்படையில், நம் பிறவிப்பயன் என்ன? ஏன் பிறந்தோம்? என்பது போன்ற கேள்விகளையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு நாம் சிரமப்படுகிறோம். இதற்கு எல்லாம் பதில் தேடுவதற்காகத்தான் இது போன்ற மாநாடுகள் நடத்தப்படுகின்றன.

இந்த முதலாவது உலகச் சித்தர் நெறி மாநாடு பயனுள்ள ஒரு மாநாடாகும். இதனைத் தொடர்ந்து நடத்தி மக்களிடம் ஆன்மீக உணர்வையும் சித்தர்கள் நமக்கு ஆற்றியுள்ள பணிகளையும் எடுத்துரைக்க வேண்டும்.

இந்த மாநாட்டின் நிறைவு விழாவின் போதே, டான்ஸ்ரீ சோமசுந்தரம் இம்மாநாட்டிற்காக 10 ஆயிரம் வெள்ளியை நன்கொடையாக வழங்குவதாக அறிவித்தார். ❋

### உறைக்காத உண்மைகள்...!

**மட்டுவில் ஞானக்குமரன், ஜெர்மனி**

இரத்தத்தால்
மெழுகப்படுகிறது எங்கள்
நிலம்...

முட்கிரீடங்களாலே
அலங்கரிக்கப்படுகின்றன,
எங்கள் தலைகள்...!

கண்ணீர்த் துளிகளால்
மாலை நெய்வதே
எமது அன்றாட வேலை

இந்த எச்சங்களே
வரலாற்றிலே எமக்கான
மிச்சங்களாகும்.

கடல் போல
வார்த்தைகளைக் கொண்ட தமிழிலே
எந்தச் சொல்லை எடுத்து
எமது வலியைச் சொல்லிட...!

இலங்கை மண்ணின்
ஒவ்வொரு துகளும்
எங்கள் குருதியாலே
கழுவப்படுகிறபோதும்

வியாபாரம் பாழாகிவிடும்
என்பதனாலே
மௌனத்திரையை விலக்க
யாருமே முன்வருவதில்லை...?

SKC

ESTD
1992

# SRI KANTH & CO

SOLICITORS & PROPERTY BUSINESS CENTRE

SOLICITORS & ESTATE AGENTS

## PROPERTY SALES, LETTING & CONVEYANCING

## UNDER ONE ROOF

*We also practise in the following areas of Law:*

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Landlord & Tenants
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matter
- Welfare Matter

557, High Road, Wembley, Middlesex HAO 2DW

Tel: 020 8795 0648

Fax: 020 8795 0649 / Mob: 07831 195 979

# மலேசிய ஸ்ரீ அகத்தியர் ஞான பீடம் ஏற்பாட்டில்
# முதலாவது உலகச் சித்தர்




மாநாட்டை நடத்திய
மலேசிய ஸ்ரீ அகஸ்தியர் ஞான பீடம்



டான் ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்களை
மாலை அணிவித்து வரவேற்கும் இராமகிருஷ்ணன்



மாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவர்
அருள் செல்வர் அப்னா நாகப்பன் உரையாற்றுகிறார்.



இலண்டன் சுடரொளி இதழின் பிரதம ஆசிரியர்
ஐ.தி. சம்பந்தன் உரையாற்றுகிறார்.



பேரா. டாக்டர் கணபதி, பேரா. டாக்டர் காதர் இப்ரஹிம்,
ஐ.தி. சம்பந்தன்



மாநாட்டு நிகழ்வுகளைச் சுவைக்கும்
கூட்டத்தின் ஒரு பகுதியினர்




டான் ஸ்ரீ
கே.ஆர். சோமசுந்தரம்



துணை வேந்தர்
டாக்டர். சுப்பிரமணியம்



தவயோகி
தங்கராச அடிகளார்



அருள் செல்வர்
அப்னா நாகப்பன்



பேரா. டாக்டர்.
எம். இராசேந்திரன்



தவயோகி
தருமலிங்கம்

# கோலாலம்பூரில் 25-27 மே 2007 இல் நடைபெற்ற நெறி மாநாட்டுக் காட்சிகள்



அப்னா நாகப்பன், டாக்டர். சுப்பிரமணியம், ஊரன் அடிகள், ஓங்காரானந்தா, தங்கராச அடிகளார், டான்ஸ்ரீ சோமா.



டாக்டர். சாரங்கபாணி மற்றும் குழுவினர்



சித்த மருந்துகளின் காட்சி



மூலிகைச் செடிகளின் காட்சி



ஐ.தி. சம்பந்தன் திக்கரை முருகன் நூலை ஜெகதீசனிடம் வழங்குகிறார். உடன் ஞான லிங்கம், இளங்கோ, டாக்டர் சிவானந்தன்,



'காரை நகர்' சஞ்சிகையை டாக்டர் சிவானந்தன் அவர்களிடம் ஐ.தி. சம்பந்தன் வழங்குகிறார்.



யோகா மாஸ்டர் கைலாசநாதன்



சுடரொளி ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன்



பேரா. முனைவர் அரங்க இராமலிங்கம்



சேவாலியர் டாக்டர் எம்.எஸ். மதிவாணன்



பேரா. டாக்டர் காதர் இப்ரஹிம்



மாதாஜி சரோஜினி

# NEED A NO NONSENSE

## PROPERTY AGENT

***TO HANDLE ALL YOUR PROPERTY MATTERS?***

**SELECT**
**Estates & Letting**
**020 8470 1500**

RESIDENTIAL AND
COMMERCIAL SALES & LETTINGS
1% FLAT FEE FOR SALES
10% FLAT FEE FOR LETTINGS
FAST & EFFICIENT SERVICE

**SELECT**
**Mortgage Solutions**
**020 8548 0006**

RESIDENTIAL AND COMMERCIAL MORTGAGES
MORTGAGES ARRANGED WITH LOW DEPOSITS
EVEN WITH NO DEPOSIT
ALWAYS REACHABLE QUALIFIED ADVISERS
NO COMPLETION NO FEE

**SELECT**
**Maintenance**
**020 8503 5858**

EXTENSIONS AND FULL REFURBISHMENTS
DOUBLE GLAZING
PLUMBING AND ELECTRICAL WORK
GAS & ELECTRICITY CERTIFICATES
ALL WORKS GUARANTEED
FREE ESTIMATES

**EAST HAM BRANCH**
288 HIGH STREET NORTH
LONDON E12 65A

**ILFORD BRANCH**
126 HORNS ROAD, ILFORD
ESSEX IG2 6BL

**www.selhouses.co.uk**

# 2 ஆவது உலகச் சித்தர் நெறி மாநாடு தமிழகத்தில் நடத்தப்படும் நிறைவு விழாவில் துணைவேந்தர் சுப்பிரமணியம் அறிவிப்பு

ஆறரைக் கோடி தமிழ் மக்கள் இருக்கின்ற தமிழ்நாட்டிலே நடத்த முடியாத ஒரு மாநாட்டை மலேசிய மண்ணிலே நடத்திக் காட்டியிருக்கும் உங்கள் அனைவருக்கும் உலகத்திலுள்ள 94 நாடுகளிலே வாழுகிற தமிழர்களுக்கெல்லாம் ஒரே பல்கலைக்கழகமாக இருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நான் எனது நெஞ்சார்ந்த மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி மலேசிய மண்ணிலே தொடங்கப்பட்ட அத்தனையும் வெற்றிகரமாகவே நடைபெற்று உள்ளன. இந்த உலகச் சித்தர் மாநாடு மட்டுமன்றி முதலாவது உலகத் தமிழ் மாநாடும் ஈழத்துத் தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் தலைமையில் இந்த மலேசிய மண்ணில்தான் நடைபெற்றது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மாநாட்டைத் தொடங்குவது என்பது பெரிதன்று. மாநாட்டின் தொடக்கத்திலிருந்து மூன்றாவது நாள் வரை சிந்தாமல் சிதறாமல் பகலிலும் இரவிலும் அரங்கம் நிறைந்து மாநாட்டைக் கேட்பது என்னுடைய 56 ஆண்டுக்கால வாழ்க்கையில் இதுவே முதல் மாநாடு!

பல மாநாடுகளில் தொடக்க விழாவில் அரங்கம் நிறைய கூட்டம் இருக்கும். கருத்தரங்குகள் நடக்கும் போது 50 பேர்கூட இருக்க மாட்டார்கள். நிறைவு விழாவின்போது மாணவர்களையெல்லாம் அழைத்து வந்து அரங்கத்தை நிரப்புவோம். ஆனால் தொடக்கம் முதல் முடிவு வரை பார்த்த முகங்களைத் திரும்பத் திரும்ப பார்க்க முடிந்தது இந்த மாநாட்டில்தான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அருமையான மாநாட்டை ஏற்பாடு செய்திருந்த அருள்செல்வர் அப்னா நாகப்பன் மற்றும் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இது ஏதோ கூடிக் கலைந்த கூட்டமாக இருக்கக் கூடாது. கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றி விட்டு நல்நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே நாளில் மறப்பாரடி' என்று இல்லாமல் உள்ளத் தூய்மையை, ஒழுக்கத்தை, பண்பாட்டை, அந்தரங்க சுத்தியைச் சித்தர்கள் வழியில் இருந்து நாங்கள் கடைப்பிடித்து வாழ்க்கையில் தமிழ் மக்கள் ஒழுக்கத்திற்கும் தலைசிறந்த வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக இருப்பவர்கள் என்பதை இந்தச் சித்தர்கள் மாநாட்டிலிருந்து நாங்கள் கடைப்பிடிப்போம் என்பது எனது முதல் வேண்டுகோள்.

சித்தர் நெறியாக இருந்தாலும் எந்த நெறியாக இருந்தாலும் அது தமிழ் நெறி. தமிழர்களுடைய நெறிகளை, பண்பாட்டை, சமயத்தை, நாகரிகத்தை, மொழியை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழர்களாகிய நம் அனைவருக்கும் இருக்கிறது. சங்க இலக்கியம் ஒன்றில் ஒரு தலைவி சொல்வாள் 'இம்மை மாறி மறுமையாகினும் நீயாகியர் என் கணவனை நானாகி நீ என் நெஞ்சினிலே' என்று சொல்வாள். அதாவது இந்தப் பிறப்புப் போய் அடுத்த பிறப்பு வந்தாலும் நீதான் என்னுடைய காதலனாக இருக்க வேண்டும். நான்தான் உன்னுடைய காதலியாக இருக்க வேண்டும் என்று அந்தத் தலைவி விருப்பப்படுவாள். அடுத்த பிறப்பு உண்டெனில் நான் தமிழனாகவே பிறக்க விரும்புகின்றேன்.

அந்த அடிப்படையில் இந்தச் சங்க இலக்கியத்தில் சற்று மாறுதலாக, இந்தப் பிறப்புப் போய் அடுத்த பிறப்பு வந்தாலும் நாம் தமிழனாகவே பிறக்க வேண்டும் என்ற நினைப்பு நாடி நரம்புகளில் எல்லாம் ஆழமாகப் பதிய வேண்டும். இந்தத் தலைமுறையோடு தமிழ் மடிந்து போகாமல் இனிவரும் தலைமுறைகளிலும் இந்த மலேசிய மண்ணிலே தமிழ் மொழி உதிக்கவேண்டும் என்று நீங்கள் சூளுரைக்க வேண்டுமென அவர் தமது இரண்டாவது வேண்டுகோளை விடுத்தார்.

பேராளர்களே, என் அருமை நண்பர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் இந்த மாநாடு இதனோடு முடிந்து போய்விடக்கூடாது. இனிவரும் காலங்களிலும் தொடரப்பட வேண்டுமென்ற எண்ணம் அனைவருக்கும் இருந்ததை அறிந்தேன்.

நீங்கள் அனைவரும் விரும்புகின்ற மாதிரி அடுத்த உலகச் சித்தர் நெறி மாநாட்டைத் தமிழ்த் திருநாட்டிலே நடத்துவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் என்னை அனுமதித்தால் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்திலேயே அந்த மாநாட்டை நடத்த நான் தயாராக இருக்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற அக்கல்வியை, தொலைநிலைக்கல்வியாக அல்லது அஞ்சல் கல்வியாகத் தொடங்கியுள்ளது என்று குறிப்பிட்டிருந்தேன். அது தொடர்பாக நாங்களும் அஞ்சல் வழிக் கல்வி பயில முடியுமா என இங்குள்ள பலர் என்னிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். இதுபோன்ற கல்வி பயிலுவதற்குத் தமிழ்நாட்டில் பல மையங்கள் செயல்படுகின்றன. அதேபோல இங்கும் ஒரு மையமிருந்தால் மட்டுமே அந்த வழியாக அக்கல்வியைப் பயில முடியும். அகஸ்தியர் ஞானபீடத்தையே தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் மலேசிய மையமாக அங்கீகரிக்க நான் தயாராக இருக்கிறேன். அந்த மையத்தின் வாயிலாக இங்கிருந்து கொண்டே அஞ்சல் வழியாக நீங்கள் அக்கல்வியைப் பயிலலாம் என்று துணைவேந்தர் சுப்பிரமணியம் மாநாட்டு நிறைவு விழாவில் அறிவித்தார். *



# தியாகம்

சிறுகதை எழுத்தாளர் சி. வைத்திலிங்கம்

*(சென்ற இதழில் வெளியானதின் தொடர்ச்சி)*

அசோக மாலாவுடன் ஓர் அந்நியன் அள வளாவிக் கொண்டு வருவதைக் கண்டதும் முடியப்பன் ஆச்சரியத்துடனும் வியப்புடனும் பார்த்துக் கொண்டு நின்றான். அயல்குடிசைகளிலிருந்து வெளிவந்த வன வாசிகள் சாலியைக் கண்டதும் யாரோ தேவ லோகத் திலிருந்து குதித்தவன் போல் அவனையே பார்த்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

மாலா திடீரெனப் பாய்ந்து சென்று தன் தந்தை யின் பாதங்களில் வீழ்ந்து கால்களைக் கட்டிக் கொண் டாள். பின்னர் எழுந்து சாலியைத் தன் தந்தைக்கு அறிமுகஞ் செய்து வைத்துத் தங்களை ஆசீர்வதிக்கும் படி பயத்துடன் வேண்டினாள்.

முடியப்பன் பிரமித்துப் போனான். அவன் என்ன சொல்வதென்று தோன்றாமல் வாயடைத்து நின்றான்.

நல்ல யௌவன வாலிபன், வசீகரமான முகம்; கம்பீரத் தோற்றம். இவன் ஒரு சண்டாளகுலப் பெண்ணை விரும்புவதென்றால் உடனே நம்பி விடுவார்களா? தம்பி, தமையன், சுற்றத்தார், அயலவர் எல்லோருக்கும் ஏதோ கனவு காண்பது போல் இருந்தது. அவர்களைச் சூழ்ந்து நின்று எத்தனை கேள்விகள், எத்தனை குறுக்கு விசாரணைகள், பரிகாசங்கள், கிண்டல் வார்த்தைகள்... சாலி சிலுங்கவில்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்து விளக்கம் அளித்துவந்தான். இவற்றை உன்னிப்பாய்க் கவனித்து வந்த முடியப்பன் எல்லோரையும் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, முன்னே வந்து ''நீங்கள் என் பெண்ணை விரும்புவதாகச் சொல்கிறீர்கள். சாதிக் கட்டுப்பாடு பற்றித் துச்சமாய் எறிந்து பேசுகிறீர்கள். நீங்கள் பேசு வதைக் கேட்டால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. கண்டதும் காதல் என்ற கதையாய் இருக்கிறது. இது பருவக் கவர்ச்சியினால் ஏற்பட்ட மோகமென நான் கருதுகிறேன். சும்மாவா, நம்மவர் மோகம் முப்பது நாள் என்று சொல்வார்கள். நீங்கள் மோகம் தணிந்ததும் அவளை நிராகரித்து விடுவீர்கள்.'' என்று நிமிர்ந்து நின்று கம்பீரமாய்ச் சொன்னான்.

சாலி சிரிப்புடன் ''தலைவரே, ஜாதிக் கட்டுப் பாட்டைப் பற்றிப் பேசினீர்கள். சமூக வழக்கங்கள் ஜாதிக் கட்டுப்பாடுகள் யாவும் யாரோ சிலரால் தம் சுய நலத்துக்காக வகுத்துக்கொண்ட அரண்கள். இவற்றை உடைத்தெறிவது வீரர்களின் கடமை. உண்மைக் காதல் மனித சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டது. மனிதன் உள்ளத்திலிருந்து பாயும் இந்த ஆகர்ஷண சக்தியின் மூலகாரணமே பரம ரகசியமாயிருக்கிறது. என் உள்ளத் தில் மாலாவைக் கண்டதும் எப்படியோ உதித்தது இக் காதல். இதை எங்கள் பெரியோர் ஏழேழு பிறவிகளாக வந்த தொடர்பு என்று சொல்வார்கள். இந்தக் காதல் கருகி விடாமல் வளர்ப்பதற்கு ஏற்ற சக்தியும் என்னிடம் உண்டு. இதை நான் உறுதியாய் நம்புகிறேன். இது இல்லாவிடில் பிரபஞ்சமே குலைந்து சூன்யமாய்விடும். பிற வஸ்துக்களால் இதை ஆக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது, ஜாதியும், மோகமுமா எங்களைப் பிரித்து விடும்?''

அக்கூட்டத்தினர் யோசித்தவண்ணம் ஒன்றும் தோன்றாமல் முடியப்பாவைப் பார்த்தபடி நின்றார்கள். எல்லோரும் சாலியின் வார்த்தைகளில் தொனித்த மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் கண்டு பிரமித்துப் போனார்கள். அவன் வாக்கில் தெரிந்த நேர்மையும் மனோதிடமும் அவர்கள் மனத்தில் தோன்றிய பயத்தையோ சந்தேகத்தையோ எரித்துச் சாம்பலாக்கிவிட்டன.

சில தினங்களில் அவர்கள் குலமுறைப்படி இருவருக்கும் விவாகம் நடந்தேறியது.

இப்படி இருக்கையில், அநுராதபுரத்திலே ராஜ குமாரன் காணாமற் போன விஷயம் ஒவ்வொருவர் வாயிலும் அடிபட்டது. ஒவ்வொருவரும் வாய்க்கு வந்ததைப் பேசிக் கொண்டனர். நாலு திசையும் குதிரை வீரர், ஒற்றர் முதலியோர் பறந்த வண்ணமிருந்தனர். துட்டகைமுனுவின் .மனம் ஆறுதலின்றித் தவித்துக் கொண்டிருந்தது. ராஜகுமாரனை நினைத்து நினைத்து மனம் கரைந்து உருகிப் போனான்.

ஒரு நாள் ஒற்றர் சிலர் ஒரு வனத்துள் புகுந்து ராஜகுமாரனைத் தேடலானார்கள். ஓரிடத்தில் காட்டை அழித்துப் புதியதாக ஒரு கிராமமும் பல குடிசைகளும் தோன்றி வருவதைக் கண்டனர். அங்கு நேரில் பார்த்த போது சாலியைக் கண்டுவிட்டார்கள். ஓடிப்போய் அவர் பாதங்களில் வீழ்ந்து ''ராஜகுமாரரே, சென்ற பல மாதங் களாய் உங்களை எங்கெல்லாம் தேடி அலைந்து கொண் டிருக்கிறோம். மகாராஜா தங்களைக் காணாமல் மனம் உடைந்து, ராஜாங்க விஷயங்களைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தி வருகிறார். அரண்மனைக்கு எழுந் தருள வேண்டும் பிரபு'' என்று மன்றாடினர்.

அசோகமாலாவுக்கு உலகமே கவிழ்ந்துவிட்டது போல் இருந்தது. சாலி ஒரு ராஜகுமாரன்! அவள் தலை கிறுகிறுத்தது. புயலில் ஆடும் தளிர் போல் மனம்

பதறியது. சாலியின் பாதங்களில் வீழ்ந்து ''பிரபுவே என்ன காரியஞ் செய்து விட்டீர்கள். இப்பொழுதே தாங்கள் அரண்மனைக்குச் சென்று விடுங்கள். என்னைப் பற்றிய யோசனையே வேண்டாம். காட்டில் மலர்ந்த முல்லைமலர் வாடிப்போனால் யாருக்கென்ன? நான் உயிருடன் இருப்பதில் தங்களுக்கு ஏதேனும் ஆபத் தென்றால் என் உயிரையே விடத் தயாராகியிருக் கிறேன்.''

ஆனால் ராஜகுமாரனின் மனத்திடம் குலைய வில்லை. அவளை அணைத்தவண்ணம் ''மாலா நீ வாயில் வந்ததெல்லாம். பேசுகிறாய். என் வாழ்க்கைத் தெய்வமாகிய உன் முன்னிலையில் ராஜபோகமும், செல்வச் சிறப்புகளும், புகழும் எம்மாத்திரம். நீ அநாதை யாய் ஏழ்மையில் அலைந்து திரிவது. ஆனால் நான்... நினைக்கும்போதே என் தலை வெடித்துவிடும். முடியவே முடியாது'' என்று கூறி ஒற்றரைத் திருப்பி அனுப்பி வைத்தான்.

இந்தச் செய்தி மகாராஜாவுக்கு ஒற்றர்களால் தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்டதும் அவன் அதிர்ந்து போனான். மாசு மறுவற்றிருந்த தன் வம்சத்துக்குக் களங்கம் உண்டாவதற்குத் தன் உதிரத்தில் தோன்றிய குமாரனே காரணமாயிருந்தான் என்ற பழிச்சொல்லை நினைக்கவும் முடியவில்லை. கோபாவேசனாகி இருவரையும் கொலை செய்து விடுவதென வனத்தை நோக்கிப் புறப்பட்டான்.

துட்டகைமுனு குடிசையை அடைந்த சமயத்தில் அசோகமாலா தங்கள் வயல்பரப்பில் வேலை செய்த வண்ணம் நின்றாள். சாலி ஓரிடத்திலும் ஓய்ந்து நில்லா மல் வயல் எங்கும் பம்பரமாய்ச் சுற்றிவந்து வனவாசி க்ளைத் தங்கள் கருமத்தில் உற்சாகப்படுத்தி ஊக்கு வித்துக் கொண்டிருந்தான், சில மாசங்களுக்குமுன் காட்டுப் பகுதியாயிருந்த பகுதியில் மரங்கள் யாவும் அழிக்கப்பட்டு நிலம் உழுது செப்பனிடப்பட்டிருந்தது. ஆதிவாசிகள் பண்படுத்திய நிலத்தில் தானிய வகை களையும், காய்கறி வகைகளையும் புதிதாய் நாட்டியிருந் தனர். வயல்களில் நெல்பயிர்கள் புதுமண்ணில் ஓங்கி வளர்ந்தன. மக்கள் கூட்டம் தேனீக்கள் போல் சுறுசுறுப் புடன் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். பசுக்கூட்டங்கள் புல்வெளியிலே மேய்ந்து வந்தன. சாலியின் ஓயாத உழைப்பினால் அவ்வளவும் ஓர் அழகிய கிராமமாக மாறியிருந்தது.

தூரத்திலிருந்தே, சாலி தந்தையை அடையாளம் கண்டு கொண்டான். சாலி-மாலா இருவரும் மகா ராஜாவை எதிர்பார்த்திருந்தவர்கள். என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் ஓடோடி வந்து, அவர் பாதங்களில் வீழ்ந்து விட்டார்கள். அரசன் நெகிழ்ந்து போனான். சாலி தந்தையைப் பார்த்த வண்ணம் அமைதியாய் நின்றான். அவன் பார்வை தந்தையின் அந்தக் கரணங்களைத் துடிக்கச் செய்து விட்டன.

மாலா எழுந்து நின்று, ''பிரபு, எங்களை மன்னிக்க வேணும். நானோ ஏழை. சண்டாள குலப் பெண். நான் செய்திருக்கும் குற்றத்துக்கு மன்னிப்பே கிடையாது. இராசகுமாரரின் நெஞ்சைக் கவர்வதென் றால் பாரதூரமான குற்றமே. ஆனால் பிரபு, அவர் ஒரு ராசகுமாரனென்று தெரிந்திருந்தால், உயிர் போவதானா லும் இந்த விவாகத்துக்கு இசைந்திருக்க மாட்டேன். இந்தக் கணமே அவரை அழைத்துச் செல்லுங்கள் சாமி'' என்றாள்.

''முடியாது. அரசும் வேண்டாம். மணிமுடியும் வேண்டாம்.'' சாலியின் மனோதிடம் முகத்திலே பிரதி பலித்தது.

துட்டகைமுனு நீண்டநேரம் ஆழ்ந்த யோசனை யில் மூழ்கி இருந்தான். தன் யௌவனப் பிராயத்தில் 'கலுமெனிக்கா' என்ற குடியானப் பெண்ணுடன் தான் நடத்திய காதல் வாழ்க்கை அவன் நினைவுக்கு வந்தது. ஒரு பெருமூச்சுடன் தன் குதிரையில் ஏறிக் கொண்டான். போகும் போது தன் குமாரனைப் பார்த்து ''மகனே, உங்கள் காதலின் ஆழத்தையும், அசோகமாலாவின் பொருட்டு நீ செய்யும் தியாகத்தின் மாண்பையும் நினைத்து நான் பெருமை அடைகிறேன்'' என்று சொல்லும்போது அவன் நெஞ்சம் உடைந்து கண்ணீ ராய்ப் பெருகத் தொடங்கி விட்டது.

பண்ணையிலிருந்து வீடுதிரும்பும் அக் கிராம வாசிகள் சிலர் ஒரு நாட்டுப் பாடலைப் பாடியவண்ணம் தம் குடிசைகளை நோக்கிப் போய்க் கொண்டு இருக் கிறார்கள். பசுக் கூட்டங்கள் தம் தொழுவத்தை நோக்கி மெல்ல அசைந்து வரும்போது கழுத்தின் மணியோசை மெல்லியதாய் ஒலிக்கின்றது. சாலியின் குடிசையில் அசோகமாலா ஏற்றிய தீபம் சுடர் பரப்பி எரிந்து கொண்டிருக்கிறது.

அதன் பின்னர் இரவு வந்தது. ✱

*நன்றி : கலைமகள் 1940*

**நியூசிலாந்து தமிழ் மாணவியின் துணிச்சல்**

தவறாக விளம்பரம் செய்து ஊட்டச் சத்துள்ள பானம் விற்ற பிரபல நிறுவனத்துக்கு நீதி மன்றம் தண்டம் விதிக்கச்செய்தார் தமிழ் மாணவி.

நியூசிலாந்து தமிழ் மாணவி செல்வி அண்ணா தேவதாசன் என்ற இளமங்கை பிரபல மருந்துப்பொருள் தயாரிக்கும் நிறுவனமான கிளாக் சோகிளின் தம் ஊட்டச்சத்துள்ள சுவைநீர்ப்புட்டி களில் குறிக்கப்பட்டுள்ள அளவு வைட்டமின் 'சி' இல்லையெனத்தக்க ஆய்வு வழி மெய்ப்பித்து நீதி மன்றம் மேற்கண்ட நிறுவனத்துக்கு 14,000 அமெரிக்க வெள்ளி தண்டமாகச் செலுத்தச் செய்தார்.

தகவல் தரவு - பேராசிரியர் **அரங்க முருகையன்**

*(புதிய அறிவியலாளன் (New Scientist) எனும் ஆங்கில அறிவியல் இதழில் வெளிவந்த செய்தி.*

# தமிழ் சினிமாவின் வரலாறு ②

கே.டபிள்யூ. செல்வராசா, வுட்சேர்ச், கென்ற், இலண்டன்

தமிழ்ப் படங்கள் 1937 இல் இருந்து 1947 வரை 25 மட்டுமே வெளியாயின. ஆரம்ப காலத்தில் நான் பார்த்த படங்கள் சிலவற்றையிட்டு முதலில் எழுதுகிறேன்.

கச்சதேவயாணி படத்தில் எம்.கே. ராதா, எஸ்.எஸ். கொக்கோ, குளத்துமணியும் கதாநாயகியாக இலங்கைக் குயில் தவமணிதேவியும் நடித்தார்கள். இதில் தவமணி தேவி பாடிய ''அலை மோதுதே என் மனம் வாடுதே- அறியாது என் மனம்'' என்ற பாடல் எல்லாருடைய வாயிலும் முணுமுணுத்தது. ஒரு கிராமப் பெண்ணாக நடித்த இவர் இடுப்பிலே ஒரு துண்டு மட்டும் அணிந்து தொடை தெரியத்தக்கதாக நடித்தார். சினிமா புதிதாக வந்த காலத்தில் இளம் வாலிபர் கலரியில் இருந்து தவமணிதேவி வரும்போது குனிந்து அண்ணாந்து பார்த்து ஏமாற்றம் அடைவதை என்னால் இப்போதும் மறக்கமுடியவில்லை. (எனக்கு அப்போது 8-9 வயதிருக்கும்) கதை சுவாரஸ்யமான கோவில் பூசாரியின் (குளத்து மணி) கொடுமைகளைச் சித்திரிக்கும் படம். இளம் பெண்களைக் கெடுத்துக் காளிக்குப் பலி கொடுப்பதாக மக்களுக்குக் காட்டுவது. கடைசியில் கச்சதேவயாணியைப் பலியிடப்போக எம்.கே. ராதா, எஸ்.எஸ். கொக்கோ இருவரும் கோவில் சிலைக்குப் பின்னால் நின்று பூசாரியின் தந்திரமாகப் பெண்களைக் கெடுக்கும் காரியத்தை வெளிப்படுத்துதல், பின் கோவில் யானை பூசாரியின் தலையை நசுக்கிச் சாக வைத்தலுடன் முடிகிறது.

**சத்தியவான்-சாவித்திரி :** மலையாள நடிகர்களான ஒய்.வி. ராவ் சத்தியவானாகவும் சாந்தா ஆப்தே சாவித்திரியாகவும், எம்.எஸ். சுப்புலெட்சுமி நாரதராகவும் நடிக்கிறார்கள். ''விளையாடுவோம் வாருங்கள் பாங்கியரே'' என்ற சாந்தா ஆப்தேயின் பாடலுடன் தொடங்கி ''சொல்லு குழந்தாய் நிஜமே'', அக்கினி என்றறியாயோ கற்புடைய மங்கையரை'' என்ற எம்.எஸ். அவர்களின் பல பாடல்கள் நிறைந்த படம். யமனுக்குப் பின்னால் நின்றபடியே இஷ்ட தெய்வத்தின் உதவியால் மலைக்குமேல் பறந்துசெல்லும் தந்திரக் காட்சி அக் காலத்திலேயே நன்றாக எடுக்கப்பட்டது.

**பக்த குசேலா :** பாபநாசம் சிவன் பாடி, பாட்டியற்றி, இசையும் கொடுத்து நடித்த படம். இதில் குசேலரின் பாடசாலை நண்பனான கண்ணனாக பி.எஸ். கோவிந்தன் நடிக்கிறார். குசேலரை வழிகொண்டு அரண் மனைக்கு அழைத்துச் செல்வதும், அவலை உடனே சாப்பிட மூன்று வாய் எடுத்தபோது நான்காவதைக் கண்ணனின் மனைவி தடுப்பதும், குசேலர் ஏமாற்றத்தடன் எதுவும் கண்ணனிடம் பெறாமல் செல்வதும், போகும் வழியில் உடைகள், ஆபரணங்கள் மாறுவதும், பெரிய வீட்டைப் போய் அடைவது உச்ச கட்டங்களாகும்.

**சகுந்தலை :** எம்.எஸ். சுப்புலெட்சுமி 16-18 வயதில் சகுந்தலையாக நடித்த படம். கல்முனையில் கூடாரத்தில் நடுவில் திரை கட்டியிருக்க இருபக்கமும் இருந்து ரசிகர்கள் பார்த்த படம். இதில் பாடலுக்குப் பெயர் போன ஜி.என். பாலசுப்பிரமணியம் துஷ்யந்தனாக நடித்து நல்ல பாடல்களும் பாடியிருக்கிறார். எம்.எஸ்.எஸ். பாடிய ''குதூகலிப்பது மேனோ'' தொடக்கம் எம்.எஸ். எஸ்.சும் ஜி.என்.பி.-யும் இணைந்து பாடிய ''பிரேமையில் யாவும் மறந்தோமே'' பாடல் வரை அருமையான பாடல்கள் நிறைந்த படம்.

**மனோன்மணி :** பி.யு. சின்னப்பா சேர நாட்டு இளவரசனாகவும், டி.ஆர். ராஜகுமாரி மனோன்மணியாகவும் வில்லன் பாலசுப்பிரமணியம் குடிலனாகவும், எஸ்.எஸ். கொக்கோ இளவரசனின் சினேகிதனாகவும் நடித்தார்கள். பி.யு. சின்னப்பாவின் நடிப்பும் பாட்டும், டி.ஆர். ராஜகுமாரியின் அழகும், நடிப்பும் பாட்டும் வெற்றிப் படமாக அமைய காரணமாக இருந்தன. இதன் கதை தமிழ் இலக்கியத்தில் வருவதால் கதையை எழுதவில்லை (ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று). கனவில் கண்ட காதலி மனோன்மணியைச் சிறைக் குகையில் கண்டு மாலை சூடுவது படத்தின் உச்சகட்டமாகக் கை தட்டலைப் பெற்றது.

இப்படத்தில் என்.எஸ். கிருஷ்ணன், மதுரம் நகைச்சுவைத் தம்பதிகள் நடிக்கிறார்கள். இப்படத்தின் பின்னர்தான் பிரபலமானார்கள். அப்போ அவர்கள் விவாகம் செய்யவில்லை. நாடக சபாக்களில் நடித்துக் கொண்டிருந்தவர்கள் சினிமாவுக்குள் பிரவேசித்தார்கள்.

**கண்ணகி :** நடிப்புக்கும் பாடலுக்கும் கதை வசனப் பேச்சுக்கும் ஈடாக இதுவரை ஒரு படமும் வெளிவரவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். பி.யு. சின்னப்பா (தமிழ்நாட்டில் சிலம்படி வீரன் எனப் புகழ் பெற்றவர்), பி. கண்ணாம்பா, என்.எஸ். கிருஷ்ணன், டி.கே. மதுரம், டி.எஸ். துரைராஜ், புளிமூட்டை ராமசாமி ஆகியோர் நடித்த படம், கண்ணாம்பாவுக்கு அவ்வளவு பாடத் தெரியாது என்பதால் பி.யு. சின்னப்பாவே பல பாடல்களைப் பாடினார். அவற்றில் சில ''பத்தினியே உன் போல் இத்தரை மீதினில் உற்றவர் யார் புகல்வாய் தர்ம'' ''சந்திரோதயம் மீதிலே காணுவது செந்தாமரை முகமே ஆனந்தம்'' ''அன்பில் விளைந்த அமுதமே அன்னமே என் கண்மணி'' ''தேவ மகள் இவள் யார் இவள் யாரோ'' ''மானமெல்லாம் போனபின்னே வாழ்வது தான் ஒரு வாழ்வோ'' இப்பாடல்கள் முழுவதும் இப்போதும் நான் பாடுவேன். உச்சகட்டமாகக் கண்ணகி அரச சபைக்கு வந்து தன் கணவன் கள்வனல்ல என்று வாதாடும் காட்சி, கண்ணாம்பாவுக்குப் பேசுவதில் கண்ணாம்பாவே நிகர். ஆண்களில் சிவாஜி கணேசன் பெண்களில் கண்ணாம்பாதான், நகைச்சுவையில் என்.எஸ். கிருஷ்ணன், கிருஷ்ணன் வேடத்தில் வந்து மதுரத்தை ஏமாற்றுவதும் வாய்விட்டுச் சிரித்து மகிழக் கூடிய நகைச்சுவையாகும். பி.யு. சின்னப்பாவின் பாட்டு, நடிப்பு, பேச்சு இவையெல்லாம் படத்தைப் பல முறை பார்க்கத் தூண்டும், இதுவரை வெளிவந்த படங்களில் சிறந்த படமும் ஆகும்.

**மின்னல் கொடி :** கே.டி. ருக்மணி ஆண் வேடம் போட்டு நடிக்கும் சண்டைப் படம், இதில் எஸ்.எஸ். கொக்கோ சிறினிவாஸ் ஆகியோர் மின்னல் கொடிக்கு உதவியாக வருகிறார்கள். மாடியிலிருந்து கீழே பாய்வது, கீழே இருந்து மாடிக்குப் பாய்வது, போலீஸ் படி படிகளாய் ஏறி ஓடுவது இப்படிச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்.

**உத்தமபுத்திரன் :** பி.யு. சின்னப்பா முதன்முதல் இரட்டை வேடத்தில் நடித்த படம். பின்னர் சிவாஜி கணேசன் நடித்து வெளிவந்த அதே கதை. இதில் டி.எஸ். பாலையா வில்லனாகவும் மாலதி கதாநாயகி யாகவும் நடிக்கின்றனர். நம்பியாரை விடப் பெரிய வில்லன்தான் என்பதை இப்படத்தின் மூலம் பாலையா நிரூபித்து விட்டார்.

**அசோக்குமார் :** எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த படம், பாட்டுகளுக்குப் பஞ்சமே இல்லை. கதா நாயகியாக என்.சி. வசந்த கோகிலம் நடித்துப் பாட்டும் பாடுகிறார். இதில் எம்.ஜி.ஆர். 16 வயது மதிக்கக்கூடிய வாலிபனாகத் தியாகராஜ பாகவதருடன் நடிக்கிறார்.

**ஜகதலப்பிரதாபன் :** பி.யு. சின்னப்பா திறம்பட நடித்த இந்து சமயக் கதை. சுந்தர்ராவ் நட்கர்ணி என்ற வடஇந்தியர் இயக்குநராகத் திறம்பட இயக்கியுள்ளார். ஒரு இடத்தில் பி.யு. சின்னப்பா 5 வேடங்களில் மேடையில் இருந்து பாடுவது, வயலின் வாசிப்பது, மேளம் இப்படி 5 இடங்களில் இருந்து கச்சேரி வைக்கிறார். ''நமக்கினி பயம் ஏது தில்லை நடராஜன் துணை இருக்கும்போது'' என்ற பாடலையே பாடுகிறார். இப்படத்திலும் கிருஷ்ணன்-மதுரம் ஜோடி நடிக்கிறார்கள்.

**ராஜகுமாரி :** எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த முதல் படம், இதில் மாலதி ராஜகுமாரியாகவும் எம்.ஆர். சுவாமிநாதன் மந்திரவாதியாகவும் எஸ்.எஸ். பாக்கியம் ராஜகுமாரியின் தோழியாகவும் நடிக்கிறார்கள். எம்.ஜி.ஆர். இப்படத்தில் அழகான உடற்கட்டுள்ள வாலிபனாகவும் பிற்காலத்தில் பல முன்னேற்றங்கள் பெறுவார் என்று கூறக்கூடியதாகவும் இருக்கிறார். யாழ்ப் பாணம் வின்னர் தியேட்டரில் 1947ஆம் ஆண்டு பார்த்தேன். அக்காலத்தில்தான் முதலாவது பாராளு மன்றத் தேர்தல் சூடு பிடித்திருந்தது. சில கூட்டங்களுக் கும் (ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வ நாயகம், வன்னியசிங்கம் ஆகியோரின் தேர்தல் பேச்சு கள்) அப்போ எம்.ஜி.ஆரை சுவர் ஒட்டிகளில் எம்.ஜி. ராமச்சந்தர் என்று விளம்பரம் செய்திருந்தார்கள்.

**வாழ்க்கை :** டி.ஆர். ராமச்சந்திரன், வைஜயந்தி மாலா கதாநாயகன், கதாநாயகியாகவும் எஸ்.வி. சகஸ்ர நாமம் வில்லனாகவும், லலிதா, பத்மினி, ராகினி சகோ தரிகளின் நாட்டியமும் திரௌபதையின் நடிப்பும் படத்துக்குப் புதுமையைத் தந்தது.

ஏவிஎம்மின் தயாரிப்பான இப்படத்தின் மூலம் ஏ.வி. மெய்யப்பச் செட்டியாரின் புகழ் உயர்ந்தது வழுவூர் ராமையா பிள்ளையின் நாட்டிய சிஷ்யைகளான நான்கு நடிகைகளும், பாரதியாரின் ''ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று'' ''வெற்றி எட்டுத் திக்கும் எட்ட கொட்டு முரசே'' போன்ற பாடல்களுக்கு நாட்டியம் ஆடியுள்ளார்கள்.

**ஹரிச்சந்திரா :** பி.யு. சின்னப்பா, பி. கண்ணாம்பா, டி.எஸ். பாலையா ஆகியோர் திறம்பட நடித்த படம். சிவாஜிகணேசன் நடித்த ஹரிச்சந்திராவுக்குப் பல வருடங்கள் முன் வந்தது. சிவாஜிகணேசனுடன் ஒப்பிடக் கூடிய நடிகன் என்பதை அவர் பல படங்களில் நிரூ பித்துள்ளார். கண்ணாம்பாவுக்கு சந்திரமதியின் வேடம் பொருத்தமாக இருந்தது. என்.எஸ். கிருஷ்ணன்-மதுரம் ஜோடிகளும் இப்படத்தில் நடித்தார்கள்.

**கைதி :** இப்படத்தை இயக்குவித்ததுமல்லாமல் வீணை பாலச்சந்தர் இதில் கதாநாயகனாகவும் நடித்தார்.

இரவல் குரல் டெக்னிக் வருமுன் செருகளத்தூர் சர்மா, வி. ராசையா, தண்டபாணி தேசிகர், வி.வி. சட கோபன், எம். எஸ். சுப்புலெட்சுமி, ஜி.என். பாலசுப்பிர மணியம், டி.கே. பட்டம்மாள், டி.ஆர். மகாலிங்கம், என்.சி. வசந்தகோகிலம், எஸ். வரலெட்சுமி. கே.பி. சுந்தராம்பாள், பாபநாசம் சிவன், எம்.கே. தியாகராஜ பாகவதர், எஸ். பானுமதி, பி.யு. சின்னப்பா, காளி என் ரத்தினம், என்.எஸ். கிருஷ்ணன், மதுரம் இன்னும் பலர் நடித்துப் பாடியுமுள்ளனர். பாடகரில் பலர் மேடைக் கச்சேரி செய்தவர்கள். டி.ஆர். ரஞ்சன், ஜெமினி கணேசன் போன்ற சிலரைவிட மற்ற நடிகர்களெல்லாம் நாடக மேடையில் நடித்து சினிமாவுக்கு வந்தவர்கள். இரவல் குரல் வந்தபின் தயாரித்த ஆரம்பப் படங் களுடன் தொடங்குகிறேன்.

**ஜீவித நௌகா :** இப்படத்தில் மலையாள நடிகர் திக்குரிசி நாயர் நடிக்கிறார். இதில்தான் திருச்சி லோக நாதன் முதன்முதலில் பாடினார் என்று நினைக்கிறேன். பாடல் ''சகாயம் யாரும் அல்லடா நீதானே நின் சகாயம் விலால புவனமல்லவோ நீதானே நின் சகாயம்'' வாழ்க்கைப் படகு என்று தமிழில் மொழிபெயர்த்த இப்படக்கதை ஒரு ஏழைக் குடும்பத்தை மையமாகக் கொண்ட சோகக் கதை. படம் பார்ப்பவர் மனத்தை நெகிழச் செய்யும்.

**அவன் :** ஹிந்தி நடிகர்கள் ராஜ் கபூர், நர்கீஸ் நடித்த படம். காதல் காட்சிகள் நிறைந்த படம். இதில் தான் முதன்முதலில் ஏ.எம். ராஜாவும், ஜிக்கி (பி.ஜி. கிருஷ்ணவேணி)யும் இரவல் குரல் கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன். ''கண்காணாததும், மனம் கண்டு விடும்'', ''அன்பே வா அழைக்கின்றதெந்தன் மூச்சே'' ஏகாந்தமாம் இம்மாலையில் என்னை வாட்டுது உன் நினைவே,'' ''காரிருள் நேரம் சாலையோ தூரம் கண்ணீர் பாரம் நெஞ்சிலே'' ''மின்னல்போல் ஆகும் இந்த வாழ்க் கையே வான்வில்போலுமே இளமை'' போன்ற பல இனிய பாடல்களைத் தம்பதிகள் விவாகம் செய்யுமுன் (ராஜா-ஜிக்கி) பாடியுள்ளார்கள்.

**என் வீடு :** வி. நாகையா நடித்துப் பாடியு முள்ளார். சிறுவயதில் 3 பிள்ளைகளும் பிரிந்து பின் அவர் சொல்லிக் கொடுத்த பாட்டைப் பெரியவர்களாகி மேடையில் பாடும்போது அடையாளம் கண்டு பிள்ளை களுடன் சேருகிறார். பாடல் : ''சின்னஞ்சிறு மைந்தர் களே தவளவானில் தவழ்நிலவின் ஒளியில் ஓடி ஆடு வீரே'' இப்பாடல்கள் எல்லாம் என் ஞாபகத்தில் உள்ளன.

சிவாஜி கணேசன், மு. கருணாநிதி வசனங்கள் இவைகளை இரண்டாவது அத்தியாயமாக எழுத விரும்புகிறேன். 1950க்குப்பின் வந்ததால் அதற்குமுன் வந்த படங்களை முதலாம் அத்தியாயத்தில் எழுதினால் கால வரையறவு தெளிவாக இருக்கும் என நினைக் கிறேன். ✱

*(தொடரும்)*

# தேய்பிறை காணாத சூரியன்

இன எழுச்சிக் கவிஞர்

## நெல்லை இராமச்சந்திரன்

விரல்ஊன்றி; அடிஊன்றி; கால்கள் ஊன்றி;
விரிவானாய் உயர்ந்தவனே! தமிழ்ச்சொல் லில்!நீ
பால்ஊன்றி; பனிஊன்றி; கதிர்கள் ஊன்றிப்
பன்முகத்தை விரித்தவனே! தமிழ்ப்ப கையை
உரல்ஊன்றிப் பொடியாக்கிக் காற்றில் தூவும்
உயர்அழுத்த மின்விசைநீ! தமிழை யள்ளிக்
கரமூன்றிக் கரமூன்றித் தாள்ப ரப்பிக்
களப்பரணி வடிப்பவனே! கலைஞர் வாழ்க!

அஞ்சுபத்தில் பொன்விழாவும்; தொடர்ந்த உன்றன்
அரசியலில் பொன்விழாவும், படைத் தளித்த
கொஞ்சுதமிழ் இலக்கியத்தில் பொன்வி ழாவும்;
குதித்ததமிழ்த் திரைவாழ்வின் பொன்வி ழாவும்;
அஞ்சுகத்தாய் மகன்!கண்டார்! அவரைப் போன்றே
அடுக்கிவைத்த பொன்விழாக்கள் யார்தாம் கண்டார்?
செங்கதிராய்ச் சுடர்விட்ட சட்ட மன்றச்
சீர்பணிக்கே பொன்விழாவைக் காண்கின் றாய்!நீ!

குளித்தலையில் முதல்வெற்றிக் குளியல்! இன்னும்
குளித்தபடி குளிக்கின்றாய் தேர்தல் தோறும்!
உளிக்கூர்மைப் பேச்சாலே சட்ட மன்றில்
உன்கருத்து சிலைவடித்தாய்! உன்றன் பேச்சில்
களித்தோர்கள் கலிங்கத்துப் பரணி கண்டார்!
கலந்தோர்கள் குறளமுதம் நித்தம் உண்டார்!
விளிப்பினிலும் வேர்பாய்ச்சும் தமிழே! உன்னால்
வீறுதமிழ் சட்டமன்றில் குடியே றிற்று!

எள்ளலென்ன? நகைப்பென்ன? குத்த லென்ன?
எழுந்தபகை மூச்சென்ன? எல்லாம் வென்றாய்!
துள்ளலென்ன? துரோகமென்ன? துயரம் என்ன?
தூசியிலாப் புயலாகித் தமிழால் வென்றாய்!
நள்ளிருளை விதைத்தார்கள்! தமிழ்வி தைத்து
நலவிடியல் நீபடைத்தாய்! என்றும் பேசாப்
'புள்ளி'களே குடியிருந்த சட்ட மன்றில்
'புதுவசந்தம்' அண்ணாவும்; நீயும் தாமே!

உறுப்பினராய்; அமைச்சராய்; முதல்அ மைச்சாய்;
ஒளிவிட்ட பொன்குன்றே! பேசும் பேச்சில்
மறுப்புரைக்க முடியாத கருத்தை யள்ளி
மலையாக்கிக் குவித்தவன்நீ! 'மக்கள் பாட்டை'
உருக்கமுடன் தாலாட்டாய்ப் பாடி வந்த
ஒண்டமிழ்த்தாய்க் கோபுரம்நீ! உன்றன் தொண்டால்
தெருக்களெல்லாம் தமிழ்உணர்வு! தமிழி னத்தின்
தேய்பிறையே காணாத சூரி யன்நீ!

# எழுச்சி

நெருப்பலைப் பாவலர்

## இராம. இளங்கோவன், பெங்களூர்

பிறக்கின்ற பிள்ளைகளில் எழுச்சி வேண்டும்!
பேசுகின்ற மொழியினிலும் எழுச்சி வேண்டும்!
பிறக்கின்ற எண்ணத்தில் எழுச்சி வேண்டும்!
பிழைக்கின்ற பிழைப்பினிலும் எழுச்சி வேண்டும்!
உறங்குகின்ற உறக்கத்தில் எழுச்சி வேண்டும்!
உண்ணுகின்ற உணவினிலும் எழுச்சி வேண்டும்!
இறக்கின்ற இறப்பினிலும் எழுச்சி வேண்டும்!
இறந்தபின்னும் எழுச்சியாலே வாழ வேண்டும்!

ஐந்தறிவு ஆடுமாடு நாமு மில்லை!
ஆறறிவு மாந்தரென உணர்ந்து கொள்வோம்!
பைந்தமிழர் நாமெல்லாம் வீரர் என்போம்!
பாரினையும் கட்டியாளும் திறமை கொள்வோம்;
நைந்துநாளும் நூலாகும் நிலையைப் போக்கி
நெஞ்சுயர்த்திப் போரிடவே களமும் காண்போம்!
பைந்தமிழைப் பாரெல்லாம் ஏற்கச் செய்வோம்!
பாடையிலே படுத்திடினும் எழுச்சி கொள்வோம்!

கற்கின்ற கல்வியிலும் காணு கின்ற
காட்சியிலும் எழுச்சித்தீ காண வேண்டும்!
விற்கின்ற பொருளினிலும், வாடிக் காய்ந்து
வெடித்திருக்கும் வயலினிலும், விறகுக் கட்டை,
புற்பூண்டு அனைத்தினிலும் புதிய பூவாய்ப்
பார்செழிக்க எழுச்சிப்பூ பூக்க வேண்டும்!
கற்களிலும் கருவடைந்து, கனவில் கூடக்
காணவேண்டும்; எழுச்சிரத்தம் பரவ வேண்டும்!

எழுகின்ற எண்ணெழுத்தில் எழுச்சி மையை
எழுதுகோலில் ஊற்றிஊற்றி எழுத வேண்டும்!
உழுகின்ற நிலத்தினிலும் எழுச்சி வித்தை
ஊன்றியூன்றி விளையவைப்போம்! ஆணும் பெண்ணும்
தழுவியின்பம் துய்த்தபோதும், பாடு பட்டும்
தனிமையிலே வேதனையில் வாடும் போதும்,
அழுதழுது உதிர்க்கின்ற கண்ணீர் தன்னில்,
அரும்பரும்பாய் எழுச்சிதனைப் பூக்க வைப்போம்!

எழுச்சியில்லா எழுத்தெல்லாம் எழுத்தே அல்ல!
எழுச்சியில்லா எண்ணமெல்லாம் எண்ண மல்ல!
எழுச்சியில்லா எவ்வுயிரும் உயிரு மல்ல!
எழுச்சியில்லா உணர்வுகளும் உணர்வே அல்ல!
எழுச்சியில்லா எவ்விடத்தும் வளர்ச்சி உண்டோ?
எழுச்சியில்லாத் துறைதோறும் சிறப்பு முண்டோ?
எழுச்சியின்றேல் பிறந்தஉயிர் நடத்தல் ஆமோ?
எழுச்சிஇன்றித் தமிழினமும், வையம் உண்டோ?

# மலேசியாவிலிருந்து வெளிவரும்
# வல்லினம்
## சிற்றிலக்கிய ஏடு ஓர் அறிமுகம்

என். செல்வராசா,
நூலகவியலாளர், இலண்டன்

திரு. ம. நவீன என்பவரை ஆசிரியராகக் கொண்டு திரு. பா. அ. சிவம், திரு. சந்துரு ஆகியோரின் முயற்சியினால் 'வல்லினம்' என்னும் காலாண்டுச் சிற்றிலக்கிய ஏடு யூன் மாதம் தொடக்கம் வெளிவந்துள்ளது.

தமிழகத்திலிருந்து மனுஷ்யபுத்திரனின் உயிர்மைப் பதிப்பகம் இவர்களது சஞ்சிகையை அச்சிட்டு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கின்றது என்றும் அறியமுடிகின்றது. வல்லினம் சிற்றிலக்கிய ஏட்டின் ஆலோசகர்களாக மா. சண்முகசிவா, சீ. முத்துசாமி, கோ. முனியாண்டி போன்ற மலேசிய முன்னோடித் தமிழ் எழுத்தாளர்கள் முன்வந்திருப்பது இளைஞர்களான நவீனுக்கும் அவர்தம் சகாக்களுக்கும் மனோ தைரியத்தை நிச்சயம் ஊட்டக்கூடும்.

வல்லினம் இதழின் ஜுன் 2007க்குரிய முதலாவது இதழிலேயே அச்சீட்டுச் செலவைச் சிக்கனமாகக் கையாண்டிருப்பதைப் பார்த்துப் புரிந்துகொள்ள முடிகின்றது. முன்னைய காதல் சஞ்சிகையில் கற்ற பாடமாக இது இருக்கலாம். காதல் சஞ்சிகையில் தம் கை வண்ணத்தைக் காட்டியது போலவே இங்கும் அழகியல் அம்சம் பொருந்திய திட்டமிட்ட பக்க வடிவமைப்பில் அதிக அக்கறையினைச் செலுத்தியுள்ளார்கள்.

சஞ்சிகையின் உள்ளே பரிமாறப்பட்டிருக்கும் இலக்கிய விடயங்களைச் சுருக்கமாகக் கூறுகின்றேன். மலேசிய அறிவியல் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராகவும் இணைப் பேராசிரியராகவும் இருந்த தமிழறிஞர், மலேசிய எழுத்தாளர் ரெ. கார்த்திகேசு அவர்களும், மலேசியத் தமிழ் நெறிக் கழகத்தின் தலைவராகவும் பண்டார்பாரு செந்தூல் இடைநிலைப் பள்ளியில் உளவளத்துணை ஆசிரியராகவும் பணியாற்றும் இரா. திருமாவளவன் ஆகியோரின் இரண்டு நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்விதழின் சிறுகதைகளை சீ. முத்துசாமி, கோ. முனியாண்டி, மஹாத்மன், ம. நவீன் ஆகியோர் எழுதியுள்ளனர். இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை இலண்டனிலிருந்து நூலகவியலாளர் என். செல்வராசா. மலேசியாவிலிருந்து ந. மகேஸ்வரி, யுவராஜன், ப. மணிஜெகதீசன், கோ. புண்ணியவான் ஆகியோர் வழங்கியுள்ளனர். பா.அ. சிவம், அருண், தோழி, கருணாகரன், ஏ. தேவராஜன், சந்துரு ஆகியோருடன் சுவிஸ்சிலிருந்து நளாயினி தாமரைச் செல்வனும் கவிதைகளை இவ்விதழுக்கு வழங்கியுள்ளனர்.

இளம் பள்ளி ஆசிரியரான ம. நவீன், வல்லினத்தின் பிரதம ஆசிரியராகவும், பா.அ. சிவம் துணை ஆசிரியராகவும் இயங்கியுள்ளனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் ஆதரவினை நாடி உலகளாவிய ரீதியில் தனது பறத்தலை சுதந்திரமாக மேற்கொள்ளத் துடிக்கும் வல்லினம் என்ற குருவிக் குஞ்சு அதன் கூட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து சிற கடிக்கின்றது. மலேசியப் படைப்பாளிகளையும் தம்முடன் இணைத்து உலகத் தமிழ் இலக்கியவானில் பயணிக்க விரும்பும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துத் தமிழ் உறவுகள் அதன் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சிறகசைப்பிற்கு ஊக்கத்தை வழங்க முன்வர வேண்டும். படைப்பாளிகள் தமது ஆக்கங்களை மட்டும் வல்லினத்துக்கு அனுப்பி வைப்பதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாகக் கருதாமல் சிறிய பணத் தொகையும் சேர்த்து அவ்விதழின் வளர்ச்சிக்கு உரமாக வழங்குவதற்கு முன்வரவேண்டும். ஆரோக்கியமானதும், சிந்தனையைத் தூண்டுவதுமான படைப்புகளையும் தன்னகத்தே கொண்டு வெளிவந்து காட்டியுள்ள இச் சிற்றிலக்கிய ஏட்டின் வளர்ச்சி ஓரளவு எமது கைகளிலும் தாம் உள்ளது. ஈழத்து மலேசிய இலக்கிய உறவினைப் பேணவிரும்பும் படைப்பாளிகளுக்கு வல்லினத்தின் தொடர்பிற்கான தகவல்களைக் கீழே தந்துள்ளேன்.

தொடர்புகளுக்கு :

M. Naveen, Kaanal Publication, 16, Jalan 7/5,
Taman Sri Gombak, 68100, Batu Caves,
Selangor, Malaysia,
E-mail : na_vin82@yahoo.com.sg
vallinamm@yahoo.com.my



## பொன் பாலசுந்தரம் எழுதிய பிரித்தானியாவும் ஈழத் தமிழரும் நூல் வெளியீட்டு விழா

இலண்டனில் வாழ்ந்துவரும் மூத்த பத்திரிகையாளரும் சிறந்த எழுத்தாளரும் இலக்கிய-சமயப் பேச்சாளரும் சிந்தனையாளருமான **பொன் பாலசுந்தரம்** அவர்களின் **'பிரித்தானியாவும் ஈழத் தமிழரும்'** நூல் வெளியீட்டு விழா இலண்டன் முத்துமாரி அம்மன் (ரூட்டிங்) மண்டபத்தில் 8-7-07 அன்று நடைபெறவுள்ளது.

சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழா எழுத்தாளரும் ஊடகவியலாளருமான விமல் சொக்கநாதன் தலைமையில் நடைபெறுகிறது. வைத்திய கலாநிதிகள் எஸ். ஞானச்செல்வன் -கோணேஸ்வரி மற்றும் குகபாலா-கிரிஜா தம்பதியினர் மங்கல விளக்கேற்றித் தொடக்கி வைக்கின்றனர்.

சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயலாளர் ஐ.தி. சம்பந்தன் வரவேற்புரை நிகழ்த்த, இலண்டன் முத்து மாரி அம்மன் ஆலயத் தலைவர் நா. சீவரத்தினம் ஆசியுரை வழங்க, சிங்கப்பூரிலிருந்து சிறப்பு வருகை தரும் திருக்குறள் ஈ.வி. சிங்கன் சிறப்புப் பேருரை ஆற்றுகிறார்.

ஆய்வாளர் மு. நித்தியானந்தம் நூல் ஆய்வுரை நல்கவும், மூத்த நூலகவியலாளர் என். செல்வராசா நூல் அறிமுக உரை நிகழ்த்தவும், திருமதி நவசோதி யோகரத்தினம் நூல் கண்ணோட்டம் வழங்கவும் உள்ளனர்.

செல்வி துளசி மகேஸ்வரன் 'இளைஞர் நோக்கு' குறித்து உரையாற்ற, வைத்திய கலாநிதி எஸ். நவரத்தினம், வ.இ. இராமநாதன், புதினம் இதழாசிரியர் ஈ.கே. இராஜகோபால் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

நூலாசிரியர் பொன் பாலசுந்தரத்தின் ஏற்புரைக்கு முன்பாகப் பேராசிரியர் கோபன் மகாதேவா, தி. சிறீகந்தராசா, க. தியாகமூர்த்தி ஆகிய பெருமக்கள், அவர்களின் தொண்டுகளைப் பாராட்டும் வகையில் சிறப்பாகக் கௌரவிக்கப்படுவர்.

பொன் பாலசுந்தரத்தின் சாதனைப் படைப்பான இந்நூல் புகலிட நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் படிக்க வேண்டிய உணர்வுபூர்வமான வாழ்க்கை வழிகாட்டியாகத் திகழ்கிறது.

## A NEW SHIVA TEMPLE IN USA AT THE COST OF RS. 100 CRORE

America will soon have a new landmark temple dedicated to Lord Shiva. The massive temple will be built at Nor Cross Bruke Hallow Parkway, Georgia. The State of Georgia is a commercial hub of America. It's home for over 40,000 Indians.

The cost of for the project is estimated to be around Rs. 100 crores. The land for the project, a sprawling 9.5 acres, has already been acquired at the cost of 5 million US dollars. The temple will be a major tourist attraction, besides being a religious centre.

The man behind the massive project is none other than Sri Sri Selvam Siddar, also known as Doctor Commander Selvam, who lives in USA.

Sri Sri Selvam Siddar started an Ashram in California. In just a span of 10 years, the ashram became famous and today has 1.6 million devotees. He is a much sought after astrologer in USA and leading dailies in North America regularly carry his articles on the Science of Vedic Astrology. He is assisted by a team of 48 Vedic scholars who are well versed in yantra, tantra and mantras.

He is involved in the Shiva Temple project for over three months. The temple will be built under the trust called The Hindu Temple of Georgia.

The cost for the project is being single handedly met by Sri Sri Selvam himself. No donation has been received from any one. This is going to be the world's first Shiva Temple with 108 urchava moorthis.

The Ashram run by Sri Sri Selvam Siddar is also involved in project at Coimbatore. A 7 storey building is being built in the name of The Rishi Chettinad, in a sprawling 25,000 sq.ft. The cost of the project is Rs. 2 crores.




## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பத்தாவது மாநாடு


மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் எதிர்வரும் சூலை 20-22 நாள்களில் 'உலகத் தமிழர் நிலை' என்னும் கருப்பொருளில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 10 ஆவது மாநாடு நடைபெறுகிறது. பல்வேறு தலைப்புகளில் பன்னாட்டு அறிஞர் பெருமக்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் படைக்கவிருக்கின்றனர். சிறப்பாக "புலம்பெயர்ந்த தமிழர் நிலை அன்று முதல் இன்று வரை" என்னும் தலைப்பில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட உள்ளன. அறிஞர் பெருமக்களின் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கிய சிறப்பு மலரும் வெளியிடப்பட உள்ளது. தொடர்புக்கு :

P.K. Shanmugam, No. 28, Lingtang Selar, Kaw. 7, Sg. Bertek, 41100 Klang, Selangor, Malaysia, Tel : 006-03-33-722-999

Dr. K.P. Aravanan, 2, Munirathnam St., Ayyavoo Colony, Chennai - 600 029. 044-2374 4568

E-mail : aramaraam@yahoo.co.in

# ஆயிரம் காலத்துப் பயிரை ஆற்றுப்படுத்தும் அமுதன்



நாகரிக மனிதவாழ்வின் தொடர்ச்சி திருமணங்கள் வழியாக உறுதி செய்யப்படுகின்றது. ஒருவரின் வாழ்வில் ஒரு தடவை மட்டும் நடைபெறும் முக்கிய சம்பவமாகத் தமிழர்கள் திருமணத்தைக் கொள்கின்றனர். பிறப்பும், இறப்பும் மட்டுமே ஒரேயொரு தடவை நிகழ்வது என்றாலும் தமிழ்க் கலாச்சாரம் திருமணத்தையும் இவ்வாறான ஒன்றாக வலியுறுத்துவதன் பின்னணியில் திருமணத்தின் முக்கியத்துவம் எத்தகையது?

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்று எவர்தாம் எடுத்துச் சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்பவர் யார்? காதலித்து மணம் முடிப்பவர்கள் தாமேதாம் நிச்சயித்ததாகக் கூறுவர். பெற்றோர் கூறுவதும் அவ்வாறுதான். தமது பிள்ளைகளுக்குத் துணைகளையைத் தாமேதாம் நிச்சயித்ததாகக் கூறுவர். இவர்களுக்குப் புறம்பாகத் தரகர்கள் இருக்கிறார்களே! இவர்கள் இன்ன இன்ன திருமணங்களை நானே நிச்சயித்திருந்தேன் என்று தம்பட்டம் அடிப்பர். ஆனால், இந்த வித்தியாசமான மனிதர் இருக்கிறாரே வேல் அமுதன்! அவரின் பாங்கும், பாணியும், நினைவும், நோக்கும் தனி. அவருடன் ஒரு நேர்காணலை நடத்துவதே ஒரு தனிப்பேறு.

'வேல் அமுதன் திருமண ஆலோசனையகம்' கொழும்பு, வெள்ளவத்தையில் அமைந்திருக்கிறது. கனிவான மொழிப் பிரயோகம், நேர்த்தியானதும் நேர்மையானதுமான நடத்துகை, சிறப்பான சேவை இந்நிலையத்தில் சாதாரணமாகக் கிடைக்கிறது. திருமணத்திற்கு ஓர் ஆணையும் பெண்ணையும் பொருத்துவிப்பதில் முக்கியமாக 'சுய தெரிவு முறை' என்னும் ஒன்று இங்கு நடைமுறையில் உள்ளது. இதுபற்றித் திருமண ஆற்றுப்படுத்துநர் வேல் அமுதன் விளக்குகையில்,

ஒருவர் மற்றவரைப் பற்றிய முடிந்தளவு அதிக விவரங்களைப் பரஸ்பரம் அறிந்துகொள்ளும் ஆவண முறை ஏற்பாடுகள் செய்யப்படுவதாகக் கூறுகிறார். அதாவது, பெறக்கூடியதாக உள்ள அனைத்து விவரங்களையும் ஒவ்வொரு நபருக்காகவும் பேணும் தனிநபர் கோவையில் திரட்டி வைத்திருக்கிறார். ஒவ்வொரு கோவையிலும் ஒவ்வொரு போட்டோ ஆல்பமே இருக்கிறது. அதாவது, நேரில் சந்திக்காமலே விவரங்களுக்கூடாக ஒருவரைப் பார்க்கவும், அவரது எதிர்பார்ப்புகள் இலட்சியங்கள் என்பனவற்றையும்கூட இதன்மூலம் அறியமுடிகிறது. அந்த அளவுக்குத் துல்லியமான விவரங்கள் தரப்படுகின்றன. இதனால் பெற்றார், உற்றார், நண்பர் மூலம் ஏற்பாடு செய்யப்படும் 'பேச்சு' திருமணத்தில் இயல்பாக இருக்கக்கூடிய பெருங்குறைபாடுகள் இல்லாது போய்விடுகிறது. ஒரு காதல் திருமணத்தினால் பெறக்கூடிய அனுகூலங்களில் பெருமளவு கைவரப் பெறுவதாகவும் உள்ளது. அதாவது, காதலர் நேரில் பேசிப் பெற்றுக் கொள்வது போன்ற விவரத் தகவல்கள் இங்குப் பெற்றுப் பரிமாறப்படுகின்றன. இந்த வகையில் 'சுய தெரிவு முறை' என்று வேல் அமுதன் பெருமையுடன் அழைக்கும் முறை பெரும் அர்த்தம் பொதிந்ததாகவும், அனுகூலங்கள் நிறைந்ததாகவும் உள்ளது.

ஒரு வேண்டுகோள் கையில் கிடைத்தது தொடக்கம் அது திருமண நிறைவேற்றமாக மாறும் வரையில் நடப்பவற்றை வேல் அமுதன் பக்குவமாக எடுத்துக் கூறுகிறார்.

அவரிடமுள்ள கோவைகளைப் பார்வையிட்டுப் பின்னர்ச் சாதகக் குறிப்புகளை அவர்களே தேர்ந்தெடுப்பது முதலாவது கட்டப்பணி. சோதிடப் பொருத்த அறிக்கைகளைப் பெற்று வந்து ஆலோசனையகத்தில் பதிவுசெய்தல் இரண்டாவது கட்டப்பணி. முன்னேற்பாட்டின்படி பெற்றோர் அல்லது பிரதிநிதிகள் ஆலோசனையகத்தில் சந்தித்து விவரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மூன்றாவது கட்டம். சீதனம் பற்றிய வெளிப்படுத்தல்கள், அதுபற்றிய விவரங்களை உறுதி செய்தல் நான்காவது கட்டம். மணமகனும் மணமகளும் ஆலோசனையகத்தில் நேரில் சந்தித்து உரையாடுதல் இறுதிக்கட்டம். இதன் பின்னர்த் திருமண ஏற்பாடுகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஈடுபடுவர்.

திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்ற வகையில் நோக்கும் போது உலக நாடுகள் பலவற்றிலும் புலம் பெயர்ந்தவர்களும், உறவுகள் சொந்த ஊர்களில் உள்ளவர்களுமாகச் சிதறுண்டும், நேரடி சந்திப்புகள் அரிதாகி, அரைகுறையான தகவல்கள் பரிமாறப்பட்ட நிலையில் வாழும் தமிழ் மக்களுக்கு வேல் அமுதனின் சேவை காலத்தால் போற்றப்பட்ட வேண்டியதுடன், வரலாற்றால் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் திருமண ஆற்றுப்படுத்துநராகச் சேவையாற்றி வரும் வேல் அமுதன் தனது அனுபவங்களை ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். கடந்த யூன் 3 ஆம் திகதி 'திருமண ஆற்றுப்படுத்துநர் அனுபவங்கள்' என்னும் நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் வெளியீட்டு நிகழ்வில் இவரின் சேவை பெற்றுத் திருமணம் செய்த தம்பதியர் சிலரும் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

ஓர் ஊரில் ஒரே நாட்டில் வாழ்பவர்கள் மத்தியில் நேர்முகமான சந்திப்புகள் இலகுவானவை. குறித்த நபரை மட்டுமன்றி அவருடன் தொடர்புடைய பலரையும் நேரில் சந்திப்பது, தகவல்களைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்வது இலகுவானது. உலகம் கிராமமாகச் சுருங்கிவிட்டது என்று என்னதான் கூறினாலும் உடற்சைகை மொழியற்ற தொலைத் தொடர்பு, மின்னஞ்சல், எஸ்.எம்.எஸ். முறைகளே நடைமுறையில் உள்ளன. இவை தகவல் பரிமாற்றத்தை முழுமையாக உறுதி செய்வனவல்ல. இன்று இலங்கையின் போர்ச் சூழல் தமிழர்களைச் சிதறிப்போகச் செய்திருக்கிறது. குடும்பம் உட்படப் பாரம்பரிய சமூக, கலாசாரக் கட்டமைப்புகள் சிதறிய நிலையில், விவரங்களை முழுமையாகத் திரட்டும் முயற்சியானது மிகவும் வேண்டப்படுவதாகும். திருமணம் போன்றே வேல் அமுதனின் சேவையும் ஆயிரம் காலத்திற்கு நிலைத்துப் பயன்தரும் ஒன்றே!

*நேர்காணல் - நீரன்*

**Tamil Information Centre**

தமிழ் தகவல் நடுவம்

THULASI
Bridge End Close (Off Clifton Road)
Kingston Upon Thames KT2 6PZ, (UK)
Telephone : +44 (0) 20 8546 1560
Fax : + 44 (0) 20 8546 5701
E-mail : admin.tic@sangu.org

Committed to Human Rights and Community Development

Our Ref : ADV/ilo/js Date 11 May 2007

Mr. Juan Somavia
Secretary-General
International Labour Office
4 Route des Morillons
CH-1211 Geneva 22
Switerland

Dear Sir

The Tamil Information Centre is extremely concerned over the deterioration in the situation of trade union leaders and other fundamental rights activists in Sri Lanka. Trade union representatives increasingly face threats, intimidation, adduction and disappearance. These indicate the suppression of trade unions, the freedom of expression and the freedom of association. Intimidation, threats, abduction and disappearances have been used to deal with opponents, including political opponents, trade union members and others speaking out justifiably for the rights of the people.

On 9 May 2007, the Committee for Investigation of the Disappeared (CID), an organization campaigning against disappearances and on behalf of families affected by disappearances, issued a list of 22 trade union activists and media workers arrested since 5 February 2007 and held in custody. They were arrested under Emergency Regulations, which have the effect of removing judicial oversight in relation to arrest and detention, and suspend the relevant provisions of the normal law. They give authority to security forces to arrest on mere suspicion, without warrant. The person arrested can be indefinitely detained without access and without charge. The ERs also give wide powers of preventive detention to the Defence Secretary. The ERs allow confessions to the police or any other person admissible as evidence in court and suspend the relevant provisions of the normal law. The ERs also erode the powers of the courts in relation to deaths in the custody of the security forces. Under the ERs enquiries into deaths in custody can take place only on application by the police.

M.A. Sisira Priyankara, trade union activist and editor of the monthly newspaper Akuna, Nihal Serasinghe, member of the railway trade union Dumriya Kamkaru Ekathuva and Lalith Seneviratne were abducted on 5 February 2007 in Colombo. In the face trade union protest, the Sri Lankan government admitted on 8 February that they were in its custody. The rail union President Jagath Udaya Kumar was arrested at his work place in Colombo on 15 February. Trade union leader and railway technician Sudesh Nandimal Silva was detained on 27 April 2007 and since then his family has been threatened and given an ultimatum to leave their residence. When four arrested trade union and media workers were produced before the courts on 8 May 2007, the Magistrate said that she was unable to release them because the detention was under Emergency Regulations, even though she recognized that the detention was illegal. The government claims that these persons are linked to the Tamil Tigers, but it is clear that they have been targeted for canvassing the rights of the people and opposing some of the policies of the government.

Hundreds of civilians have been abducted within the last 18 months in all parts of Sri Lanka and many have been killed. Many of the abductions have occurred at the work place and have affected the working atmosphere. In the north-east many industries have come to a standstill and others are collapsing leading to a huge problem of unemployment and under-employment.

The UN Working Group on Disappearances said in its report in December 2005 that of more than 12,278 cases of disappearances in Sri Lanka submitted to the government, 5,708 remain un-clarified and this is the highest number of disappearances in the world next to the case of Iraq with 16,517 disappearances. Four Presidential Commissions inquired into 37,662 of the 54,404 complaints of disappearances, which took place between January 1988 and December 1995, and found evidence of disappearance in 21,115 cases. No enquiries have been conducted into another 16,742 cases of disappearances. No further action has been taken in the 21,115 cases relating to which the commissions have recorded the names of the security force personnel who were responsible for the disappearances.

It is said that International Labour Standards are the legal component in the ILO's strategy, including for ensuring that people can work in dignity and safety. The preamble to the ILO Constitution says that conditions of labour exist involving such injustice, hardship and privation and an improvement of those conditions is urgently required, including the recognition of the principle of freedom of association. Freedom of speech is a pillar of the ILO. The freedoms of association and expression are enshrined on the constitution of Sri Lanka. We believe that these freedoms are in peril in the island.

We earnestly request you to take appropriate international action as is necessary to safeguard trade unionists, trade union rights and freedom of association in Sri Lanka, without interference and intimidation from state authorities.

We are surprised to note that given the current situation of the trade union representatives in Sri Lanka,

the attack on journalists and the human rights record of Sri Lanka, the ILO has invited the Sri Lankan President Mahinda Rajapakse to address the 96th Session of the International Labour Conference in Geneva in May-June 2007, as keynote speaker.

President Mahinda Rajapakse is the supreme commander of the security forces and is also Defence Minister. The President's brother Gotabaya Rajapakse is the Secretary to the Ministry of Defence, Public Security and Law and Order. As the holder of the positions, President Rajapakse cannot deny knowledge or responsibility for the actions of the security forces, particularly the human rights violations.

We are writing to urge to raise our concerns over the repression of the trade unionists and obtain the immediate release of all the trade union activists and others who have been detained without trial for long periods, some for many years. We believe that it should be pointed out to President Rajapakse that his country's reputation in relation to human and trade union rights and the lack of democratic governance will further deteriorate in the eyes of the international community if immediate remedial action is not taken by his government.

We also believe that inaction in this regard would tarnish the image of the ILO and impact on its outstanding work under your leadership.

Thanking you.

Yours Sincerely
**V. Varadakumar**
Executive Secretary

## கண்டதும் உண்டதும்

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழகச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்க முன்னாள் செய லருமான தமிழ்வேள் திரு. **கந்தசாமி** அவர்கள் :

''தங்கள் சுடரொளி வெளியீடு நல்ல இலக்கிய இதழாக வெளிவந்து பெரு உவகை தருகிறது. முன்பு அரசியல், இப்பொழுது நல்ல இலக்கியப் பயனுள்ள பணி. பேருவுவகை தருகிறது. உலகில் தரமான இலக்கிய இதழாகவுள்ளது சுடரொளி''.

இலண்டன் ஹோன்சர்ச் பகுதியிலிருந்து **நக்கீரன் அரச ரத்தினம்** : 'உங்களுடைய சுடரொளி கலை இலக்கிய அரசியல் சமூக இதழ் இன்று கிடைத்தது. சுடரொளியில் உள்ள பல பயனுள்ள செய்திகளைப் படித்து ஆனந்தமடைந்தேன். இலங்கையில் உங்கள் சேவையைத் தொடங்கி உலகமெலாம் தமிழின் மேம் பாட்டுக்காகச் சுயநலமின்றி உழைக்கின்றீர்கள். நான் உங்களுக்கு வருடச்சந்தா கொடுக்காமல் இருந்தும் இந்த மாத இதழை அனுப்பிய வண்ணமாக இருக்கிறீர்கள்.

எனது அன்பளிப்புத் தொகையை அனுப்பி 'சுடரொளி உலகிற்கு சுடரொளி' என வாழ்த்துகிறேன். வெளிவந்துள்ள பொன்பாலசுந்தரம் ஐயாவின் புத்தகத் தைப் பார்த்து படிக்க ரசிக்க ஆவலாக இருக்கிறேன்.


திருமண சேவை

**தங்கள் தேடல் மணமகனா?... மணமகளா?...**
**உள்நாடா?... வெளிநாடா?...**

# எவ்வகைத் தெரிவுக்கும் வேல் அமுதனே!

**விவரங்களைத் தெரிந்திட மூத்த, புகழ்பூத்த, 'சுயதெரிவுமுறை முன்னோடி', சர்வதேசத் திருமண ஆற்றுப்படுத்துநர், 'தனிமனித நிறுவனர்' குடும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுக!**



தொலைபேசித் தொடர்புக்கு

முன்னுரிமை வழங்கப்பட்ட நாள்கள் அரச விடுமுறை நாள்கள் தவிர்ந்த, திங்கள், புதன், வெள்ளி நாள்கள் மாத்திரமே!

இலங்கை நேரம் :

**மாலைமணி 4.30 - 8.30 வரை!**

கொழும்பு நேரடித் தொலைபேசி :

**2360488, 4514396, 0602158067**

**வேல் அமுதனை நேரில் சந்தித்தல் முக்கியம்!**

முடியாதவர்கள் தங்கள் பிரதிநிதி ஒருவரை அனுப்பிச் சந்திக்கச் செய்யலாம்!

8-3-3 Metro Apartment, (Opposite Wellarwatte Police Station Via 33rd Lane)
55th Lane, Colombo-06, Sri Lanka

# வெற்றிக்கான சில வழிகள்

சிவவதனி பிரபாகன், கனடா

**வா**ழ்வில் அனைவரது குறிக்கோள்களுமே வெற்றிபெற வேண்டும் என்பதேயாகும். வெற்றி என்பது கடின உழைப்பின் பலன். தோல்விகளிலும் தளராதவர் மட்டுமே வெற்றிபெற முடியும்.

வெற்றி என்பது உச்ச எல்லை அல்ல. அது தொடரும் பயணத்தின் ஆரம்பப்புள்ளியாக இருப்பின் தான் அதனை உண்மையான வெற்றி என ஏற்றுக் கொள்ளலாம்.

வெற்றி பெற்ற மனிதர்கள் எல்லோருமே வரலாற்றில் இடம் பிடித்தவர்கள் எனக் கூற முடியாது. அதேபோன்று தோல்வியுற்ற மனிதர்களையும் வரலாறு மறந்ததாகக் கொள்ள முடியாது.

வாழ்வின் பரிணாமத்துக்கேற்ப வெற்றி தோல்விக்கப்பாலும் நிலைத்து வாழும் மனிதர்களும் பலர் உள்ளனர்.

வெற்றியின் பரிணாமத்தையும், நிலைப்புத் தன்மையையும் பொறுத்ததே முன்னேற்றம் என்கின்ற பாதை.

எவரும் இப்பூமிக்கு வரும்போது எதையும் கொண்டு வந்திலர். உலகை விட்டுச் செல்கையிலும் எதையும் கொண்டு போகிலர். ஆனால் வாழும் வாழ்வு முறையால் மண்ணில் பல நினைவுகளை விட்டுச் செல்பவராகவும், மண்ணுக்கு ஏதேனும் உபகாரம் செய்தவராகவும் வாழ்ந்திட்ட மனிதர்கள் மட்டும் பூதவுடல் விட்டகன்றிடினும் புகழுடலுள் புகுந்து பூமியில் நிலைத்தவராக வாழ்கின்றனர்.

வெற்றிப் பாதையின் ஆரம்பமானது நீண்ட காலக் குறிக்கோள்களின் நிருணயிப்பில் ஆரம்பிக்கிறது. குறிக்கோள்கள் எப்பொழுதுமே பெரிய அளவில் இருக்க வேண்டும். வானத்துக்கு இலக்கு வைத்தால் தான் கோபுரம் வரையேனும் பயணிக்க முடியும். விண்மீன்களைப் பார்க்க வேண்டுமானால் வானத்தை விலக்கி வைக்க முடியாது. குறிக்கோள்களைச் சென்றடைய இலக்கு நோக்கிய கனவுகள் இருக்க வேண்டும்.

''கனவுகள் ஒருவருடைய சிறப்பியல்புக்கு உரைகல்'' என்றார் ஹென்றி டேவிட் தோரோ.

கனவுகளே வெற்றிக்கான மூலசக்தி, கனவுகள் யாவும் பலிப்பதில்லை. ஆனாலும் செயல்களுக்கு ஊக்கமாகத் திகழ்கின்றன. சில ஆக்கபூர்வமான நல்ல கனவுகள்.

மகாகவி பாரதியார்கூட இதனைத்தான் ''கனவு மெய்ப்பட வேண்டும். கைவசமாவது விரைவினில் வேண்டும்'' எனத் தம் கவிதையில் பாடிவைத்தார்.

கனவுகள் என்பவை கண்டதையும் காணும் வர்ணக் கனவுகள் அல்ல. வாழ்க்கை பற்றிய கனவுகளையே இங்கே குறிப்பிடுகின்றேன். கனவிலும் தெளிவு வேண்டும். குழப்பமற்ற தூரநோக்கு இருக்க வேண்டும்.

பயணத்தை ஆரம்பிக்குமுன் போகுமிடம் தெரிந்திருப்பது அவசியம். அதுபோல்தான் வாழ்விலும்.

நடக்காதவற்றைக் கனவு காண்பது முட்டாள் தனம். நடக்கக்கூடியதை நடக்காதென ஒதுக்குவது அதை விட முட்டாள்தனம்.

கனடியப் பொருளாதார நிபுணர் ஸ்டீபன் லீகாக் தம் பேச்சில் ''அதிகம் செயல்பட முடிகிறவர் அதிகம் கனவு காண்பார்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

வாழ்வில் முன்னேறியவர்கள் எல்லோரினுள்ளும் இன்னமும் நிறைவேறாது இருக்கின்ற ஆயிரமாயிரம் கனவுகள் இருப்பதைக் காணலாம்.

வாழ்வின் வெற்றியானது எப்பொழுதுமே எதிர் பார்த்துக் காத்திருந்து முன் வாசல் வழியாகத்தான் வரும் என எண்ணலாகாது. பல வெற்றிகள் எம்மையும் அறியாமல் பக்கத் துணையான திட்டங்களூடாக வாழ்வின் பின்வாசல் வழியாக வந்து வெற்றி பெற்றுள்ளன.

''நீண்ட எதிர்பார்ப்புக்குப் பிறகு வந்து சேருவது நாம் எதிர்பாராத வடிவில் இருக்கும்'' என்றார் மார்க் ட்வைன்.

எனவே வாழ்வில் பிரதான திட்டங்களை மட்டும் நம்பியவராக இருக்காமல் பல பக்கத் துணைத் திட்டங்களும் வகுக்கப்பட்டு வருவதனூடாக வெற்றியை ஏதேனும் ஒரு வழியில் ஈட்டிவிடலாம்.

வெற்றிக்குத் தடையான காரணிகளில் பிரதானமானது நேர்மறை மனோபாவம். முடியாதவற்றை முடியும் என எண்ண வைப்பது வெற்றி தரும் மனோபாவத்தின் சிறப்பாகும்.

''வாழ்வில் ஒருவர் எய்தியுள்ள நிலையை வைத்து வெற்றியை மதிப்பிட மாட்டேன். அந்நிலையை எய்தும் வரை அவர் வென்ற தடைகளை வைத்தே அவர் வெற்றியை மதிப்பிடுவேன்'' என்றார் அமெரிக்கக் கல்வியாளரான வாஷிங்டன் புக்கர்.

வெற்றியின் தடைக்கற்களில் வேறொன்று அச்சம். பயம் எம்மை வெற்றிப் படிகளில் ஏறிச்செல்ல விடாது தடுக்கிறது.

இத்தாலியைச் சேர்ந்த பாடகர் என்றிகோ காருஸோ தன் இசை நிகழ்ச்சியொன்றின் முன்பாக மேடையின் பின்னால் தனியே சென்று ''என்னை விட்டு விடு, என்னை விட்டுப் போய்விடு'' என முணுமுணுப் பதை அவதானித்த ஒருவர் அதுபற்றி அவரிடம் விசாரித்தபோது அவர் கூறிய பதில் :

''என்னில் உள்ள ஒரு 'நான்' பாட விரும்புகிறது. இன்னொரு 'நான்' உன்னால் முடியாது எனப் பய முறுத்துகிறது. அதனைத்தான் விரட்டி வெளியேற்றிக் கொண்டிருக்கிறேன்'' என்பதாகும்.

மனிதர்கள் ஒவ்வொருவருள்ளும் ஏதேனும் ஒரு இனம்புரியாத அச்சம் அவர்கள் முயற்சிகளுக்குத் தடை யாக இருப்பதைக் காணலாம். இதனை இனம் கண்டு சுய சந்தேகத்தைக் களைந்து அச்சத்தைத் துணிச்சலாக மாற்றுபவன் வாழ்வில் வெற்றி பெறுகின்றான்.

அச்சத்தை வெல்ல துணிவு வேண்டும். எம் இலக்கை வெற்றிகரமாக எட்டுவதற்கான மன உருவை வடிவமைக்க வேண்டும்.

பயங்களைப் பட்டியலிட்டு உரக்கப் படித்து விட்டுப் பின் கிழித்துக் குப்பைத் தொட்டிகளில் போடு வதும், பயத்தை விரட்டும் வசனங்களை உரக்கச் சொல் வதும் பயத்தைப் போக்கிட உதவும் சில எளிய வழி முறைகள்.

வெற்றியின் நீண்ட காலக் குறிக்கோள்களை நிறைவேற்றப் பல இடைக்காலக் குறிக்கோள்களைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். இடைக்காலக் குறிக்கோள்களில் அக்கறையற்று இருப்பவர்கள் நீண்ட காலக் குறிக்கோள்களை எய்திட முடியாது போகின்ற னர். இடைக்காலக் குறிக்கோள்களுக்கும் காலக்கெடு இருக்க வேண்டும்.

''எவர் தம் குறிக்கோள்களில் உறுதியாக இருக் கிறாரோ அவரே வாழ்வை வெற்றிகரமாக்குகிறவர்'' என்கின்றார் செசில் பி. டிமிலி என்ற அமெரிக்கத் திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமானவர்.

வாழ்வில் வெற்றிகளைக் குவிப்பதைவிடச் சிறந்தது வாழ்வையே வெற்றிகரமாக வாழ்வது. வாழ் வில் வெற்றியை எவரும் காணலாம். ஆனால் வாழ் வையே வெற்றிகரமாக்க மனத்தின் மகத்தான சக்தியைப் பயன்படுத்துவது அவசியமாகிறது.

சோம்பல், அச்சம், கடந்தகாலத் தவறுகள் போன்றன செய்கின்ற செயல்களுக்கு இடையூறுகளாகத் திகழ்ந்து இயக்கவிசையை மனிதருள் பலவீனமடையச் செய்கின்றன. மனத்தின் செயலூக்கச் சக்தியை வளர்ப் பதன் விளைவாகவே செயலூடான வெற்றிகளை பெற முடியும். ❋

*(அடுத்த இதழில் முடிவுறும்)*

## அட்டையை அலங்கரிக்கும் சான்றோர்கள்

19-7-2007 இல் 60 ஆம் நினைவு நாள் காணும் **சுவாமி விபுலாநந்தர்**

2-8-2007 இல் 95 ஆம் பிறந்த நாள் காணும் தவத்திரு **தனிநாயக அடிகளார்**

ஆன்மீகப் பெரியார் **கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

75 ஆம் அகவையில் பவள விழா காணும் பேராசிரியர் **கா. சிவத்தம்பி**

முதலாவது சித்தர் நெறி மாநாட்டைப் பெருவெற்றியுடன் நடத்திக் காட்டிய தவயோகி **தங்கராசா அடிகளார்** மற்றும் அருள்செல்வர் **அப்னா நாகப்பன்**

பிரித்தானியாவில் நேஹம் நகர் மன்றத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்தியப் பெண்மணி திருமதி **ஓமனா கங்காதரன்**

# பொட்டு

**ஜோ. ஜெஸ்ரின், யாழ்ப்பாணம்**

**கெட்டி மேளம் ஓய்ந்த பின்னே
மெட்டி உடைந்ததம்மா
கட்டியவன் போனநாளில்
பட்டுச்சேலை வெளுத்ததம்மா
நட்ட விதை நலமாகப்
பொட்டு வைக்கின்றாள் அவள்
தன் பிள்ளைக்கு**

**விதவை என்று வாலிபம்
கதவை மூடுவதில்லை அவள்
விதியதை மாற்றியமைக்கும்
மறுமணங்கள் மலர்வதுமிலை
ஆண்களாகிய எம்மவர்க்கே
ஒரு நீதி அதுவே
பெண்களுக்கு அநீதி**

**துணைவராகிச் சிலநாளில்
துப்பாக்கிச் சன்னம்
பரிசாய்க் கிடைத்தது
அபலை வாழ்வு இருண்டுபோனது
அப்பா என்றழைக்கும் பிள்ளை
இப்போ கதறுகின்றது
சுட்டவன் யார் என்று**

**போர் தந்த வடுக்கள்
போதுமம்மா
வேரோடு வேகும்நிலை
போதுமம்மா
மார்பை நோக்கும் மனிதர்களே
அவள் மனத்தை பார்க்கமாட்டீரோ**

**இந்நிலை வேறார்க்கும்
வந்திடக்கூடாது
வந்திடிலோ அந்தத் தாய்மனம்
நொந்திடக்கூடாது
வெந்த புண்ணில் வேல்தைக்கும்
வெட்டிப்பேச்சுகள் வேண்டா
விட்டு விடுங்கள் அவள் வாழ;
பெண் பாவம் பொல்லாதது.**


இலண்டன்
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE
299-303 Ley street, Ilford IGI 4BN Tel: 0208 9118934
www.selvavinayagar.org.uk, E.mail: info@sriselvavinayagar.org.uk
ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின்
மஹோற்சவ விழாவும்
நான்காவது
தேர்த் திருவிழாவும்
13-07-07 - 08-08-07


திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி ஆலயம்
3ம் வருட தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்
அம்பிகை அடியார்களே,
வட இலண்டன் என்பீல்ட் பகுதியில் அருளாட்சி செய்யும் அன்னை நாகபூசணி அம்பாள் திருவருளால் 3ம் வருட தேர்த்திருவிழா நடைபெறவுள்ளதால் அடியார்கள் விரத மிருந்து விழாவை தரிசித்து அம்பாளின் அருள்பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.
விநாயகர் திருவிழா 01-07-2007 ஞாயிறு
கொடியேற்றம் 02-07-2007 திங்கள் பகல் 12.00 மணி
தேர்த்திருவிழா 15-07-2007 ஞாயிறு காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
தீர்த்தம் 16-07-2007 திங்கள் காலை 11.00 மணி முதல் பஞ்சமூர்த்தி பவனி
பூங்காவனம் 17-07-2007 செவ்வாய் 1009 சங்காபிசேகம்
வைரவர்மடை பிராயச்சித்தம் 18-07-2007 புதன்
அனைவரும் வருக அன்னையின் அருள் பெறுக.
இங்ஙனம்
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
Enfield Nagapooshani Ambaal Temple
3rd Annual Festival
Chariot Procession
On 15th July 2007 (Sunday)
தேர்த்திருவிழா
தேர்த்திருவிழா அன்னதானம்
Ruby Catering Services, Chennai Spice
தேர்த்திருவிழா தாகசாந்தி
Niru Europe Ltd. & Caaveri Europe Ltd.
61- 65 Church Lane, Edmonton, London N9 9PZ Tel: 020 8884 3333 web: www.ambaal.org

சிறுகதை

# போனஸ்

## தாரா


'சடார்' என்று ரிசீவரைத் தொலைபேசி மீது ஓங்கி அடித்தது போன்று வைத்தான். ட்ரவல்ஸ் மனேச்சர் சிவா. முகம் கடுகடுப்பாக இருந்தது. பிற்பகல் 2.00 மணியிருக்கும். ட்ரவல்ஸ் அனட் ட்ரான்ஸ்போட் அலுவலகத்தின் அடுத்த மூலையிலிருந்த ட்ரான் ஸ்போட் மனேச்சர் கஜனின் மேசையருகே சென்று சிறிது சத்தமாகச் சொன்னான். ''பெரிய முதலாளி இண்டைக்கு வரட்டாம். நான் இப்பவே வீட்டுக்குப் போய் உடுப்புகளை எடுத்துக்கொண்டு சொல்லிப் போட்டு வாறன்; இரண்டு பேரும் போவம்.''

''நில் நானும் வாறன்.'' இது கஜன். அவனின் குரலில் சிறிது கலக்கம் தெரிந்தது. தொலைபேசி அழைப்பு முதலில் அவனுக்குதான் வந்திருந்தது. கொழும்பு முதலாளி சிவாவிடம் என்ன பேசினார் என்பது தெரியாது. கணக்குப் பதிவேடுகள் கொழும் புக்குக் கொண்டு செல்லப்படுவதற்காகப் பொதி செய்யப் பட்டு ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன. சிவா பின் ஆசனத்தில் இருக்க கஜன் மோட்டார் சைக்கிளை ஓட்டினான். முதலில் பருத்தித் துறை வீதிவழியாக இரு பாலைக்குச் சென்று சிவாவை இறக்கிவிட்டு கஜன் தனது உடுவில் வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

சிவா வீட்டில் தலை காட்டியதும் மனைவி ஆச் சரியப்பட்டாள். ஏனப்பா இந்த நேரம் வந்திட்டியள்... ''இல்லையப்பா கொழும்புவிலிருந்து கோல் வந்தது. பஸ் மனேச்சரையும் லொறி மனேச்சரையும் இரவு பஸ்சிலை வரட்டாம். புது வருசத்துக்குள்ளை கணக்கு வழக்குகள் பாத்து முடிக்கோணுமாம்''. அவசர அழைப் புக்கான காரணங்களில் அவனுக்கிருந்த சந்தேகத்தைக் காட்டிக்கொள்ளாமல் சொன்னான் சிவா. பிள்ளைகள் இருவருக்கும் வாங்கிவந்த இனிப்புகளை அவர்களிடம் கொடுத்துவிட்டுச் சிறிதும் தாமதிக்காமல் சிவா கிணற் றடிக்குச் சென்றான். குளித்தாலும் தண்ணீர்கூடக் குளிர் வதாக இல்லை. மோட்டார் சைக்கிளில் வரும் போது கஜன் கூறிய சொற்கள் சிவாவின் தலைக்குள் பூமியை வைத்துச் சுழற்றுவது போலிருந்தது.

''எங்கடை முதலாளிமார் பொல்லாத பம்மாத்துக்காரங்கள் அண்ணே. மாட்டி வைப்பாங்கள். நாட்டில் நாலும் நடக்குது. அப்பாவியர்தான் கவனமாக இருக்க வேணும். எனக்கெண்டால் சந்தேகமாயிருக்கு. இப்பிடி அவசரமா கூப்பிடுறத்துக்கு ஒரு அவசரமு மில்லை''.

அப்பா ஏன் இன்டைக்குக் கெதியாய் வந்தீங் கள்? திருவிழாவிற்குக் கூட்டிக்கொண்டு போகவோ? கிணற்றடிக்கு வந்த சுதனும் ஜானியும் பிறந்த மேனியுடன் கேட்டபடி நின்றனர். ''நீங்கள் அம்மா வோடை இருங்கோ. நான் இரண்டு மூன்று நாளையிலை வந்து கூட்டிக்கொண்டு போவன்! 'இரண்டு மூன்று நாள்கள்' என்ற சொற்கள் பெரிய முதலாளி தொலை பேசியில் சொன்ன சொற்கள்தானே. நம்பாத சொற் களைத்தான் சிவா பிள்ளைகளிடம் ஒப்புவித்தான்.



மனத்திலிருந்த சந்தேகத்திற்கு ஆதாரமில்லாத போது, அவன் தெரிந்த அளவுக்கு அதுவே உண்மையும் ஆகும்.

அவசர அவசரமாகச் சாப்பிட்டபடியே மனைவி யிடம் சொன்னான். ''நான் ஒரு 2, 3 நாள்களில் வந்திடு வேன்... இருக்கிற 500 ரூபாயோடை சமாளித்துப்பார். முக்கிய அலுவலெண்டபடியால்தான் பெரிய முதலாளி கூப்பிடுகிறார். வருசத்தோடை போனஸ் குடுக்கிற தெண்டு ஒரு கதையிருக்கு....'' கமலா இடைமறித்தாள். ''கிடைச்சால் கொழும்பிலை பிள்ளையளுக்கு நல்ல சட்டையாய் வாங்கியாங்கோ''

இருபாலை சந்தி பஸ்தரிப்பு நிலையத்தை நோக்கி சிவா நடக்கும்போது ஐந்து மணி கடந்து விட்டது. அப்போதும் மனம் ஒரு சந்தேகத்தைச் சுற்றிச் சுற்றியே வட்டமிட்டது. பெரிய முதலாளிக்கு ஏற்பட்டி ருந்த ''அவசரம்'' என்னவாயிருக்கும்? சரியாக 7.05. கொழும்பு பஸ் புறப்படுகிறது. இருவரும் அருகருகான ஆசனங்களில் அமர்ந்தபடி பேசிக் கொண்டு சென்றனர். ''கணக்கு முடிக்கிற அவசரமாக்கும். கொழும்பிலை யுனியன்காரன் போனஸ் கேட்டுக் குழப்புறதாக்கும் சிவா அப்பாவித்தனமாகக் கூறினான். இது கஜனுக்குச் சினத்தைக் கொடுத்தது. ''என்ன அண்ணே உங்கட கதை. எங்கடை நம்பி கம்பனி போனஸ் கொடுக்கிறதாவது. சம்பளமே நேரங்காலத்துக்குக் கொடுத்திருக்க மாட்டாங் கள். எக்கவுண்டன் வேலையை விட்டுப் போயிருப் பான். எங்களை வைச்சு வேலையை முடிக்க பார்க்கிறார் களாக்கும்!

''இல்லை கஜன்! கணக்கு வழக்கு பார்க்கிற தெண்டு தானே முதலாளி சொன்னவர்!'' சிவா சாதகமாகச் சொன்னான். ''ஒருவேளை கணக்காயும் இருக்கும். இல்லாட்டி வழக்காயும் இருக்கும்!'' முன்னெச்சரிக்கை யோடு கூறியது போல் கஜன் சொன்னான்.

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் பஸ் சென்று நிற்கும்போது விடியற்காலை 5.00 மணி, சேறும் சகதி யும் அடித்துக்கிடந்த பஸ்சுகளுக்கு இடையே ஒரு பள பள கார் வந்து நின்றது. அதிலிருந்து கொழும்பு முதலாளியின் சாரதி பாலா இறங்கிவந்தான். ''அண்ணை வாங்கோ முதலாளி கூட்டிவரச் சொன்னார். சிரித்த முகத்துடன் பாலா கூறவும் சிவா முதலில் சென்று காரில் ஏறிக் கொண்டான். கஜனைப் பார்த்துப் பாத்தியா எங்கடை ''பொஸ்'' நாங்கள் கதைச்ச மாதிரியில்லை. கஜனை எச்சரிப்பது போல இருந்தது. வார்த்தைகள்.

காருக்குள் பாலா இடைக்கிடை பேச்சுக் கொடுத்துச் சுக நலம் விசாரித்தான். முதலாளி அவசர மாக அழைத்தது ஏன் என்ற விடயத்தைப் பாலாவிடம் கேட்டு அறியும் ஆவலுடன் இருவரும் கதை கொடுத் தனர். ஆயினும் பாலா அதிகம் பேசி ஆள்களைக் குழப் பாமல் அடக்கமாகப் பேசினான் போலிருந்தது. அவனறி யாமல் முதலாளி ஒரு சிறு இரகசியத்தையேனும் வைத் திருப்பதென்பது நடவாத காரியம். பாலா இறுக்கமாக இருந்துகொண்டான்.

அவனிடமிருந்து மற்றயவர் இரகசியம் எதனை யாவது அறிவதென்பது அதனை விடவும் முடியாத காரியம். காருக்குள் இருந்து இரண்டு மானேச்சர் களுக்குக் கீழேயும் சாரதியாக இருந்தவனான பாலா அளவோடுதான் பேசினான். அதற்குள் பொறளை சந்தியும் அடுத்து முதலாளி வீடும் வந்துவிட்டது. ஒரு ஆட்கடத்தல் முயற்சி ஒருவாறு ஒப்பேறிவிட்டதாகப் பாலாவின் அடிமனத்தில் சிறு கீறல் விழுந்திருக்கலாம்.

கஜனும் சிவாவும் உட்கார வைக்கப்பட்டனர். தேனீர் வழங்கப்பட்டது. அந்த விடியற்காலையில் சூடான தேனீர் உற்சாகமாயிருந்தது. காரை விடவும் வீடு அதிகம் பளபளப்பாகவும் இருந்தது. சிறிது நேரத்தில் பெரிய முதலாளி நித்திரையிலிருந்து எழுந்து வந்தார். நடையில் ஓர் தள்ளாட்டம் தெரிந்தது. முதல் நாள் இரவு ஏதேனும் கலகலப்பு இருந்திருக்கலாம் என்று இருவரும் ஊகித்துக் கொண்டனர். மதிப்புக் கொடுத்துப் பேசுவதில் வல்லவரான பெரிய முதலாளி சுகம் விசாரித்தார். ''அண்ணே... குளிச்சுச் சாப்பிட்டுப் போங்கோ, அவங் களுக்கு எங்கடை கணக்குகள் விளங்குதில்லையாம். நீங்களெண்டால் இங்கிலீசிலை கதைச்சு விளங்கப் படுத்துவியள், 9.00 மணிக்கு வரச்சொன்னவையள்'' என்று இரத்தினச் சுருக்கமாகப் பேசினார். பின் பாலாவைப் பார்த்து ''இவையளை அங்கை கொண்டு போய் இறக்கிவிட வேணும்... தேவைப்பட்டால் பேந்து போய் ஏத்தி வரலாம்'' என்றார். முதலாளியின் கரிசனையும் பக்குவமும் மானேச்சர்களின் மனங்களில் பெரிதும் பாராட்டைப் பெற்றன. பாலா ''ஓம் சேர்'' என்றான் ஒரு சிறு சிரிப்புடன், மீண்டும் போய் அவர்களை ஏற்றி வரும் தேவை ஏற்படாது என்பது அவனுக்கு ஓரளவு தெரிந்திருந்தது போலும்.

சரியாக 9.00. மணி பளபள கார் சென்று நின்ற போது அது பொலிஸ் நிலையமாக இருந்தது. மனங் களில் முதலாளியின் ''அவசர அழைப்பு'' ஏற்படுத்திய சந்தேகங்கள் சற்று வலுவடைந்தன. அதனை வெளிக் காட்டாமல் சிவா கேட்டான், 'என்ன பாலா உது பொலிஸ் நிலையமெல்லோ?' 'ஓம் உங்கை தான் சின்ன முதலாளியும் இருக்கிறார், இன்னும் கணக்குச் சரி வரேல்லையாம்!' பாலாவின் கடைசிச் சொற்கள் சிலேடையாக இருந்தன, மனங்களில் பரபரப்புடன் முதலில் சிவாவும் பின்னே கஜனும் உள்ளே சென்றனர். இருவரின் கைகளிலும் கணக்குப் புத்தகங்களும் பற்றுச் சீட்டுப் புத்தகங்களும் அடுக்கப்பட்டு இருந்தன. இருவரும் உள்ளே செல்ல கார் புறப்பட்டுச் சென்று மறைந்தது. ''நாங்கள் சங்கர் ட்ரவல்ஸ் இலிருந்து வரு கிறோம். அழைத்தீர்களாமே'' என்று அங்கிருந்த பொலிஸ் அதிகாரியிடம் கூறியதும் அவர் உசாரடைந் தார். நீங்கள் யார் என அவர் மீண்டும் கேட்க, ''நாங்கள் பிராந்திய அலுவலக மானேச்சர்கள். கணக்குப் புத்தகங் களைக் காண்பிக்க வந்திருக்கிறோம்.'' அழகான ஆங் கிலத்தில் பேசிய அவர்களுக்கு மனத்திற் பெருமையாக இருந்தது. ஆங்கிலம் தெரியாத முதலாளி தம்மையே நம்பியிருப்பதாக அவர்களது நினைப்பு.

அதிகாரி தொலைபேசி மூலம் உள்ளேயிருந்த நிலையப் பொறுப்பு அதிகாரியொருவருடன் பேசி விட்டு, 'சரி நீங்க மேல்மாடிக்குப் போகலாம்' என்றார். எதிர்பாராத நிகழ்வுகளின் வரவேற்பை ஏற்று ஒவ் வொருபடியாக ஏறிச்சென்ற அவர்களின் மனங்களில் ஆயிரம் கேள்விகள். எதிரே ஒரு பொலிஸ் அதிகாரி தூரத்தில் நின்றபடி கைகளை அசைத்து அழைப்பது தெரிந்தது. இருபுறமும் வரிசையான பல அறைகளைக் கடந்து அந்த ஒடுக்கமான ஓடையால் கடைசி அறை யினுள் சென்றபோது அங்கு அந்த அதிகாரியைத் தவிர வேறு எவருமில்லை.

''நாங்கள் கணக்குக் காட்ட வந்திருக்கிறோம்'' என்று ஆங்கிலத்தில் கூறியபோது ''சங்கர் ட்ரவல்ஸ் தானே'' என்று உறுமிய அந்த அதிகாரி அவர்களை மேற்கொண்டு பேச விடவேயில்லை, பொலிஸ்காரர் களின் வழமையான கடும் தொனியில் ஆரம்பித்தார் அவர். ''நீங்கள் என்ன கணக்குக் காட்டுறது? நாங்கள் தான் உங்கடைக் கணக்குப் பார்க்கிறது. குண்டுதாங் அனுப்புறது. கொழும்பிலை வெடிக்கிறது. பொய் சொன்னா 18 மாதம் இங்கைதான் இருக்கிறது. தப்ப மாட்டீங்க தெரியுதா'' எச்சரித்துவிட்டுக் கதவை அடித்துச் சாத்திக் கொண்டு நடந்தார் அவர்.

அந்த மேசை மீது இரண்டு பொல்லாங் கட்டைகள் கிடந்தன. ஆர்ப்பாட்டங்கள் கலவரங்களின் போது பொலிஸார் கைகளில் இருப்பவை என அடை யாளங் காண்பது கஷ்டமானதல்ல. மேசைக்காலில் ஒரு நாய் கட்டும் சங்கிலி மட்டும் கட்டப்பட்டிருந்தது. ஒரு வித அமைதி, இருவரும் ஒருவரையொருவர் பார்த்த னர். பேச்சு வரவில்லை. கஜன் பதற்றத்திற்கு மத்தியில் பொக்கற்றிலிருந்த சிகரெட் பைகற்றை எடுத்தான். தீப்பெட்டி இல்லை. இருப்பதற்குக் கதிரையேதுமில்லை. ஒரே மௌனம், அமைதி, பீதி. அடுத்து என்ன நடக்கப் போகிறது? குண்டு வீச்சு விமானங்கள் ஒரு இடத்தைக் குறிவைத்து வட்டம் சுற்றிக் கொண்டு நிற்கும் போது ஏற்படும் உணர்வுகள் ஒரு புறம் தோன்றின. பெரிய அதிகாரி வரும் டொக்... டொக்... சத்தம் கேட்டது. வெறுமனே சாத்தியிருந்த கதவைப் படார் என்று திறந்த போது அதிகாரி எந்தளவு பெரியவர் என்பதும் புரிந்து விட்டது. வாட்டசாட்டமான அந்த அதிகாரியின் கண்களில் முதலில் பட்டது கஜனின் கையிலிருந்த சிகரெட் பெட்டிதான். அவர் திடீரெனப் பதற்றமடைந்த வரானார். ''அந்தப் பெட்டிக்கைக் குண்டு இருக்குதா? அங்கை போடுடா... யாழ்ப்பாணத்திலிருந்து குண்டு அனுப்புறது... இஞ்சை வந்து சிகரட் குடிக்கிறது'' பொரிந்து தள்ளினார்.

அன்று ஆரம்பித்த விசாரணைகள் சரியா.. 30 நாள்கள் முடிய முடிவுற்றன. அதுவரை அவர்கள் சூரிய

னைப் பார்க்க முடியவில்லை. ஒரே அறைக்குள்தான் எல்லாம். தினமும் காலை 9.00 மணிக்கு விசாரணை அதிகாரி வருவார். மாலை 6.00 மணிக்குப் போவார். நின்றபடியேதான் பதில் சொல்ல வேண்டும். பொது வாகச் சுற்றிச்சுற்றி ஒரே கேள்விக்குத்தான் ஒவ்வொரு நாளும் பதில். இப்படியே 30 நாள்கள் ஓடி முடிவடைந் தன. அன்று ஒரு திடீர் அறிவித்தல் வந்தது. அவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு ஒரே புளுகம், சூரியனைப் பார்க்கலாம். தாடி சவரம் செய்ய லாம், சிகரட் குடிக்கலாம் குளிக்கலாம்... விடுதலை! அப்பப்பா... விடுதலை! பெரிய அதிகாரி வந்தார், அன்று மலர்ச்சியான முகம், வழமைக்கு மாறாக மதிப் பான வார்த்தை. தனது குளிரூட்டப்பட்ட அறைக்கு அழைத்துச் சென்றார். தேனீர் வரவழைத்துக் கொடுத் தார், ''நீங்கள்தான் உங்கட கம்பனி லொறியில குண்டு அனுப்புறதெண்டு உங்கட முதலாளி சொல்லுறது, உங்கள பார்த்தா மதிப்பான ஆட்களா கிடக்கு, பென்சன் காரர். உங்களுக்கு வேலை செய்ய வேற கம்பனி கிடைக்கல்லையா?'' நன்றாகவே சிரித்தார். பின்பு முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு ''உங்கட முதலா ளியை அடைக்கிறது. நீங்கள் போறது'' என்றார்.

''நன்றி ஐயா'' இருவரும் ஒரே குரலில் ஒரு மாதமாக வளர்ந்த தாடியும் மீசையும், திடீரென்று விடு தலை கிடைத்ததை நம்பவும் முடியவில்லை. வீதியில் இறங்கிப் பார்த்தபோது அந்தக் கொழும்பு அப்படியே தான் கிடந்தது. எப்படி எப்படியோ மாறிவிட்டிருக் கும் என்று ஏனோ அவர்கள் நம்பியிருந்தனர். இன்னு மொரு தடவை பார்க்கக் கிடைத்த வாய்ப்பை நம்புவது கடினமாயிருந்தது. நாங்கள் உயிருடன் இருக்கிறோம். கொழும்பு வீதிகளில் நடக்கிறோம் என்று தமக்குத்தாமே கூறிக் கொண்டனர். பல வருடங்களுக்குப் பின் கொழும்பு நகரை மீண்டும் பார்ப்பவர்கள் போல இருந்தது அவர்களுக்கு. முதலில் தாடியை வழிக் கலாமா? பியர் குடிக்கலாமா? என்பதைத் தீர்மானிக்கத் தெரியாமல் ஒரு அந்தரம். அதிகம் குடிப்பழக்கமில்லா தவர்களுக்குக் கூட அப்படி ஒரு அவசரம், தமது விடுதலையைப் பெரிய எடுப்பில் கொண்டாட வேண்டும் என்பது போல் ஒரு மன உந்தல். நடந்தபடி பேசினர். பேசிக்கொண்டே நடந்தனர். ''கஜன் நீ ஒரு கரி நாக்கன்! கணக்கில்லை வழக்குத்தான் இருக்கும் என்றாய். அப்படியேதான் நடந்திருக்கு, நம்ம முதலாளியின்டை சகவாசம் இனிமேலும் வேண்டாம். நேரை ஊருக்குப் போவம்'' என்றான் சிவா. 3 வருடம் பழகிப் புரிந்து கொண்டதை விடவும் இப்போ அதிகம் புரிந்துகொள்ள முடிந்ததை அவர்கள் பேச்சு உணர்த்தியது

''கையிலை காசுமில்லை, இந்த மாதம் சம்பளமு மில்லை, இனி வேலையுமில்லை, ஒரு மாதம் குளிக்கவு மில்லை, சொந்தக்காரன் வீட்டுக்குப் போய் மானங் கெடக்கூடாது. வேற வழியில்லை. முதலாளியினர் வீட்டுக்குக் கடைசித் தடவையாகப் போவம் சிவா. அவ ரோடை உள்ள கணக்கை முதல்லை முடிப்பம்!' இது கஜன்.

குடித்துவிட்டு முதலாளி முன் தோன்றும் துணிவு இன்றுதான் அவர்களுக்கு வந்தது. பொறளை சந்தி கடந்துவிட்டது. அதோ வீடு இரவு 8.00 மணியாகி இருந்தது. சங்கர் முதலாளி அந்தப் பளபள காரின் மேல் இரண்டு கைகளையும் அகல விரித்துத் தன்னைச் சாய்த்துக்கொண்டு வீதியைப் பார்த்தபடி உல்லாசமாக நின்றார். அந்த நேரத்திற்குரிய வழமையான கலகலப் பும் அவரிடம் இருந்தது. சிறிது அதிகமாகக் குடித்தவர் போலவும் தெரிந்தது. வீட்டின் மின் விளக்குகள் அத்தனையும் போடப்பட்டிருந்தன.

சங்கர் முதலாளி இவர்கள் அன்று விடுதலை ஆகிறார்கள் என்பதை வேறு வழிகளில் அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் அவ்வாறு காட்டிக்கொள்ளவில்லை. 'வாருங்கோ கஜன் அண்ணை சிவா அண்ணை!' என்று ஆரவாரமாக அவர் வாயிலிருந்து அழைப்பு வந்தது. ''நாங்கள் சும்மா இருக்கேலை தெரியுமோ? நீங்கள் பிள்ளை குட்டிக்காரர். அலுவல் பார்த்துதான் வெளி யிலை எடுத்த நாங்கள். உங்களை கெம்பனி கைவிடாது! அர்த்தமே இல்லாத வார்த்தைகளை உள்ளத்தடுமாற்றத் தால் உதடுகள் தடுமாறக் கூறினார். பதிலில் தூர நோக்கு இருப்பதும் தொனித்தது. அன்று மானேச்சர்மாரும் கூட மது அருந்தியிருந்ததையும் அவதானித்துக் கொண்டு தானும் அவதானமாகப் பேசினார்.

கஜன் சிலேடையாகப் பேசினான் ''நீங்கள் செய்தது எல்லாத்திற்கும் நன்றி முதலாளி. இதைச் சொல்லிப் போட்டுப் போகத்தான் வந்த நாங்கள், வாறம்'' வார்த்தைகள் கொஞ்சம் கறாராக இருந்ததைப் பற்றி அவர் அதிகமாக ஆச்சரியம் அடைந்த தாகத் தெரியவில்லை 'எல்லாத்துக்கும் நன்றி' என்ற வார்த்தைகள் ஏனோ அவரைச் சுட்டன. 'கொஞ்சம் நில்லுங்கோ தம்பியவை' என்றபடி மகனை அழைத்து, 'இவையளுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்துவிடு' என்றார். உள்ளே சென்று வேகமா திரும்பிய மகன் நீட்டிய சில மயில் தாள்களை எண்ணாமல் பெற்றுக் கொண்டவர்கள் புறப்பட்டனர். ''தலைக்கு வந்தது தலைப்பாவோடைப் போட்டுது'' என்று முணுமுணுத்த படி சங்கர் வீதியைப் பார்த்தபடியே நின்றார். தான் சொன்னவற்றை அவர்கள் செவிகளில் போட்டுக் கொள்ளவில்லை என்று தெரிந்தது என்றாலும் அவருக்குப் பெரும் ஆறுதலும் இருந்தது. இரவு பஸ் யாழ்ப்பாணம் நோக்கி விரைந்தது. பிள்ளைகளுக்கு வாங்கிய றம்புட்டான் மங்குஸ்தான் பழங்களில் பிள்ளைகளின் முகங்கள் தெரிந்தன. உறக்கத்திற்கு இடையிடையே இருவரும் பேசிக்கொண்டு சென்றனர்.

''வாய் திறந்தால் பொய்தான் சொரியிது. பணம் புரளுறதாலை தலையைச் சுற்றுங்கள் எல்லா ஆட்டமும் கொஞ்சக் காலத்துக்குத்தான்'' இது கஜன். ''கணக்குப் புத்தகங்கள் அங்கைதான் கிடக்குது. இனி ஆறதை கணக்கைப் பார்க்க போறாங்களோ தெரியலை''... இது சிவா.

சிவாவும் கஜனும் வெறும் பென்சன்காரர் களாகவே யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் கால் வைத்தார்கள். சில நாள்கள் கழிய மீண்டும் சந்தித் தார்கள். சந்திப்பைத் தூண்டியது பத்திரிகைச் செய்தி தான். கலகலப்பாக இருந்தது. ''அப்பாவி ஊழியர்கள் விடுதலை! முதலாளி கைது, சதி அம்பலம்''!

உண்மையில் கற்பனை.

*

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

## இலக்கை நிர்ணயிப்பதில் உத்வேகம்

வடலூர் இராமலிங்க அடிகளார் ''பசித்திரு, தனித்திரு, விழித்திரு'' என்றார். அவர் சொல்லிய 'பசித்திரு' என்பது அறிவுப் பசியைக் குறிக்கும். அரை வயிற்றோடு இரு; முழுவதும் உண்டு விடாதே என்பதையும் குறிக்கும்.

ஒரு மனிதனின் ஆளுமையில் (personality) அவனுடைய உடல்ரீதியான காரணிகளும் பங்கு வகிக்கின்றன என்று நினைக்கிறேன்.

நிரம்பிய வயிறு ஒருவித சோர்வினையும், பரபரப்பற்ற நிலையையுமே தருகிறது. ஆனால் பசி ஒருவித அக்னியை வயிற்றில் வைத்து, புலன்களைக் கூர்மையாக்குகிறது. (அளவு மீறிய பசி புலன்களை மந்தமாக்கும் என்பதும் உண்மை).

அதேபோல எந்த விஷயத்திலும் ஒரு திருப்தி என்பது வளர்ச்சியைக் கட்டுப்படுத்திவிடும். வளர்ச்சி வேண்டுமாயின் அதற்குப் பசி (தாகம்) வேண்டும். அந்த வளர்ச்சிப் பசியை, முயற்சிப் பசியை நாம்தாம் நம்மிடம் தூண்டிக்கொள்ளவேண்டும்.

இந்திய சுதந்திரம் என்பது 1947-க்கு முன்பு இருந்த பலரின் வாழ்க்கை லட்சியம். அதை நோக்கியே அவர்களின் நடவடிக்கைகள் எல்லாம் இருந்தன. தெளிவான இலக்கு, தெளிவான முயற்சிகள் இரண்டுமே இருந்தன.

அவர்கள் அனைவரும் ஆகஸ்டு 15, 1947 அன்று தங்கள் இலக்கினை அடைந்தார்கள். அவர்கள் பசியும் அடங்கியாயிற்று. அடுத்து என்ன? திருப்தியும், கொண்டாட்டமும், அடுத்தது?

மீண்டும் பசியை உண்டாக்கினால்தான் வளர்ச்சி உண்டு அல்லவா? என்ன பசியை உண்டாக்கலாம் எனச் சிந்தித்தார்கள்.

தன்னிறைவு!

அதற்கு விவசாயப் புரட்சி, தொழில் வளர்ச்சி.

அதற்கு அனைவருக்கும் அடிப்படை வாழ்க்கை வசதிகள்.

அதற்குக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கல்வி.

எனப் புதிய பசிகள் கண்டுபிடிக்கப்பட்டு, இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு ஓடிக்கொண்டிருக்கிறது பாரதத்தின் வளர்ச்சிச் சக்கரம்.

ஆக சாதனைகளுக்கும், வளர்ச்சிக்கும், இலக்குகளை அடைவதற்கும் ஒரு உத்வேகம் ('Urge') தேவை. Fire in the belly என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே அந்த அக்னி அடி வயிற்றில் எழும்ப வேண்டும்.

### 10/90 இரகசியம்

அது என்ன இரகசிம்? அதுவும் 10/90 என்று!

நமக்கு வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகள் 10 சதவிகிதம் என்றால், அதனால் ஏற்படும் தாக்கங்கள் (நாம் ஏற்படுத்திக் கொள்வது) 90 ஆகலாம். அதாவது தாக்கங்கள் மிகமிக அதிக அளவு.

இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்:

ஒரு இளைஞனைப் பார்த்து மற்றொருவன் சொல்லுகிறான், ''நீ மட்டும் மீசை வச்ச ஆம்பிளையா இருந்தா, என் மேல கை வையிடா பார்ப்போம்!''

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்த இளைஞனுக்குள் ஒரு வேகம். அவனுள் ஒரு இரசாயன மாற்றம். அவன் ரத்தம் சூடேறுகிறது. பதற்றம் அடைகிறான். அருகில் இருந்த பாட்டிலை எடுத்து உடைத்து, சொன்னவனைக் குத்துகிறான். அதனால் சிறைக்குப் போகிறான்.

இந்தச் சம்பவத்தில் அந்த இளைஞனுக்கு நிகழ்ந்ததும் உள்ளது, அதனால் அவன் நிகழ்த்தியதும் உள்ளது. அவனுக்கு நிகழ்ந்தது, அவனைப் பார்த்து 'நீ மட்டும் மீசை வச்ச ஆம்பளையா' என்ற வார்த்தைகள். அவன் ஜெயிலுக்குப் போனதில் இந்த வார்த்தைகள். எத்தனை சதவிகிதம் காரணமாக அமைந்தன? அவை வெறும் 10 சதவிகிதம்தான் காரணம். அந்த வார்த்தைகளை அவன் கேட்டதும் நிகழ்த்தியது, சொன்னவனைப் பாட்டிலை உடைத்துக் குத்தியது ஆகும். அவன் ஜெயிலுக்குப் போனதில் இரண்டாவது நிகழ்ச்சியின் தாக்கம் எவ்வளவு? அது 90 சதவிகிதம் காரணம் ஆகும்.

ஒரு ஆக்ஷன் மற்றும் அதற்கான ரியாக்ஷன் தான் இவை. ஆக்ஷன் வெளியிலிருந்து வருகிறது. ரியாக்ஷன் நம்மிடமிருந்து வருகிறது. அத்தகைய பதில் நடவடிக்கையை நம்மால் கட்டுப்படுத்த இயலும். அதிகப்படுத்தவும் முடியும்.

இதே 10/90 இரகசியத்தைப் பலர் தங்களது வாழ்க்கையை முன்னேற்றிக்கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாம் முன்பு பார்த்த உதாரணங்களில் ''உனக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தைகூடப் பேச

வராது'' என்பது நிகழ்ந்தது (10 சதவிகிதம்). அதற்குப் பிறகு ஆண்டுகள் பல முயற்சித்து ஆங்கிலத்தில் MBA மாணவர்களுக்குப் பாடம் எடுக்கும் அளவு வளர்ச்சி அடைந்தது, நிகழ்த்தியது (90 சதவிகிதம்) அல்லவா! ''உன் ஷூவை கடித்துத் தின்பேன்'' நிகழ்ந்தது. இதுவரை 10 படங்கள் எடுத்தது, நிகழ்த்தியது.

அத்துணைப் பேருக்கும், அத்துணை விஷயங்களிலும் இப்படி 10% நிகழ வாய்ப்பில்லை. அவர்களாக 10 சதவிகிதத்தினைக் கண்டுபிடித்து 90 சதவிகிதத்தினையும் உருவாக்கிக்கொள்ள வேண்டும். குடும்ப சூழ்நிலையைக் கண்ட ஒரு ஐடிஐ படித்த தொழிலாளியின் மகன் அவனாகக் கடிதுழைத்து +2வில் நல்ல மதிப்பெண் பெற்றுப் பின் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து தன் தம்பியையும் படிக்க வைத்தான். அவன் வாழ்க்கைச் சூழலில் இருந்து அவனாக எடுத்துக் கொண்ட 10% உதவியது.

ஆக, இலக்கு நிர்ணயிப்பதில் உத்வேகம் காட்டுவோம்.

நம்மால் முடியாதது ஏதுமல்ல. செய்து காட்டுவோம்.

# 3. உங்கள் வெற்றிக்குத் திட்டமிடல்

## இலக்கினை நிர்ணயித்த பின்பு...

ஆயிற்று! இலக்குகள் நிர்ணயம் செய்தாயிற்று. சிலர் இத்தோடு விட்டுவிடுகிறார்கள். ஏன் அப்படி நன்கு தொடங்கிய பின்பு முற்றுப்பெறாமல் போய் விடுகிறது? அதன்மேல் தொடர்ந்து கவனம் இல்லாமல் போவதுதான் அதற்குக் காரணம். இன்றைய பரபரப்பு உலகில், பலவும் வந்து நம்மீது, நம் சிந்தனை மீது மோதுகின்றன. அவற்றில் இருந்து மீண்டு, நம் இலக்குகள்/லட்சியங்கள் மீது கவனம் செலுத்துவது கடினமாகிறது.

ஆனால், நம் இலக்குகள் மிக மிக அவசியமானவை அல்லவா? அவற்றை நினைவில் நிறுத்த என்ன செய்யலாம்? நம்முடைய கவனம் அவற்றிலிருந்து சிதறாமல் இருக்க என்ன செய்யலாம்?

அவற்றை எழுத வேண்டும்.

முதலில் அதனை உங்கள் நாட்குறிப்பில் (டைரி) எழுதுங்கள். பெரும்பாலும், நமது இலக்குகள் வெளிக்காட்டிக் கொள்ளக் கூடியதாகவே இருக்கவேண்டும். சில இரகசியமானவையாகவும் இருக்கலாம்.

எழுதுங்கள். உங்கள் இலட்சியத்தை ஒருமுறை இருமுறை அல்ல, பல முறை எழுதுங்கள். எழுதியதை சத்தமாக வாய்விட்டுப் படியுங்கள். அழகாக, பெரிதாக எழுதி உங்கள் கண்களில் அடிக்கடிபடும் இடங்களில் எல்லாம் எழுதியவற்றை அட்டைகளில் ஒட்டித் தொங்க விடுங்கள். நீங்கள் தினம் அமரும் மேஜை கண்ணாடிக்குக் கீழ்; உங்கள் மணிபர்சில், உங்கள் முகம் பார்க்கும் கண்ணாடிக்கு மேல், இப்படி எங்கு வேண்டுமானாலும் வையுங்கள். இலட்சியத்தை வெளிப்படையாக எழுத முடியவில்லையா? பரவாயில்லை. அதற்கு அந்த இலட்சியத்திற்கு ஒரு சின்னத்தை உருவாக்குங்கள்.

மருத்துவராக விருப்பமா? வரையுங்கள், ஒரு ஊசிபோடும் சிரிஞ்சையோ, ஸ்டெத்தாஸ் கோப்பையோ. அதைப் பார்த்ததும் உங்கள் இலட்சியம்/இலக்கு நினைவுக்கு வரவேண்டும். சிந்தனையும் அதன் பின்னேயே நிற்கவேண்டும்.

அதுமட்டும் போதுமா? போதாது.

மேலும் உங்கள் இலக்கினை அடைவதுபோல, அடைந்துவிட்டதுபோலக் கற்பனை செய்யுங்கள். அதன் இனிமையை, சந்தோஷத்தை உணர முற்படுங்கள்.

இவ்வாறு செய்வதால், உங்களால், இலக்கை அடைவதை, அதன் பெருமைகளை யோசிக்க இயலும். அதனை அடிக்கடி செய்யுங்கள். அதற்கு இந்தச் சின்னங்கள் / எழுதி வைத்த வாக்கியங்கள் பெரிதும் உதவும்.

சிலர் இன்னும் ஒரு படி மேலே போய், தங்கள் இலக்கினைப் பொதுவில், நான்கு பேர் இருக்கும்போது வேண்டுமென்றே வெளிப்படுத்துவார்கள். இதற்கு Commitment in public என்று பெயர். நாலு பேர் மத்தியில் சொல்லிவிடுவதால் இலக்கினை அடையா விட்டால், மற்றவர் என்ன நினைக்கக்கூடும் என்ற நினைப்பே, பயமே இலக்கை அடைய உந்தும், தூண்டும். ❋

*(தொடரும்)*

## கோவில் திருப்பணி வேண்டுகோள்!

தமிழகத்தில் மேட்டுப்பாளையம் காவல் நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ள ஸ்ரீ வேணுகுல பண்டரி நாதசாமி கோவிலின் கட்டடம் அண்மையில் இடிந்து விட்டமையால் கடந்த 60 ஆண்டுகளாக நடைபெற்று வந்த பஜனைகளைத் தொடரமுடியாத நிலை தோன்றி யுள்ளது.

ரூபாய் ஐந்து இலட்சம் செலவில் கோவில் திருப்பணிகளை மேற்கொள்ள திருப்பணிக் குழுவினர் முயன்று வருகின்றனர். ஆர்வமுள்ள ஆன்மீக அன்பர்கள் தாங்கள் விரும்பிய தொகையை நன்கொடையாக அனுப்பி வைத்துத் திருப்பணிக்கு உதவி எம்பெருமான் பண்டரி நாதர் திருவருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஸ்ரீ வேணுகுல பண்டரி பஜனை சங்கம்,
327, கிருஷ்ணன் கோவில் வீதி,
மேட்டுப்பாளையம்-641 301, கோவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| **மாணிக்கம்** | **ஜெயராம ராமானுஜம்** | **சண்முகம்** |
| தலைவர் | உப தலைவர் | செயலாளர் |

# தமிழென்னுந் தாயே!

புலவர் வெற்றியழகன்

*எடுப்பு*

வள்ளுவரைத் தந்ததனால்
தமிழென்னுந் தாயே!
வாழுகின்றாய் புகழினிலே
வானளாவி நீயே! -வள்ளுவரைத்

*உடனெடுப்பு*

தொல்காப்பி யரைத்தந்து
பாதுகாப்பைப் பெற்றாய்!
தொல்தமிழே! கல்பின்றித்
தூய்மையினை யுற்றாய்! -வள்ளுவரைத்

*முடிப்புகள்*

பத்துப்பாட் டெட்டுத்தொகை
பதினெண் கீழ்க்கணக்கு
சத்துள்ள நூலெல்லாஞ்
சிறப்பன்றோ உனக்கு? - வள்ளுவரைத்

நலம்பொலியும் அகம்புறமும்
நாலடியுந் தந்தாய்!
சிலம்பும்மணி மேகலையில்
சிந்தாமணியில் நின்றாய்! -வள்ளுவரைத்

கண்ணாக உயிராகக்
கருத்தினிலே நின்றாய்!
எண்ணற்ற மொழிகளினை
ஏற்றத்தால் வென்றாய்! -வள்ளுவரைத்

# புறத்தே தள்ளு!

காரை சுந்தரம் பிள்ளை, திருப்பரங்குன்றம்

போராடும் தமிழினமே போராடு தமிழ்
கோடரிக் காம்புகளை எதிர்த்தே நில்லு.
ஊராரின் பணத்தினிலே வாழ எண்ணும் - இந்த
எளியோரை எதிர்த்துமே நீ போராடு.
சீரோடும் சிறப்போடும் வாழ்வதற்காய் - ஈழம்
சிந்திடும் குருதிதன்னை எண்ணாமலே
தீராத ஆசையுடன் திருடும் இந்தத்
திருடர்களை எதிர்த்துமே போராடு.

கண்ணியமாய் வாழ்வோரின் கடமைதன்னைக்
கலைத்திட நினைப்போரைச் சாய்த்திடவும்
மண்ணெல்லாம் நல்லதமிழ் பரவிடவும் தமிழ்
மாசற்ற இனமொன்றைப் பெறுவதற்கும்
உண்ணியாய் இருந்திடும் ஊனத் தன்மை
உலகைவிட்டுப் போக்கிடவும் பொசுக்கிடவும்
எண்ணமொன்றை உன்நெஞ்சில் பொறித்து வைத்தே
என்றென்றும் எதிர்த்து நின்று போராடு.

பெண்ணிற்காய் அடிபட்டார் கொலைகள் செய்தார்
பெரியவன்யார் என்பதற்காய் மோதிக் கொண்டார்
உன்னினத்தைப் பயமுறுத்தி உழைக்காமல்
ஊனச்சதை வளர்ப்பதையே பெருமை என்றார்
அந்நியாயத்தை எதிர்த்து நிற்கும் வீரர் அங்கே
ஆலமர விருட்சமாகப் பெருமை சேர்க்க(ப்)
புண்ணியங்கள் இவையனைத்தும் பொசுக்குதற்காய்ப்
புகுந்திட்ட கூட்டத்தை நீ புறத்தே தள்ளு.

# ஆங்கிலத்தில் தேவாரப் பதிகங்கள் ஒலிநாடா

ஈழத்தில் வரலாற்றுப் பெருமை பெற்ற திருக்கோணமலை திருக்கேதீஸ்வரம் ஆகிய இரு தலங்கள் பற்றி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் பாடிய தேவாரப்பதிகங்கள் ஒலி நாடாக்களாக வெளிவந்துள்ளன. பாடியவர் திருத்தணி சுவாமிநாதன். இவ்விரு தலங்களும் இன்று இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருப்பதனால் பக்தர்களால் சுதந்திரமாகச் சென்று வழிபட முடியாத நிலை. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இந்த வரலாற்று பெருமை பெற்ற ஆலயங்கள் பற்றித் திருவருளாய் பாடிய தேவாரப் பாடல்கள் இலகுவாக கேட்டு ஆலயத்தைப் பற்றி தினமும் நினைவு கூர இந்த ஒலிநாடா பயனள்ளதாகும்.

இந்த நல்ல முயற்சியை மேற்கொண்ட சைவ அபிமானி திரு. வைரமுத்து அவர்கள், இரு ஆலயங்களின் மகிமையை இங்கு வாழ் மக்கள் அறிந்துகொள்ள




ஆங்கிலத்திலும் வெளியீடு செய்துள்ளார். இந்த அருமையான ஒலிநாடாவைப் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

Kumaran's, 136 Hoe Street, Walthamstow, London E17 4QR

# MARKANDAN & CO

## SOLICITORS & ESTATE AGENTS

***We also Specialise in ....***

* ஒப்பந்தத் தகராறுகள்
* நுகர்வோர் பிரச்சினைகள்
* மரண சாசனம்
* உறுதி தயாரித்தல்
* மதுபான அனுமதிகள்
* கட்டட அனுமதிகள்
* Cafe அனுமதிகள்
* Bankruptcy Problems
* House / Flat Purchase or Sale
* Remortgages
* Right to Buy
* Highly skilled migration
* Power of Attorney
* Sponsorship for UK Visas
* Work Permit application
* Civil Litigation

**No Win** விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால்
**No Fee** நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

**01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரத்தானிய அரசாங்கச் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள், விவாக விண்ணப்பங்கள், அகதி விண்ணப்பங்கள், 14, 10 அல்லது 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள், பிரித்தானிய பிரஜாவுரிமை, வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

### கடன் சுமையில் இருக்கிறீர்களா?

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No. Win - No Fee (Subject to assessment)

* அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தர முயல்வோம்.
No Win - No Fee (Subject to assessment)

* வரிச்சுமைகளைக் குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்.
No Win - No Fee (Subject to assessment)

* நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிகக் கட்டணத்தை அறவிட்டுள்ளதா? உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSA யின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win - No Fee (Subject to assessment)

**எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும். ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை. வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தித் தரப்படும்.**

**எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...**



**# 845 Romford, Manor Park, London, E12 6JY**

**Tel: 020 8514 8188, Fax: 020 8514 8303.**

**Web: www.markandan-solicitors.com**

**E-mail: mm@markandan-solicitors.com**

# இதயம் நிறைந்த இல்லத்தரசியே!

**கே. டபிள்யூ. செல்வராசா, இலண்டன்**

'ஒரு பாடல் நான் கேட்டேன் உன்பாசம் அதில் பார்த்தேன் - வாழ்க்கை என்று எதுவுமில்லை உந்தன் எந்தன் கதையாகும்'. என் மனைவி றெசலின்ட் அரிய மலர் இறந்து 28-05-2007 இல் ஒரு வருடம் முடிகிறது. 28-05-2006 அன்று அவரது பிறந்த நாள் (71 வயது பூர்த்தி செய்த அன்று). என் அருகிலேயே படுத்திருந்து காலை 7 மணி போல நான் பிறந்த நாள் வாழ்த்துக் கூற அவரை அணைத்தபோது அவரது உயிர் காலை 1 மணி 2 மணி போல் பிரிந்து விட்டதை அறிந்தேன். அவரது நல்ல குணத்திற்கும் பலருக்குச் செய்த சேவைக்கும் ஆசீர்வாதமாக அவருக்கு ஒரு நிமிடமாவது கணவனை, பிள்ளைகளை, பேரப் பிள்ளைகளை (14 பேர்) விட்டுப் போகிறேனே என்ற பாசம், கவலை, உடல் நோவு எதுவுமில்லாமல் அவரது ஆத்துமாவை இறைவன் எடுத்துக் கொண்டான். இறைவனுக்கு நன்றி. எழுத்தாளன் என்ற முறையில் என் மனைவிக்கு நான் இனிமேல் செய்யக் கூடிய கைமாறு, எங்கள் வாழ்க்கையில் சினிமாவும் அக் கால பாடல்களும் எங்கள் காதலை வளர்க்க, விவாகம் செய்ய, ஒருவருக்கொருவர் உற்ற துணையாக 50 + 5 வருட வாழ்க்கையை நடத்திச் செல்ல இறைவனின் சித்தத்துடன் எவ்விதம் உறுதுணையாக இருந்தன என்பதை வாசகர்களுக்குக் கூறுவதே.

இசையைப் பற்றி எழுதப்போனால் ஆயிரமாயிரம் பக்கங்கள் எழுதலாம். சுருக்கமாகக் கூறினால் இசை தெய்வீகமானது. உணர்வுக்கும் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஏன் ஆத்துமாவுக்கும் கூட இன்பத்தையும் அறிவையும் கொடுக்கிறது. இதனால்தான் அக்கால சங்கீதவித்துவான்கள் காதலுக்கு, பக்திக்கு, இன்பத்துக்கு, துன்பத்துக்கு, நோய்க்கு மருந்தாக ஏன் மழையைக் கூட பெய்விக்கலாம் என்றார்கள். (ராகம்-வர்ணம்) புலம் (காம் போதி) நாட்டியம் (நாட்டக்குறிஞ்சி) சோகம் இப்படி உணர்வுகளை வெளிப்படுத்தும் ராகங்களை படைத்து வைத்துள்ளார்கள். நம் எல்லாருடைய வாழ்க்கையில் பாடல் இசை உடலுக்கு உணவு தண்ணீர் போல் பயன்படுகிறது. சாரீரம் இருந்து விட்டால் நாமாகவே பாடி மகிழலாம்.

எனக்கு 10 வயதாயிருக்கும்போது நானும் அக்காவும் அத்தானும் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்கு வக்கியில் (Bugg) சென்றோம். 1945 இல் பஸ், கார் வசதிகள் இல்லை. இரவு வேளை வெளிக்கிட்டோம். 25 மைல் தூரம் போக வேண்டும். இரவு 12 - 1 மணி போல் வக்கி ஓட்டிச் சென்ற எனது அத்தான் என்னைப் பாட்டு படிக்கும்படி கூறினார். என் மூத்த மருமகன் (டி.இ. ஆனந்தராசா பின்னர்; ஐ.ஜி.பி. ஆக இருந்தவர்) என் மடியில் ஒரு வயதுக் குழந்தை. எனக்கு மாய்ச்சல் (சோம்பல்) காரணமாக நான் பாடவில்லை. அக்காவும் கூறினார். 'தம்பி! நித்திரை வருவதால் அத்தானுக்கு முளிப்பு வேண்டும், ஒரு பாட்டு பாடு!' என்று. அப்போதும் நான் பேசாமலிருக்க அத்தான் பிரம்பினால் எனக்கு ஒரு அடி அடித்தார். எனக்கு அழுகை வந்துவிட்டது. அழுது அழுது சாவித்திரி படத்தில் சாரதா ஆப்தே பாடிய 'விளையாடுவோம் வாருங்கள். பாங்கியாரே, ஆனந்தமாக (இடையிடையே விம்மினேன்) உல்லாசமுடன் விளை...' என்ற பாடலை அழுது அழுது படிக்க, அக்கா சிரிக்க, அத்தானும் பெரிய சத்தமாகச் சிரிக்க அவர் நித்திரை பறந்துவிட்டது.

சிறுவயதிலிருந்தே இரு குடும்பத்தாரும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் வந்து போவோம். 1951 இல் என் வீடு என் மனைவி படித்த ஜி.பி.எஸ்.க்கு முன்னாலிருந்தது. அடிக்கடி வந்து போவார். வீட்டுக்கு அவர் வந்து போகும் போது எங்கள் கிராமபோனில் லைலா மஜ்னு படத்தில் டி.ஆர். மகாலிங்கம் பாடிய 'பறந்து செல்லுதே என் பைங்கிளியதே பாசமெல்லாம் நெஞ்சில் கொண்டே பாலை மீதிலே' என்ற பாடலை றெகார்டரில் போட்டு விட்டு நான் ஒளிந்து விடுவேன். வீட்டிலிருக்கும் மற்றவர்களுக்கு இது தெரியாது.

ஒருநாள் பாடசாலையிலிருந்து எங்கள் வீட்டுக்கு இவர் வந்த போது இவரது தாய் தகப்பன் வீட்டுக்குப் பஸ்ஸில் ஏற்றிவிட்டு வரும்படி எங்கள் அத்தான் என்னிடம் கூறினார். கண்ணனைப் பிடித்து விதானை யார் வேலை கொடுத்தது போல் நானும் இவருடன் பஸ் நிலையம் வரை சென்றேன். முதலாளி படத்தில் எஸ்.எஸ். ராஜேந்திரன் பாடும் 'ஆத்தங்கரைத் தோப்பினிலே சிட்டுப்போல போற பெண்ணே' என்ற பாடல் போல நான் நெருங்கி உங்களிடம் ஒரு விடயம் பேச வேண்டுமென்றது 'ஐ லவ் யு' சொல்லப் போகிறேன் என்பதை ஊகித்துக் கொண்டு பாதையின் மறுபக்கம் பாய்ந்து சென்று விட்டார்.

என் மனைவி அரியமலர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு புகும் பரீட்சை சித்தியடைந்து அவரை வரும்படி அழைத்த கடிதத்தை 1954 இல் நான் அவர் வீட்டுக்குப் போனபோது காட்டினார். அவர் முன்னாலேயே அதை வாங்கிக் கிழித்தெறிந்து விட்டேன். எனக்கு மனைவி இல்லத்தரசியாக மட்டுமே இருக்க விருப்பம். இதனால் மனவருத்தமடைந்த அவர்ஒரு மாத காலம் என்னுடன் பேசாமல் ஊடல் கொண்டிருந்தார். அக்காலத்தில் இன்ஸ்பெக்டர் படத்தில் ஏ.எம்.

ராஜா பாடிய 'எண்ணும் போதிலே இதயம் போகுதே என்தன் வாழ்வில் அன்பு கொண்டால் துன்பமேதானா' என்ற பாடலையும் காதல் படத்தில் கண்டசாலா பாடிய 'நான் கொண்ட காதல் இவ்வாறு தான் நட்டாற்றில் பாழாய் போனதோ' போன்ற பாடல்களைப் பாடுவேன். இதையறிந்த அவர் தனது சகோதர சகோதரிகளில் ஐந்து பேரை நான் இருந்த இடத்துக்கு அனுப்பி என்னை உடனே வரும்படி அழைத்தார். அங்கு போனதும் 'இத்தனை காலம் பிரிந்ததை எண்ணி கண்ணீர்க் கடலில் குளிக்கவா' என்பது போல் இருந்தது அவர் முகம்.

என் மூத்த மகள் செல்வமலர் பிறந்த 2 வயது இருக்கும். என் தோளில் போட்டதும் 'நட' என்பாள். பின் 'ஏன் பிறந்தாய்' என்ற பாடலை பாடச் சொல்வாள். நானும் 'ஏன் பிறந்தாய் மகளே ஏன் பிறந்தாயோ இல்லையொரு பிள்ளை என்று ஏங்கியோர் பலர் இருக்க இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வமலரே' என்று படிப்பேன். இப்படி எங்கள் வாழ்க்கை முழுவதும் சினிமாப் பாடல்கள் தான்.



குடும்ப நண்பரின் பாசப்பிணைப்பில்செல்வராசாவும் அரியமலரும்

என் மனைவி கல்முனை ஜி.பி.எஸ். பாடசாலை ஹெட் கேல் (Head Girl) ஆகப் பலவருடம் கடமையாற்றி யதால் வீட்டிலும் Head Girl தான். நில் என்றால் நிற்க வேண்டும். நட என்றால் நடக்க வேண்டும். பிள்ளைகள் மட்டுமல்ல, நான் கூடத்தான். அவரும் நன்றாகப் பாட்டுப் பாடுவார். ஆனால் கிறிஸ்தவப் பாடல்கள் மட்டும் தான். Head Girl ஆக இருக்கும்போது கற்ற ஒழுக்கமாக இருக்கலாம். 'அழகே! அழகே பிரம்மனிடம் மனுக் கொடுக்கப் போயிருந்தேன் நீ என் மவைவியாக வேண்டுமென்று' என்று பாடினால் செல்லமாக 'கள்ளா! கள்ளா! என்று கூறுவார். நானும் 'என்னவளே அடி என்னவளே என் இதயத்தைத் தொலைத்து விட்டேன். எந்த இடம் அது தொலைந்த இடம் அந்த இடத்தையும் மறந்து விட்டேன்' என்று அவளை என் இதயத்தைத் திருடிய கள்ளியாகக் கூறி இருவரும் சிரிப்போம்.

என் மனைவி றெசலின் அரியமலர் ஆங்கிலம் பேச எழுத வாசிக்க நன்கு தெரிந்தவர். ஆனால் வீட்டிலும் வெளி யிலும் கூடிய அளவு தாய்மொழி தமிழையே பேசுவார். சிறு பிள்ளைகளுக்குக் குழந்தை வைத்தியம் செய்வதில் கைதேர்ந்தவர். பல சிறுவர்கள் உயிரைக் காப்பாற்றியிருக்கிறார். சமையல் கலையில் அவருக்கு நிகர் அவர் தான். ஏழைகள் பசிப்பவருக்கு உணவு கொடுத்து தன் வயிறு நிரம்பியது போல் திருப்தியடைவார். ஏழைகளுக்கு உடை முதல் எல்லா உதவியும் செய்வார்.

பிரித்தானியாவுக்கு வந்து 6 வருடம் முடிகிறது. ஒவ்வொரு இரவும் நான் 2, 3 பாடல்கள் அதில் 'எண்ணும் போதிலே' பாடலுடன் தொடங்க வேண்டும். அதன்பின் தான் என் மனைவி நித்திரை போவார். அவர் இறக்க ஒரு மாதத்திற்கு முன் அவரைப் பாடும்படி கூறினேன். 2, 3 கிறிஸ்தவப் பாடல்கள் பாடியது தான் எனக்குத் தெரியும். நித்திரை போய்விட்டேன். கானக் குயில் நடத்தும் யோகா தில்லைநாதனுடன் ஒரு நாள் தொலைபேசியில் கதைக்கும் போது 'பாடுங்கள் கேட்க கேட்க இனிமையா யிருக்கிறது' என்றார். 4, 5 பாடலுடன் மனைவியிடம் தொலைபேசியைக் கொடுத்தேன். 'நான் தான் அவரைப் பாட்டுப் பாடி நித்திரையாக்குவேன் என்று கூறினார்.

சென்ற வருடம் 2006 காதலர் தினத்தன்று தீபம் தொலைக்காட்சியில் சிவகாமி மகள் பேசினார். நானும் தொலைபேசி எடுத்த போது கிடைத்து விட்டது. 'ஒரு வார்த்தை கூற ஒரு வருடம் காத்திருந்தேன். என் மனைவி உடனே 'நீங்கள் ஒரு வருடமல்ல மூன்று வருடம் என் சம்மதம் பெற காத்திருந் தீர்கள்' என்றதும் பாடலை 'ஒரு வார்த்தை மூன்று வருடம் தயங்கி நின்றேன்' என்று சரத்குமார் பாடிய பாடலுடன் ஆரம்பித்து கணவன் மனைவியாகிய எங்களுக்கு காதலர் தினம் வருடத்துக்கு ஒருமுறையல்ல. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் காதலர் தினம் தான் என்றேன். சிவகாமி மகளும் சரிதான் என்றார்.

இப்படி சினிமா படம் பாடல் இவை எங்கள் வாழ்க்கையில் பெரும் பங்கை வகித்தது. மறுபடியும் படத்தில் கே.ஜே. ஜேசுதாஸ் பாடி 'கனவு காணும் வாழ்க்கை யாவும் கலைந்து போகும் கோலங்கள் துடுப்புக் கூட பாரம் என்று கரையைத் தேடும் ஓடங்கள்' என்ற பாடலுடன் முடிக்கிறேன். இது எங்கள் வாழ்க்கையைப் பிரதிபலித்தாலும் அதிகமாக எல்லா வாசகர்களும் (தம்பதிகளும்) தங்கள் வாழ்க்கையும் இதே போல் தான் இருக்கிறது என்று கூறலாம். இந்த வாழ்க்கைக்கும் நல்ல மனைவி கிடைத்ததற்கும் இறை வனுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். *

கதை நேரம் - 8

# நல்லதைக் காண்போமே!

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

ஒரு மன்னன் தனக்கென்று அமைத்துக் கொண்டிருந்த சிறிய காட்டில் பல மிருகங்களை வைத்துப் பராமரித்து வந்தான். எத்தனையோ மிருகங்கள், பறவைகள் அந்தக் காட்டில் இருந்தாலும், அவனுக்கு யானையின் மீது தனியான அன்பு இருந்தது. அதற்கு அதிக உணவு கொடுப்பது, அதனருகில் நிற்பது, தட்டிக் கொடுப்பது, அதன் மீது அமர்ந்து மகிழ்வாகப் பயணம் செய்வது போன்ற செயல்கள் மூலம் தன் அன்பினை வெளிப்படுத்தி வந்தான்.

மன்னனின் இந்தச் செயல்களைக் காணும் போதெல்லாம், மற்ற மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. பொறாமைத் தீயில் வெந்தன. அவற்றின் ஆதங்கங்களை அடிக்கடி அவை வெளிப்படுத்தின.

''உடலில் ஒரு புள்ளி உண்டா? கண்களைப் பார். எவ்வளவு சிறுத்துக் கிடக்கின்றன! துள்ளி ஓட முடியுமா? ஆனால் மன்னனுக்கு மட்டும் இந்த யானையின் மீது ஏக அன்பு!'' என்று புலம்பித் தள்ளியது மான்.

''பாதங்கள், உள்ளங்கைகள் என்றால் எவ்வளவு வலுவாக, உறுதியாக இருக்க வேண்டும்! அப்படியே போட்டு இழுத்தால் சதைபிய்த்துக் கொண்டு வருமளவுக்கு நகங்கள் பெரியதாக, வளைந்து இருக்க வேண்டும். ஆனால் யானைக்கு உள்ளங்கைகள் எங்கே இருக்கின்றன. பாதத்திற்கும் உள்ளங்கைக்கும் வேறுபாடே இல்லை. எழுந்துகூட நிற்க முடியாத விலங்குக்கு ஏன் இவ்வளவு மரியாதை!'' உறுமித் தள்ளியது கரடி.

''வால் என்றால் புதர் போல அடர்த்தியாக இருக்க வேண்டாமா? என்னுடைய வாலே, வால்தான்! என்ன அழகு! யானைக்கும் ஒரு வால் இருக்கிறதே... சகிக்கவில்லை!'' ஏளனக் குரலில் ஊளையிட்டது நரி.

''நான் எவ்வளவு பால் தருகிறேன்! அதைத் தினமும் குடித்துக் கொழுக்கும் மன்னனுக்குக் கொஞ்சம் கூட நன்றியில்லையே. யானை என்ன பாலா தருகிறது?'' என்று முணுமுணுத்தது பசு.

''காது என்றால் பெரியதாக இருக்க வேண்டும். எனக்கு மரியாதை தர எண்ணித்தான் மன்னன் வந்திருப்பான். ஆனால் எனக்கு முன் யானை வந்துவிட்டதால், எனக்குக் கிடைக்க வேண்டிய பலன் கொஞ்சத்தில் கை நழுவிப் போய்விட்டது'' என்று அங்கலாய்த்துக் கொண்டது கழுதை.

''கொம்பு என்றால் கம்பீரமாகத் தலைக்கு மேலே இருக்க வேண்டும். வாய்ப் பக்கத்திலிருக்கிற வளைந்த தந்தத்தைப் பார்த்துவிட்டு, கொம்பு என்று எண்ணிக் கொண்டு, தவறான அங்கீகாரத்தை யானைக்குக் கொடுத்து விட்டான் மன்னன்'' என்று ஒரு கணக்கைப் போட்டுப் பார்த்தது காட்டெருமை.

''ஒரு தோகை இருக்கிறதா? நடனமாடத் தெரியுமா? அல்லது பறக்கத்தான் முடியுமா? மயிலுக்குப் போர்வை கொடுத்து மரியாதை செய்த காலமெல்லாம் பேகனோடு போய்விட்டது. நம் பெருமை இவனுக்கு என்ன தெரியப் போகிறது!'' என்று வேதனைப்பட்டது மயில்.

இந்த மிருகங்களும், பறவைகளும் சந்திக்கும் போதெல்லாம் இதைத் தவிர வேறு பேச்சு பேசியதே இல்லை.

ஒருவருக்கு இருக்கக் கூடாத ஒரு சில குணங்கள் 'தான்' என்ற மமதையும், பொறாமை என்ற எதிர்மறை உணர்வும்.

மயிலுக்குத் தோகை கொடுத்திருப்பதாலேயே, அது உலகிலேயே சிறந்த பறவையாகிவிடாது! உறுதியான பாதங்களும், கை, கால் நகங்கள் இருப்பதாலேயே, கரடி மிருகங்களின் அரசனாகி விட முடியாது!

நம்மிடம் ஒரு சில திறமைகளிருப்பதாலேயே, நாம் அனைவரையும்விட உயர்ந்தவராகிவிட முடியாது! ஆனால், நம்மிடமுள்ள அந்தத் திறமையை வைத்துக் கொண்டு, அந்தத் துறையில் தனித்துவம் பெற முடியும்; அந்தத் துறையில் சாதனைகள் செய்து பெயர், புகழ், செல்வம் ஆகியவற்றினைப் பெறமுடியும். அதை விட்டுவிட்டு, மற்றவர்களை விடத் தாங்களே உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு திரிவதும், மற்றவர்களைக் கண்டு பொறாமைப்படுவதும், கேலி பேசுவதும் எந்த வகையிலும், ஒருவரை உயர்த்தாது. அநேகமாக இப்படியே செய்து கொண்டிருந்தால் அவர்கள் வாழ்க்கை இன்னும் கீழான நிலைக்கே சென்றுவிடும்.

ஓர் அலுவலகத்தில் அதிகாரி தன் கீழே பணிபுரிபவர்களுள் ஒரு சிலருக்குத் தனிச் சலுகைகள் அளிப்பதற்குச் சிறப்பான காரணங்கள் இருக்கலாம். அந்த ஒரு சிலரைக் கண்டு எள்ளி நகையாடிக் கேலி பேசுவதற்கு மாறாக அவர்களுடைய திறமையைப் பாராட்ட வேண்டும். அந்தத் தகுதிகளை வளர்த்துக் கொள்வதோடு, மேம்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அதுதான் உயர்வதற்கு வழி.

அந்த யானையின் மீது அமர்ந்துதான் மன்னன் வேட்டைக்குப் போயிருக்கிறான். சண்டைக்கும் போயிருக்கிறான். நகர்வலம் வருவதும் அதன்மேல்தான்! பல நேரங்களில் மன்னனின் உயிரைக் காத்ததும் அந்த யானைதான். மன்னனுக்குப் பெருமை சேர்ப்பதும் அந்த யானைதான்! அதுமட்டுமல்ல, அந்த யானை பெரியதாக இருப்பதால், அதற்கு உணவும் அதிகமாக அளித்தாக வேண்டிய கட்டாயம் இருந்தது.

என்னதான் இருந்தாலும் கரடியின் மீதும், மயில், மான் இவைகள் மீதும் அமர்ந்து மன்னன் பவனி வர முடியுமா? போர்க்காலங்களில் அவை மன்னனைக் காக்க முடியுமா? எனவே யானையை மன்னன் விரும்புவதில் வியப்பில்லையே!

ஆனால் தங்கள் திறமைகளைப் பெருக்கிக் கொண்டு, மன்னனின் பாராட்டைப் பெற அவை ஏன் முயற்சி செய்யக் கூடாது!

(தொடரும்)

# SRINIVASANS SOLICITORS

*169, Tooting High Street, London SW17 0SY*

## K. Chelva-Nayagam, L.L.B.,

***Solicitor***

*(former Principal of Nathan & Chelva)*

*Please contact him for all you legal matters in particular*



**Commercial & Residential**
**Conveyances**
**Family Proceedings**
**Civil Litigation**
**Immigration**



He always works for clients' interest & takes more care in dealing with his clients' matters

# *former Thana & Co Solicitors*

முன்னய Thana & Co Solicitors சட்ட நிறுவனம் தற்போது
Shahzads Solicitors & Estate Agents
என்ற நிறுவனத்துடன் இணைந்து
271, Hoe Street, Walthamstow, London E17 9PT
என்ற விலாசத்தில் இயங்குகிறது



**அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள்**
**மேன் முறையீடுகள்**
**சகல விதமான விசா நீடிப்பு விண்ணப்பங்கள்**
**10/14 வருட நீண்ட கால விண்ணப்பங்கள்**

**Property Sales & Conveyancing Under one Roof**

**Contact Mr. Thana 020 8521 4686 / 07976 660 635**

உ
சிவமயம்

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

## நடாத்தும்

# பத்தாவது சைவ மாநாடு



**மேன்மைகொள் சைவநீதி உலகெமெங்கும் பரவட்டும்**
**மாண்புநிறை தமிழர்களாய் - நம் மழலைகளும் வளரட்டும்.**



அன்பர்களே!
ஸ்ரீ கணபதி ஆலயம், விம்பிள்டன்
இலண்டன் அருள்மிகு சிவன் கோயில், லூயிசம்
ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், ஈலிங்
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம், ஸ்ரோன்லி
உயர் வாசல்குன்று ஆலயம், ஆச்சுவே



ஆகிய ஐந்து ஆலயங்கள் அங்கம் வகிக்கும் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் கடந்த ஒன்பது ஆண்டுகளாக வருடா வருடம் சைவ மாநாட்டை நடாத்தி வந்துள்ளது. அதன்படி இவ்வருடம் பத்தாவது ஆண்டு சைவ மாநாடு இறைவன் திருவருளுடன் சிறப்பாக நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

## "சைவத் திருத்தொண்டர்களும், சைவ சமயமும்"

என்னும் கருப்பொருளை மையமாக வைத்து



| | |
|---|---|
| 14.07.2007 | 15.07.2007 |
| சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| விம்பிள்டன் ஸ்ரீ கணபதி ஆலயத்திலும் | லூயிசம் சிவன் ஆலயத்திலும் |
| (125-133, EFFRA ROAD, WIMBLEDON LONDON SW19 8PU) | (4A CLARENDON RISE, LEWISHAM LONDON SE13 5ES) |

காலை 9.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரையும் இம்மாநாடு நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் ஆதீனங்களும், தமிழ்நாடு, ஈழம், மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஆகிய நாட்டுச் சைவ பிரமுகர்களும் கலந்து கொண்டு அருளுரையும் பேருரையும் வழங்குவார்கள்.



**மாநாட்டில் பங்குகொள்வோர் விவரம்:**

தவத்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகள்** பேரூர் ஆதீனம், கோவை.
தவத்திரு **குமாரசுவாமித்தம்பிரான்,** தருமபுரம் ஆதீனம், மயிலாடுதுறை.
தவத்திரு **திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** நல்லை ஆதீனம், யாழ்.
தவத்திரு **குமர குருபர சுவாமிகள்** மடாதிபதி, கௌமார மடாலயம், கோவை.
பழனி **எஸ். சன்முகசுந்தரம் தேசிகர்,** பழனி **ஜி.வெங்கடேஸ்வரன்** தேசிகர்
ஆசிய ஓதுவார் மூர்த்திகள் பண்ணிசை நிகழ்ச்சிகள் நடத்துவார்கள்.

மாநாட்டினை ஒட்டிய போட்டிகளில் கலந்து வெற்றியீட்டிய மாணவர்களது பேச்சுக்களும் இடம் பெறும்.

சைவ சமய மேம்பாட்டிற்காக இந் நாட்டில் அரும்பணியாற்றிய ஐந்து அறிஞர்களுக்கு "சமூக சீலர்" என்ற கௌரவப்பட்டம் வழங்கப்படும்.

குறிப்பு: இம் மாநட்டில் கலந்து சொற்பொழிவாற்ற விரும்புபவர்களும், கருத்தரங்கில் பங்கு கொள்ள விரும்பும் இளைஞர்களும் மாநாட்டுச் செயலாளருடன் உடனே தொடர்பு கொள்ளவும். மேலும் இம் மாநாட்டில் எல்லோரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

"வான் முகில் வழுது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்."


டாக்டர். சி.சோமசேகரம்
தலைவர்
க.ரங்கநாதன்
செயலாளர்
✆: 0208 998 1703
பொன். தெய்வேந்திரம்
பொருளாளர்